சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

இதழ் 33 1-15, நவம்பர், 1993. விலை 7/=



**எம்மவர்க்கு உண்டோ இணை!**

அன்னை மடிநீத்து அநுரா போய் டிங்கிரியின்
கன்னையிலே சேர்ந்ததுமோர் கதையாமோ - பின்னிரவில்
வீடுடைத்துப் பூந்து வெறியோடாட் கடத்தலிலே
ஈடுபடும் எம்மவர்க்கு முன்?

-ஈழமோகம்


# தலைநகரில்

# தமிழ் இளைஞர்கள் கடத்தல்

## நடுநிசியில் சிவிலுடை ஆயுதபாணிகள்

## வீட்டுக் கதவுகளை உடைத்துக் கைவரிசை

## தமிழ் இயக்கங்களுக்கும் பங்கு?



கல்கிசையில் கதவுடைத்து கடத்தப்பட்ட வீடு

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் திடீர் சுற்றிவளைப்புக்களும் வகைதொகையற்ற கைதுகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பொலிஸ், இராணுவம், கடற்படை என முப்படையினரும் வீதித்தடைச்சோதனை, வீடுபுகுந்து சோதித்தல் என்று சோதனைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தலைநகருக்குள் பயங்கரவாதிகளின் ஊடுருவல் என்ற பெயரில் நடக்கும் இந்தச் சோதனைகளின் போது ஆண், பெண் என்ற பாரபட்சமின்றி அனைத்துத் தமிழர்களும் இம்சிக்கப்படுகின்றனர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, தம்மை யார் என்று கூறிக்கொள்ளாமல் நடுநிசியில் வந்து குதிக்கும் சிவில் உடையணிந்த ஆயுதபாணிகளின் ஆட்கடத்தல்களும் ஆரம்பமாகியுள்ளன. கடத்திச் செல்லப்பட்டவர்கள் என்ன ஆனார்கள், எங்கு சிறைவைக்கப்பட்டுள்ளார்கள் என்ற விபரத்தை யாராலும் அறிந்து கொள்ளமுடிவதில்லை. படை அதிகாரிகள், அரசாங்கப் பொறுப்பதிகாரிகள் யாருக்கும் தெரியாது, நடத்தப்படும் இத்தகைய திடீர்க் கடத்தல்களின் சூத்திரதாரிகளாக அரச உயர்மட்டத்தினரும் இருப்பதாகவும், இந்நிகழ்ச்சிகளில் தமிழ் முன்னாள் விடுதலை இயக்கத்தினைச் சேர்ந்தவர்களும் பயன்படுத்தப்படுவதாகவும் தெரியவருகிறது.

கடந்த 14ம் திகதி ஜிந்துப்பிட்டியைச் சேர்ந்த பெருமாள் ஜெயக்குமார் என்பவர் ஓட்டோவில் செல்லும் போது காணாமல் போய்விட்டார் எனத் தெரியவருகிறது. இ.போ.ச பஸ்வண்டிகள், தனியார் பஸ் வண்டிகளில் இருந்து அனைத்து வாகனங்களும் இடைமறித்துச் சோதனை செய்யப்படுகிறது. அவற்றில் தமிழர்கள் இருக்கிறார்களா எனக் கேட்டு தனியாக இறக்கப்பட்டு வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டு அடையாள அட்டைகள் பார்க்கப்படுகின்றன. சந்தேகத்திற்கிடமானவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றனர். இவ்வாறு நடுத்தெருவில் அனாதரவாய்க் கைதாகும் நபர்கள் பற்றி முறைப்படி உறவினருக்கு அறிவிப்பதும் இல்லை. இதனால் ஒருவர் காணாமல் போய்விட்டால் கொழும்பிலுள்ள பொலிஸ் நிலையங்கள் யாவற்றிலும் சல்லடை போட்டு தேடுதல் வேண்டும்.

கைதாகுபவர்கள் மிகவும் சிறிய கூடுகளுக்குள்ளேயே அடைத்து வைக்கப்படுகின்றனர். சில பொலிஸ் நிலைய கூடுகளில் மலம், சலம் எல்லாம் உள்ளேயே. முழங்கால் மடித்துக் கூட இருக்க இடமில்லை. போதைவஸ்துக் குற்றவாளியிலிருந்து கிரிமினல்கள் வரை எல்லோரும் ஒரே கூண்டில்தான். ஒரு கோழிக் கூட்டைத் திறந்தால் என்ன நாற்றம் அடிக்குமோ அதே நாற்றத்தைத்தான் இந்தச் சிறைக் கூடுகளுக்குள்ளும் சுவாசிக்க முடியும்.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என்ற பாகுபாடுகளே கிடையாது. கர்ப்பிணித் தாய்மார்கள், ஆறு தொடக்கம் எட்டு மாதக் குழந்தையுடன் தாய் என்றெல்லாம் பொலிஸ் நிலையத்தில் அடைத்து வைக்கப்படுகின்றனர். ஆனால் ஸ்ரீலங்காவின் சட்டமோ 18வயதுக்குட்பட்டவர்களை கூண்டுக்குள் அடைக்க முடியாது எனவும் பெண்களை இரவு வேளைகளில் கைது செய்வதானால் பெண் பொலிஸாருடன் கூடச் சென்றே கைது செய்ய முடியும் எனவும் கூறுகின்றது. ஆனால் இதற்கு மாறாகப் பெண்கள் தமது இரவு உடைகளுடன் ஜீப் வண்டிகளில் அள்ளி ஏற்றப்படுகின்றனர். ஆக ஒருவர் கைதாகுவதற்குரிய தகைமையாக அவர் தமிழராக இருத்தல் மட்டுமே போதுமானது. இக் கைதுகளினால் ஏற்படும் சொல்லொனாத் துயரங்களின் மத்தியிலும் இவை சட்டபூர்வமானவை என்பதில் ஒரு மனத்திருப்தி. ஏனெனில் பொலிஸாரின் திட்டுதல்களுக்கு மத்தியிலும் கைது செய்யப்பட்டவர்களுக்கு சாப்பாடு கொடுக்கலாம்; கதைக்கலாம்; பார்க்கலாம்.

மேலதிக விபரங்கள் கடைசிப் பக்கத்தில்

## வவுனியாவில் தமிழ் முஸ்லீம் மக்களின் நிலவுரிமை பறிபோகிறதா?

(வவுனியாவிலிருந்து தம்பு திருநாவுக்கரசு)

மீளக்குடியமர்வு, புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் என்று இடம்பெறும் பலதரப்பட்ட நடவடிக்கைகளுக்கு மத்தியில் வவுனியாவில் இடம்பெற்றுவரும் பல்வேறு வீடமைப்பு வேலைத் திட்டங்கள் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் மூலமாக ஒருங்கிணைந்த உதவித் திட்டத்தின் கீழ் இடம்பெறும் நன்கொடை உதவிகளின் மூலமான வீடமைப்பு மற்றும் கடனுதவி மூலமான வீடமைப்பு என்ற இருவகையான வீடமைப்பு வேலைகளுக்கு அடுத்ததாக ஆயிரம் வீட்டுத் திட்டம் என்ற வீடமைப்புத் திட்டமும் நடைபெற்று வருகின்றது.

இந்த வீடமைப்பு லேலைத்திட்டங்கள் இடம்பெறும் விதம், அதன் போக்குகள் என்பவற்றை ஆழ்ந்து நோக்கிய போது ஆச்சரியமான சில விடயங்கள் தெரியவந்துள்ளன. 'தொட்டிலை ஆட்டிக்கொண்டே குழந்தையைக் கிள்ளிவிடும்' செயலுக்கு ஒத்ததான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவனவாகவே இதன் நிலைமைகள் காணப்படுகின்றன.

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகியதை அடுத்து இந்த மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 62,000 பேரில் 50%த்திற்கும் அதிகமானோர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். இவர்களுக்கான வீடமைப்பு வேலைத் திட்டங்கள் 92ம் ஆண்டு தொடக்கம் துரித கதியில் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டன.

வவுனியாவில் இடம்பெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவையை ஒட்டி 92ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட வேலைத் திட்ட இலக்கில் 40% நிறைவேற்றப்பட்டன. இதற்கென 27மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

ஆனால் இந்த ஆண்டின் நிலைமைகளோ ஏறுக்குமாறாக இருப்பதாகவே புள்ளிவிபரங்களை ஆதாரங்காட்டி அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

தேசிய வீடமைப்புத் திட்டத்தின் நன்கொடை உதவி மற்றும் கடனுதவி மூலமாகிய இரு வகையான வேலைத் திட்டங்களுக்கும் 93ம் ஆண்டிற்கு 69 மில்லியன் ரூபா தேவையென மதிப்பீட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டன. ஆனால், வேலைத் திட்டங்கள் ஆரம்பமாகி மாதங்கள் நகரத் தொடங்கியும் இதுவரையில் இந்த மாவட்டத்திற்கு அரசாங்கத்திடமிருந்து எட்டு மில்லியன் ரூபா மாத்திரமே வந்து கிடைத்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக ஒருங்கிணைந்த புனரமைப்பு உதவித் திட்டத்தின் கீழான வீடமைப்பு நன்கொடை நிதியை எதிர்பார்த்து நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் அலுவலகத்திற்கு கால்தேய நடந்த வண்ணம் உள்ளார்கள். ''தலைமையலுவலகத்திலிருந்து வீடமைப்புக்குரிய நிதி வந்து சேராதபடியால் வீடமைப்பு நன்கொடை நிதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது'' என்ற வாசகங்கள் அடங்கிய மட்டை பழுப்பு நிறமேறிய நிலையில் இந்த அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையில் நிரந்தரமாகவே தங்கியிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

69 மில்லியன் ரூபா வேலைத்திட்டம் நிதி அனுப்பி வைக்கப்படாத காரணத்தினால் பிசுபிசுத்ததையடுத்து இந்த ஆண்டின் இறுதிக் காலாண்டில் 350 புது வீடுகள் உட்பட 2500 வீடுகளுக்குத் தேவையான நிதி 20 மில்லியன் ரூபாவையாவது தந்து உதவுங்கள் என்று அதிகாரிகள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இந்த வேலைத்திட்டத்தை வருட இறுதிக்குள் செய்து முடிப்போம் என்று உறுதியாகத் தெரிவித்துள்ள போதிலும் நாலே நாலு மில்லியன் ரூபாவுக்கு மாத்திரமே பச்சைவிளக்கு சைகை கொழும்பிலிருந்து கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

வேலைத்திட்டங்களுக்குரிய நிதி வந்து சேராத கஷ்டம் ஒருபுறமிருக்க, மறுபக்கத்தில் கட்டிட நிர்மாண வேலைகளுக்குத் தேவையான பொருட்களின் விலையேற்றமும், மரந்தடிகளுக்கான நீண்ட கால தட்டுப்பாடும் மீளக் குடியமர்ந்தவர்களுக்கும் வீடமைப்புப் பகுதி அதிகாரிகளுக்கும் பெரிய தலையிடியைக் கொடுத்து வருகின்றன.

→ 2

## அரசு என்னதான் சொல்கிறது?

'சுவிஸி'லிருந்து 500 தமிழர்களை திருப்பி அனுப்ப சுவிற்சலாந்து அரசு முடிவு செய்திருப்பதாகவும், அவர்களை கொழும்பில் நலன்புரி அமைப்புகளின் உதவியுடன் வைத்துப் பாதுகாக்க வேண்டிய ஒழுங்குகளை அரசு செய்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுவிற்சலாந்து நாட்டுக்கு தனது நாட்டை விட்டு தமிழர்களை எப்படியாவது வெளியேற்றி விடவேண்டும் என்ற கவலை.
ஸ்ரீலங்கா அரசுக்கோ, இங்கு தமிழர்கள் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நிம்மதியாக வாழமுடியும் என்று எப்பாடுபட்டாவது நிரூபித்து விட வேண்டும் என்கிற கவலை.
ஆனால், தமிழ் மக்களுக்கோ உலகின் எந்த மூலையிலும் இருக்க முடியவில்லை என்கிற பிரச்சினை.
கொழும்பில் உள்ள அகதி முகாம்களில் இருந்து வந்த, பத்து ஆண்டுகளுக்கு மேலாக அகதி வாழ்க்கையையே வாழ்ந்து வந்த அகதிகளை மிரட்டிப் பலவந்தமாக பஸ்வண்டிகளில் ஏற்றி யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்கு விரட்டி வருகிறது அரசு. அரசின் சமூகநலத்துறை அமைச்சின் பிரதான கைங்கரியங்களாக இன்று இருப்பவை கொழும்பிலுள்ள அகதி முகாம்களை இழுத்து மூடுவதும், பலவந்தமாக திரும்பவும் யுத்தப் பிரதேசங்களுக்கே விரட்டுவதுமேயாகும்.

இந்த இலட்சணத்தில் சுவிஸ் அகதிகளை இங்கு அனுப்பும்படி கேட்கிறது ஸ்ரீலங்கா அரசு.ஏற்கனவே இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட அகதிகளின் நிலை இன்று ஊரறிந்த இரகசியமாகிவிட்டது.
யுத்தப் பிதேசத்திலுள்ளவர்கள் அனைவருமே புலிகள் என்று கூறியபடி தாக்குதல் நடாத்திவரும் அரசு, யுத்தத்தினால் அகதிகளானவர்களை திரும்பவும் அப் பிரதேசத்துக்கே விரட்டுகிறது. கொழும்பிலே யுத்தத்தால் இடம்பெயர்ந்து வந்து தமது சொந்தப் பணத்தில் வாடகை வீடுகளில் குடியிருப்பவர்களையும் பிறரையும் 'தகுந்த காரணமின்றி கொழும்பில் நிற்கிறார்கள்' என்ற பேரால் கைது செய்து இம்சிக்கின்றன ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்புப் படைகள்.

வடக்கு கிழக்கில் நடக்கும் யுத்தத்தை, வான்படையினரின் குண்டு வீச்சை தவிர வேறெந்த நியாயத்தைத்தான் கொழும்பு வந்திருக்கும் தமிழர்கள் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்கிறதோ இந்த அரசு?

உலகம் முழுவதிலுமுள்ள அகதிகளும் இங்கு திரும்பித்தான் வர வேண்டும்; அவர்கள் கொழும்பிலும் இருக்கக் கூடாது; வடக்குக் கிழக்கில் யுத்தத்தை நிறுத்தவும் இயலாது என்றால் அரசிடம் உண்மையில் இருக்கும் திட்டம்தான் என்ன?

எல்லாரும் வடக்குக் கிழக்கில் போய்நின்று தனிநாட்டுக்காக சண்டையிடுங்கள் என்று மறைமுகமாக சொல்கிறதா அது?
நல்லது; அதுதான் முடிவென்றால் அதை வெளிப்படையாகச் சொல்லி விடுங்கள்.
குறைந்தபட்சம் உண்மையைப் பேசிய பேராவது உங்களுக்கு மிஞ்சும்!

## மெல்லத் தமிழினி

## யாழ் மாணவர்களுக்கு படிப்பெதற்கு என்கிறதோ அரசு?

யாழ் பல்கலைக்கழகத்திற்கு நடப்பாண்டிற்கான புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்வது தொடர்பாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினர் விசித்திரமானதொரு முடிவுக்கு வந்துள்ளனர்!

1180 மாணவர்களை அனுமதிக்க முடியும் எனக் கோரிய யாழ் பல்கலைக் கழகத்திற்கு, இவ்வாண்டிற்கு இத்தொகையின் 1/3 பகுதி மாணவர்களையே சேர்க்க அனுமதித்துள்ளது இக்குழு.
யாழ் பல்கலைக் கழகம் தவிர்ந்த அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் அவை கேட்டுக் கொண்டதை விட அதிகளவு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும்படி பணித்துள்ள இக் குழு யாழ் பல்கலைக்கழகத்திற்கு மட்டும் இவ்வாறு செய்துள்ளது ஏன் என்று யாருக்கும் தெரியவில்லை.


அங்குள்ள மாணவர்களுக்கு பல்கலைக் கழகப் படிப்புத் தேவையில்லை என்று இக் குழு கருதுகிறது போலும்!
யுத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் எத்தனையோ அடிப்படை வசதிகளை இழந்த நிலையிலும் கஷ்டப்பட்டு படிக்கும் மாணவர்களுக்கு ஸ்ரீலங்கா காட்டியுள்ள கருணை இதுதான் போலும்.
ஒருவேளை பல்கலைக் கழகத்தில் புலிகளும் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்றுவிடுவார்கள் என்று இக்குழு அஞ்சுகிறதோ என்னவோ?
அல்லது, அங்குள்ளவர்கள் புலிகள்தானே அவர்களுக்குப் படிப்பெதற்கு என்று அது நினைக்கிறதோ?
அல்லது யாழ் பல்கலைக் கழகத்தை எதிர்காலத்தில் முற்றாக மூடிவிடுவதற்கு ஒரு ஒத்திகையாக இதைச் செய்கிறதோ?
ஒரு சின்ன யோசனை.
ஏன் இவ்வளவு கஷ்டம்.
மூன்று அல்லது நான்கு குண்டுகள் போதும்.
யாழ் பல்கலைக் கழகத்தை முற்றாகவே இல்லாதொழித்துவிடலாம்.
'அரசியல் சாணக்கியம் மிக்க' ஜனாதிபதி அவர்களிடம் மாண்புமிகு கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் அவர்கள் இது பற்றி கொஞ்சம் சிபாரிசு செய்தால் என்ன?
யாழ் வளாகத்தை முற்றாக இல்லாதொழித்து விடுவதற்கான உத்தரவை முப்படைகளின் தளபதியான அவர் சுற்றிவளைக்காமல் நேரடியாகவே செய்துவிட முடியுமல்லவா?

—•—

## உனக்கும் தமிழீழம் தேவையோ?

சுற்றிவளைப்புகளில் ஆயிரக்கணக்கில் சகட்டுமேனிக்கு அள்ளிச் செல்லப்படும் தமிழ் இளைஞர்களுக்கு பொலிஸ் நிலையக் கூடுகளில் புதிய அனுபவங்கள் பல கிடைக்கின்றன.

தனி ஒருவரை அல்து இருவரை தற்காலிகமாக காவல் வைக்கவென உருவாக்கப்பட்ட இக் கூடுகளில் 30,40 என்று இளைஞர்கள் அடைக்கப்படுகின்றனர்.



கூடுகளின் கம்பிகளைப் பிடித்தபடி வெளியே பார்த்துக் கொண்டு நிற்கும் இளைஞர்களிடம் யாழ்ப்பாணத் தமிழில் விசாரணைகள் நடக்கின்றன.
'டேய், நீ எந்தக் காம்ப்'
'----------'
'ஆருனக்கு ரெயினிங் தந்தது'
'----------'
'ஆளைக் கூட்டி வந்தால் அடையாளங் காட்டுவியா?'
'----------'
உனக்கும் தமிழீழம் தேவையோடா?'
'----------'

கைதிகளை விசாரிக்க இந்த மாஜி விடுதலை இயக்க வீரர்களுக்கு ஸ்ரீலங்கா அரசின் எந்தச் சட்டம் வழி செய்கிறது என்று கடவுளுக்குத் தான் வெளிச்சம்!

—•—

## ஐரோப்பிய தூதுக்குழுவுக்கு அமைச்சர் வைத்த பூ!

நிர்மாணத்துறை ராஜாங்க அமைச்சர் அவர்கள் அண்மையில் பாராளுமன்றத்தில் ஒரு அற்புதமான கருத்தைத் தெரிவித்துள்ளார்.
வடக்கு கிழக்கில் யுத்தம் நீடிப்பதற்கு காரணம் தமிழர்களின் தாயகக் கோட்பாடே என்பதுதான் அவரது கருத்து.
இந்த யுத்தத்துக்கு காரணம் பயங்கரவாதப் பிரச்சினையே என்ற ஜனாதிபதியின் கூற்றுக்கு இது முரணாக இருந்தாலும்கூட அமைச்சர் இதைத் தெரிவிக்க தயங்கவில்லை!
'வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகக் கோட்பாட்டினால்தான் யுத்தம் நடக்கிறது' என்பதை வெளிப்படையாக அவர் சொல்வதை நாம் பாராட்டத்தான் வேண்டும்.
ஆனால் ஒரு சிறு திருத்தம்.
முழு நாடும் சிங்களவர்களின் தாயகமே என்ற அரசின் கோட்பாட்டை எதிர்த்து வடக்கு கிழக்கு தமது தாயகம் என்று தமிழர்கள் சொல்வதால் தான் யுத்தம் நடக்கிறது என்று அவர் சொல்லியிருக்க வேண்டும்.

நாடு முழுவதுமே சிங்களவருக்கு சொந்தம் என்று அவர் கருதுவதால் தான் கொழும்பின் வளமான தொழில்துறைகளை எல்லாம் தமிழர்களே செய்கிறார்கள் என்றும், நாட்டின் உயர் பதவியை பாஸ்கரலிங்கமே வகிக்கிறார் என்றும் அவர் சொல்கிறார்!

தேசவழமைச் சட்டம் வடக்கில் சிங்களவர் காணி வாங்குவதை தடுக்கிறது என்று கத்துகிறார்.
வடக்கில் காணி வாங்குவதை தேசவழமைச் சட்டம் தடுப்பதாகக் கூறும் அமைச்சர் முதலில் தேசவழமைச் சட்டத்தை ஒருமுறை படித்துவிட்டுப் பேசுவது நல்லது.
ஐரோப்பிய தூதுக்குழுவுக்கு காதிலே பூ வைப்பது போல, பாராளுமன்றத்திலும் பேசி விட்டால் அது உண்மையாகி விடும் என்று அவர் நினைக்கிறார் போலும்!
போகட்டும்.
ஆனால் ஒன்று.
முழு நாடும் தமது என்று சொல்லும் வரை, நாம் இருக்கும் பகுதி எமதே என்ற குரலை ஒரு போதும் அடக்கி விட முடியாது.
பரம்பரை பரம்பரையாக யுத்தம் செய்தாலும் கூட.
அமைச்சர் இதைக் கொஞ்சம் விளங்கிக் கொள்வது நல்லது!

—•—

## வவுனியாவில்......

வீடமைப்புக்குத் தேவையான உபகரணங்களுக்குரிய தொகைக்குரிய காசோலைகள் கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனத்தின் பெயரில் சம்பந்தப்பட்ட பொதுமக்களுக்கு வழங்கப்படும், அவற்றை வவுனியாவில் உள்ள கட்டிடப் பொருட் கூட்டுத்தாபனக் கிளை மற்றும் மரக் கூட்டுத்தாபனக் கிளை என்பவற்றிற் கொடுத்து அவர்கள் தமக்குரிய வீடமைப்புப் பொருட்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

''வவுனியா மரக் கூட்டுத்தாபனத்தில் நான்கு மாத காலத்திற்கு மேலாக மரந்தடிகள் இல்லாததால் மரந்தடிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பொதுமக்களுக்கு கொடுத்த 60 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகைக்குரிய காசோலைகள் திரும்பி வந்துள்ளதாக'' வீடமைப்புத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனத்தில் ''அஸ்பெஸ்ரஸ் சீற்றுகள்'' கையிருப்பில் இல்லாத காரணத்தினால் (Roof level) கூரை மட்டமளவு கட்டி முடிக்கப்பட்ட பல வீடுகள் தற்போது பெய்து வரும் மழையில் அடிபட்டு பாதிக்கப்பட்டுள்ளன.
''இந்த விலையேற்றங்கள் எமது மதிப்பீட்டுத் திட்டங்கள் நிதி ஒதுக்கீடு என்பவற்றில் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளன. இதனால் பொதுமக்களும் பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் போது கஷ்டங்களை அனுபவிக்க நேரிடுகிறது'' என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆயிரம் வீட்டுத் திட்டத்தின் மூலம் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் வவுனியா பகுதியின் மூவின மக்களுக்கும் பெரிய நன்மையைச் செய்து விடமுடியும்; நல்ல கவர்ச்சியான வீட்டு வசதிகளை ஏற்படுத்தி விடமுடியும் என்று இராணுவ மற்றும் சிவில் அதிகாரிகள் சிலர் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.
வவுனியா மாவடடதைப் பொறுத்த மட்டில் விவசாயமும் 'சுதந்திரமான' கால் நடை வளர்ப்புமே இப்பகுதி மக்களின் ஜீவனோபாயமாக தொன்றுதொட்டு விளங்கி வருகின்றது. இதனடிப்படையில் குளங்களை (நீர்த் தேக்கங்களை) அடிநாதமாகக் கொண்டு கிராமங்கள் உருவாகியுள்ளன. இதனாற் தான் கிராமங்களின் பெயர்களும் ''குளம்'' என்பதை இறுதியாகக் கொண்டு ஈரப்பெரிய, குளம் (சிங்களக் கிராமம்) தாண்டிக்குளம், பேயாடி கூழாங்குளம், நாம்பன் குளம் என பெயர் சூட்டப்பட்டுள்ளன.

இந்த காணிப் பயன்பாட்டு முறைமையின் அடிப்படையிலேயே காணிகளும் காலங்காலமாக குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு வந்துள்ளன.

சர்வதேச ரீதியில் இலங்கைக்கும், மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும் பெரும் புகழை ஏற்படுத்திக் கொடுத்த இலங்கையின் வீடமைப்புத் திட்டத்தின் ஓர் அம்சமாகிய மாவட்ட ரீதியிலான ஆயிரம் வீட்டுத் திட்டம் இந்த மரபு வழி காணி பயன்பாட்டு நடைமுறையைத் தகர்த்தெறிந்து சிக்கல்களை உருவாக்கவே வந்துள்ளது போலவே தெரிகிறது.

வவுனியா மாவட்டத்தின் ஆயிரம் வீட்டுத் திட்டம் 4 இடங்களில் மொத்தமாக 660 ஏக்கர் நிலப்பரப்பில் அதுவும் ஏற்கனவே பொதுமக்களுக்கு நிர்வாக முறைமையின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செட்டிக்குளம் பிரதேசத்தில் 175 ஏக்கரும், வீரபுரத்தில் 350 ஏக்கரும், மகாறம்பைக்குளம்-ஸ்ரீராமபுரத்தில் 125 ஏக்கரும் தாண்டிக்குளம்-சாந்தசோலையில் 10ஏக்கரும் இந்த காணிகளின் உரிமையாளர்களில் பெருமளவானோர் பிரச்சினைகள் காரணமாக இடம் பெயர்ந்து உள்ளூர் அகதி முகாம்களிலும், இந்தியாவில் தமிழ்நாட்டிலுள்ள அகதி முகாம்களிலும் தஞ்சமடைந்துள்ள வேளையில் வீடுகள் அமைக்கப்படுவதற்காக சுவீகரிக்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர்களுக்குத் தெரியாத நிலையில் மட்டுமல்ல; இப்பகுதியில் உள்ள சிவில் நிர்வாக, குடியேற்ற, காணிப்பகுதி அதிகாரிகள் ஆகியோருக்கும் தெரியாத நிலையிலேயே சுவீகரிக்கப்பட்டன. இந்த வீடமைப்புத் திட்டம் குறித்து, இந்த மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்க மற்றும் எதிர்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூட எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அப்படியானால் இதை யார் செய்வது? யாரோ வந்து, யாருக்கோ சட்டரீதியாகக் கொடுத்த காணிகளை எடுத்து வீடுகளைக் கட்டி யார் யாருக்கோ கொடுக்கப் போகிறார்கள் என்ற எதுவுமே எவருக்கும் தெரியாத நிலைமையே நிலவுகின்றது.

மேலே கூறப்பட்ட கிராம வரிசையில் முறையே 60பேர்ச்(275வீடுகள்), 60பேர்ச்(400வீடுகள்), 40பேர்ச்(275வீடுகள்), 20பேர்ச்(50வீடுகள்) என ஆயிரம் வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வீட்டுத் திட்டத்தில் குடியமர்த்தப்படும் குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்காக இதன் அயலில் உள்ள(ஏற்கனவே விவசாய தேவைகளுக்காக சட்டப்படி வழங்கப்பட்டுள்ள) 5 அல்லது அதற்கு மேற்பட்ட ஏக்கர் விஸ்தீரணமுள்ள தனியாரது விவசாயக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட உள்ளனவாம். இதற்காக இத்தகைய காணிகளின் விபரங்கள், காணி உரிமையாளர்களது குடும்ப அங்கத்தினர் மற்றும் அவர்களது சிவில் நிலைமைகள், பொருளாதார வருவாய் நிலைமைகள் குறித்த விபரங்களும் திரட்டப்பட்டு வருவதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வீடமைப்புத் திட்டத்தின் திறப்பு விழா நாட்டின் உயர் தலைவர் பங்குகொள்ள, இன்னும் சில வாரங்களில் கோலாகலமாக நடைபெறப்போவதாக கூறப்படுகின்றது. இந்த நிலையில் முற்றிலும் தமிழ் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகளில் எழுந்துள்ள இந்த வீடுகள் இன விகிதாசாரப்படி மூவின மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது என்ற கதையே பரவலாக அடிபடுகின்றது.

இந்த வீடுகள் யார்யாருக்கு பகிர்ந்தளிக்கப்படப் போகின்றது என்பது குறித்து சிவில் நிர்வாக அதிகாரிகள் ஏன் எம்.பிக்களுக்கும் கூட தெளிவாகத் தெரியாத நிலைமையே காணப்படுகிறது. அதற்கான பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டு விட்டதா என்பது கூட எவருக்கும் தெரியாது. இந்த வீடமைப்புத் திட்டம் குறித்த தகவல்கள் வெளியாகத் தொடங்கியதும் தமிழ் பேசும் மக்களின் பிரதேசத்தில் அமைந்த இந்த வீடுகள் அவர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்று தமிழ் அரசியல் கட்சிகளும் வவுனியாப் பிரஜைகள் குழுவினரும் குரல் எழுப்பினார்கள். அவர்களது கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்குமா? அவர்கள் எதிர்பார்க்கும் நியாயம் கிடைக்குமா என்பது குறித்து எதுவுமே அனுமானிக்க முடியாமல் உள்ளது.

வவுனியா யாத்திரிகர் விடுதி கட்டிடத் தொகுதி கடைகளின் விநியோகம், பூந்தோட்டம் கல்வியில் கல்லூரிக்கான மாணவர் தெரிவு என்பவற்றில் வெளியார், பெரும்பான்மை இனத்தவர் அனுமதிக்கப்படக் கூடாது என்ற காரணங்களுடன் கூடிய நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னரும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாமல் நடவடிக்கைகள் நிறைவேறியுள்ளன.

இந்த ஆயிரம் வீட்டுத் திட்ட வீடுகளுக்கும் இதே கதிதானோ?



சரிநிகர்
18/2, அலோசாலை
கொழும்பு -03
தொலைபேசி :576704

பிரதம ஆசிரியர் சேரன்

# பீறிக்கொண்டோடுதுசிஞ்ஞோரே

பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறினாற் போல் இளைஞர் கடத்தல்களும், காணாமல் போதல்களும் மீள அதிகரிக்க ஆரம்பித்திருக்கின்றன.

70களில் ஆரம்பித்த இந்தத் துர்ப்பாக்கியமான அரசியற் சூழல் இரண்டு தசாப்தங்களையும் கடந்து இன்னும் தொடர்கிறது.

காலத்திற்குக் காலம் இந்தக் காணாமல் போகின்றதன் தீவிரம் குறைந்தாலும் மீளவும், மீளவும் உருக்கொண்டெழுந்து விடுகின்றது.

கடந்த இரண்டு வாரங்களிலும் கொழும்பையும், அதனைச் சூழத் தமிழர் வாழும் பகுதிகளையும் சுற்றிவளைத்து முப்படையினரும் தேடுதல்களை நடாத்தினார்கள்; நடாத்தி வருகிறார்கள்.

வழமையை விட இப்போதைய தேடுதல்கள் தீவிரமானவையாகவும், கொடூரமானவையாகவும் இருக்கின்றன.

முன்னர் வட-கிழக்கில் கிராமங்களையும், நகரங்களையும் சுற்றி வளைத்துத் தேடுதல் நடாத்திய அதே வழிமுறையை இப்போது கொழும்பையும், அண்டிய பகுதிகளையும் சுற்றி வளைத்து தேடுதல் நடாத்த பயன்படுத்துகிறார்கள் படையினர்.

தேடுதல் நடாத்த சுற்றிவளைத்த படையினரின் கதவு தட்டலில் கண் விழிப்பது இப்போதைய வாழ்வாகி விட்டது.

தேடுதல் நடாத்துகிற பொலிஸார் இளைஞர்களை அள்ளிக் கொண்டு போவதற்கு தனித்த காரணம் எதுவும் வேண்டியிருப்பதில்லை.

தமிழர் என்ற ஒன்றே அதிகமானது.

பொலிஸில் பதிந்திருப்பவர், தொழில் பார்ப்பவர், மாணவர், மிக நீண்டகாலமாக வசிப்பவர், பெண்கள், வயோதிபர் என்கிற எந்த வேறுபாடும் ஒருவரைக் கைது செய்யப்படுவதில் இருந்து விடுவிப்பதில்லை.

படையினர் விரும்பினால் கைது செய்யலாம் என்கிறது விதிபோல.

பொலிஸாரால் அள்ளிக் கொண்டு போகப்படுகிற இளைஞர்களால் பொலிஸ் நிலையக் கூண்டுகள் நிரம்பி வழிகின்றன.

ஒருவரை அல்லது இருவரை அடைத்து வைக்கிற கூண்டுக்குள் நாற்பது, ஐம்பது பேர் வரையில் அடைக்கப்படுகின்றனர் செம்மறியாடுகளைப்போல.

பொலிஸாரது உடல், உளச் சித்திரவதைகள் இவர்களை மனமுறிவுக்குள்ளாக்கி விடுகின்றன.

இன்னொரு புறத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்காக பெற்றோரும் உறவினரும் பெருமளவான பணத்தை இடைத்தரகர்களுக்கும், வேண்டியவர்களுக்கும் வாரியிறைக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

எரிகிற வீட்டில் கொள்ளி பிடுங்குற வியாபாரம் இது.

முப்படையினரது தேடுதலில் கொண்டு போகப்படுபவர்கள் தவிர, மறுபுறத்தில் சிவில் உடை ஆயுதபாணிகளால் ஆட்கடத்தல்களும் ஆரம்பித்திருக்கிறது ஒக்டோபர் 17ம் திகதி அதிகாலை வெள்ளவத்தை, கொகுவலை, கல்கிசைப் பகுதியிலிருந்து ஏழு தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள்.

கல்கிசையில் ஒரு வீட்டின் கதவை உடைத்து இளைஞர் ஒருவரை கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள் சிவில் உடை ஆயுதபாணிகள்.

ஏற்கனவே இவ் விளைஞன் கல்கிசைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சம்பவ தினத்திற்கு முதல் நாளிரவே பொலிஸாரால் விடுதலை செய்யப்பட்டிருந்தார். காலையில் மீளவும் கடத்தப்பட்டிருக்கிறார்.

இவர் உட்பட அன்று கடத்தப்பட்ட ஏழு பேரைப் பற்றியும் இதுவரை எதுவித தகவலும் இல்லை.

அவ்வப் பகுதிப் பொலிஸ் அதிகாரிகள் தமக்கு இது பற்றி எதுவும் தெரியாதெனக் கையை விரிக்கிறார்கள்.

[illegible]வாறான கைதுகள், கடத்தல்கள் மலையக இளைஞர்களையும் விட்டு வைக்கவில்லை.

அண்மையில் கைது செய்யப்பட்ட மலையக இளைஞர் ஒருவர் பொலிஸ் நிலையம் ஒன்றில் நாட்கணக்கில் வைத்து நையப்புடைக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் மலையக மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிட்டவர் இவர்.

'ஒரு போத்தல் கள்ளுடனும், ஒரு கொத்தரிசியுடனும் வாயைப் பொத்திக் கொண்டிருக்கிற இந்தச் சனங்களை உங்களைப் போல ஒன்றிரண்டு ஆட்கள் கெடுக்கப்பார்க்கிறீர்கள். இனியும் இந்த மாதிரி ஏதும் தேவையில்லாத வேலைகளில் ஈடுபட்டால் உயிரோடு இருக்கமாட்டீர்கள்' என்கிற துரைத்தனமான மிரட்டலுடன் அந்த இளைஞன் விடுவிக்கப்பட்டிருக்கிறான் ஜனநாயக தேசத்தின் காவலர்களால்.

இந்தக் கைதுகள் பற்றி தமிழ்க் கட்சிகள் அவ்வப்போது முனகிக் கொள்வதோடு தமது கடமை முடிந்ததாகக் கருதி சிராவஸ்திக்குள் முடங்கிக் கொள்கின்றன.

அமைச்சர் தொண்டமானும், செல்லச்சாமியும் இந்தக் கைதுகள் இத்தோடு முடிந்தன; இனி ஒன்றும் நடவாது' என்கிற மாதிரி அறிக்கை விடுவதோடு சரி.

'நான் நோகாமல் அடிக்கிறேன் நீ ஓயாமல் அழு' என்பது போலத்தான் அரசின் கைதுகளும் இவர்களது பத்திரிகை அறிக்கைகளும்.

இவ்வாறான கைதுகளில் தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் தான் உள்ளடங்குகிறார்கள் என்று 'சால்ஜாப்பு' சொல்கிறார் அரசு தரப்பு அமைச்சர் ஒருவர்.

இவ்வாறான கைதுகளும், கடத்தல்களும் ஒரு வகையில் தமிழர் கட்சிகளுக்கும், தொண்டமான் வகையறாக்களுக்கும் அவர்களது இருப்பைப் பேண அத்தியாவசியமானவையும் கூட.

மக்கள் பிரதிநிதிகளாகத் தம்மைக் காட்ட இவையும் இல்லையென்றால் எப்படிச் சாத்தியமாகும் இவர்களுக்கு?

எனவே இந்தக் கட்சிகளது அறிக்கைப் போராட்டங்களும், பாராளுமன்ற உரைகளும் இவர்களது இருப்பை கேள்விக்குள்ளாகாத படிக்கும், தகர்த்து விடாத படிக்கும் எல்லைக்குட்பட்டவை என்பது வெளிப்படையானது.

அரசு இவர்களைப் பற்றி எதுவும் அலட்டிக் கொள்ளப் போவதில்லை. அது தனது சிறுபான்மையின மக்களுக்கு எதிரான ஒடுக்கு முறையையும், மேலாதிக்கத்தையும் வலுப்படுத்திக் கொண்டேயிருக்கும். அதன் ஒரு வடிவம்தான் இவ்வாறான கைதுகளும் கடத்தல்களும்.

இளைஞர்கள் மீதான படையினரின் அடாவடித்தனங்கள் மூலமும், சிறுபான்மை மக்கள் மீதான ஒடுக்கு முறை மூலமும் தனது பாதுகாப்பையும் மேலாட்சியையும் உறுதிப்படுத்தி விடலாம் என நினைக்கிறது போலும் அரசு.

ஆனால், இந்தப் போக்கின் தாகக ரீதியான வளர்ச்சி ஒருபோதும் அவ்வாறிருக்கப் போவதில்லை என்பதுதான் உண்மையானது!

இறுதியாக ஒரு நாட்டார் பாடல்

'என்ன பிடிக்கிறாய் அந்தோனி
எலி பிடிக்கிறேன் சிஞ்ஞோரே
பொத்திப் பொத்திப் பிடி அந்தோனி
பீறிக் கொண்டோடுது சிஞ்ஞோரே'

என்கிறாற் போல தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காதவரை எவ்வளவு (ஆட்)பிடிப்புகளைச் செய்தாலும் பீறிக்கொண்டே போகப் போவது எலிகள் மட்டுமல்ல புலிகளும்தான்!

# இனப்பிரச்சினைக்கு அரசியலமைப்புக்குட்பட்ட தீர்வு என்பது ஒரு அரசியல் மோசடியே!

அமெரிக்கா வாஷிங்டன் நகரில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க 'எமது நாட்டில் நிலவும் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண வேண்டும்' என்று அறிவித்துள்ளார். அரசாங்கம் இதற்கு மீண்டும் தயாராகவே உள்ளது என்றும், வெளிநாட்டுத் தலையீடு எதையும் விரும்பவில்லை; இதை உள்நாட்டிலேயே பேசித் தீர்த்துக் கொள்ள விரும்புகிறோம் என்றும் அவர் அறிவித்துள்ளதாகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

'எமது நாட்டின் அரசியலமைப்பு சட்டத்திற்கு உட்பட்ட வகையில் பிரச்சினையைத் தீர்ப்பதை எமது அரசாங்கம் எதிர்க்கப் போவதில்லை' என்றும் அவர் அறிவித்துள்ளார்.

'வடக்கு கிழக்கில் நிலவுவது பயங்கரவாதப் பிரச்சினையே' என்று கூறும் இன்றைய ஜனாதிபதி முதல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் வரை எல்லோரும் திரும்பத் திரும்பக் கூறி வருவது இதைத்தான். இன்றைய ஒற்றையாட்சி அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களது பிரச்சினையை தீர்த்து விட வேண்டும். என்பதே அவர்களது முடிந்த முடிவாக உள்ளது.

இந்த அரசியல்வாதிகளும், அவற்றுக்கு ஜால்ரா போடுகின்ற கொழும்பை மையமாகக் கொண்டு வரும் பத்திரிகைகளும் ஏதோ நடப்பிலுள்ள அரசியலமைப்புச் சட்டத்தை தாம் மதித்துப் போற்றி வருவது போலவும், அந்த அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணாகத் தாம் எதையும் செய்வதேயில்லை என்பது போலவும் தொடர்ச்சியாகக் காட்டி வரும் பாசாங்குகளை யாரும் இன்று நம்பத் தயாராக இல்லை. ஆளுங்கட்சி தனது ஆட்சிக்கு நெருக்கடி வருகின்றதென உணர்கின்ற போதெல்லாம் அரசியலமைப்புச் சட்டத்தை மீறியே வந்துள்ளது. அதுவும், குறிப்பாக சிறுபான்மையினங்கள் தொடர்பான விவகாரங்களில் இவற்றை மீறுவதையிட்டு அது ஒரு போதும் தயங்கியது கூடக் கிடையாது.

இன்றைய கண்மூடித்தனமான கைதுகள், படுகொலைகள், ஆட்கடத்தல்கள், அரசியற் பழிவாங்கல்கள் எவையும் இவர்கள் துதிபாடுகின்ற அரசியலமைப்புச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டவை அல்ல. வடக்கு கிழக்கு மாகாண சபையை பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் மூலம் கலைத்தது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணான முறையில் நடந்த ஒன்றுதான்.

ஆனால் நாட்டின் மொத்த வருவாயில் 6%த்திற்கு மேல் விழுங்கிக் கொண்டிருக்கும் வடக்குக் கிழக்கு யுத்தத்தை நிறுத்த மட்டும் வடக்குக் கிழக்கிலுள்ள மக்களது பிரச்சினைகளைத் தீர்க்க மட்டும் அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறமுடியாது என்று கூறுகின்றனர்! அப்படிப் பார்க்கப் போனால், இந்திய நெருக்குதலின் காரணமாக கொண்டுவரப்பட்ட 13வது திருத்தச் சட்டமும் சரி, சிங்களம் மட்டும் சட்டம் இருக்கும் போதே தமிழ் மொழியும் உத்தியோகபூர்வ மொழியெனக் கொண்டுவந்ததும் சரி அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறியவை என்பதற்காக கொண்டுவரப்படாமலே இருந்திருக்க வேண்டும். ஆனால் அவற்றைக் கொண்டுவரும் போது (பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருந்தது என்பது வேறு விடயம்) இது பற்றி யாருமே மூச்சு விட்டதாகத் தெரியவில்லை.

இன்று வாஷிங்டனில் நின்று அரசியலமைப்புச் சட்டம் பற்றிப் பேசும் இன்றைய பிரதமர் அவர்கள் கூட.

உண்மையில் இன்றுள்ள அரசியல் அமைப்புச் சட்டம் எவ்வாறு உருவாக்கப்பட்டது? பாராளுமன்றத்திலிருந்த சிறுபான்மை இனப் பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களைக் கணக்கில் எடுக்காமல் கொண்டுவரப்பட்ட இச் சட்டமானது, திட்டவட்டமான முறையில் மிகத் தெளிவாக இது ஸ்ரீலங்கா என்ற சிங்கள நாடு என்று பிரகடனப்படுத்துத்தி அவர்களுக்கு மட்டுமே உரிய நாடு இதுஎன்று அறிவித்தது இந்த அரசியலமைப்புச் சட்டம்


> வடக்கு கிழக்கின் பிரச்சினை ஒரு சிறுபான்மையினர் வாழும் தேசத்தின் உயிர்ப் பிரச்சினை; அவர்களது அதிகாரம், சுயாதிக்கம், மேம்பாடு என்ற அடிப்படைகள் பற்றிய பிரச்சினை. ஜனாதிபதி கூறுவது போல அதைப் 'பயங்கரவாதப் பிரச்சினை' என்றாலும் கூட, 'அப் பயங்கரவாதம்' வேர்கொண்டிருப்பது இதன் மீதுதான்.

இந்த அரசியலமைப்புச் சட்டம்தான் பாராளுமன்றத்திலிருந்த பெரிய எதிர்க் கட்சியினரை (த.வி.கூ) அவர்கள் சிறுபான்மை இனத்தவர்கள் என்பதற்காக பாராளுமன்றத்தை விட்டு விரட்டியது.

இதுதான், இரண்டு தேசங்களாகவும் ஒரு நாடாகவும் இருந்த இலங்கையை இரண்டு நாடுகளாக மாற்றியது; தனது ஸ்ரீலங்கா என்ற ஒரே தேசமே இங்கு நிலவுகிறது என்ற முரட்டுப் பிடிவாதத்தால்.

ஸ்ரீலங்கா என்ற பெயரால் முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறி சிறுபான்மைத் தமிழ் முஸ்லீம் மக்களை தனிமைப்படுத்தியது.

ஆக, சிறுபான்மை மக்களை ஒதுக்கி, சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கீழ் அடிமைகளாக அவர்களை வாழ நிர்ப்பதாய் உருவாக்கப்பட்டது. ஒரு நாடாக இருந்த இலங்கையை பெரும்பான்மைச் சிங்களத் தேசிய இனம், தமிழ்த் தேசிய இனம், முஸ்லீம், மலையக மக்கள் எனஇருந்த பிற சிறுபான்மையினர் அனைவருக்கும் தமது சொந்த நாடென உரிமை கொண்டாடிய இலங்கையை முழுக்க முழுக்க பௌத்த சிங்கள நாடாக பிரகடனப்ப



பந்திப்பதற்கேற்ற விதத்தில் தயார் செய்யப்பட்ட இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ், இதன் காரணமாகவே தீவிரம் பெற்ற தேசியப் பிரச்சினையை எப்படித் தீர்க்க முடியும்?

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் வரலாறு புரியாத ஒரு முட்டாள் என்று யாரும் கருத முடியாது. ஆனால், உண்மையிலேயே பிரச்சினையை தீர்ப்பதில் அக்கறை உள்ளவர் தானா என்ற சந்தேகம் எழுவதை தடுத்து விடவும் முடியாது.

'மலடியைப் பிடித்து பிள்ளை பெறு' என்பது போலத்தான் ஸ்ரீலங்கா அரசியல் சாசனத்தின் கீழ் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முனைவதும்/

வடக்கு கிழக்கின் பிரச்சினை ஒரு சிறுபான்மையினர் வாழும் தேசத்தின் உயிர்ப் பிரச்சினை; அவர்களது அதிகாரம், சுயாதிக்கம், மேம்பாடு என்ற அடிப்படைகள் பற்றிய பிரச்சினை. ஜனாதிபதி கூறுவது போல அதைப் 'பயங்கரவாதப் பிரச்சினை' என்றாலும் கூட, 'அப் பயங்கரவாதம்' வேர் கொண்டிருப்பது இதன் மீதுதான்.

பிரச்சினைகள் எல்லாக் காலங்களிலும் ஒரே வடிவில் வெளிப்பாடு காண்பதில்லை.

அது பயங்கரவாதமாக வெளிப்படுவதும் வரலாற்றில் புதிய விடயமல்ல.

1989இல் தெற்கிலும் 'பயங்கரவாதம்' வெடித்ததுதான். அரசியல் அனுபவஸ்தர்கள், 'பயங்கரவாதத்தை' ஒரு பெரும் பூதமாகப் பார்ப்பதில்லை. அது ஒரு வெளிப்பாடு மட்டுமே. பிரச்சினைகள் வெளிப்படும் வடிவத்தை மட்டும் பார்ப்பவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அதற்கான அடிப்படைகளையும் பார்க்க வேண்டும்.

தெற்கிலே தோன்றிய 'பயங்கரவாதத்தை' ரயர் மூலமாக தணித்து விட்டதாக நம்பிக் கொண்டிருப்பவர்கள் வேண்டுமென்றால், வடக்குக் கிழக்கு 'பயங்கரவாதத்தையும்' அப்படி முடித்து விட முடியும் என்று சொல்லிக் கொள்ளலாம்.

தெற்கிலே தணிந்தது -ரயர் நெருப்பில் மறைந்தது- வெறும் வெளிப்பாடு மட்டுமே; தெற்கின் பிரச்சினை அல்ல!

அது தணிந்தது வெறும் ரயரால் மட்டுமல்ல; அது தனக்குத்தானே உருவாக்கிக் கொண்ட சொந்தப் பலவீனங்களால்.

இன்று வடக்குக் கிழக்கின் 'பயங்கரவாதத்திலும்' அத்தகைய பலவீனங்கள் இருக்கின்றனதான்.

ஆனால் தெற்கின் பயங்கரவாதத்திற்கு அடிப்படையாக இருந்த நிலைமைகளை விட வடக்குக் கிழக்கின் நிலைமைகள் மோசமானவை.

முன்னையது நேற்றைய புண்; பின்னையது அரை நூற்றாண்டு காலமாகப் புரையோடிய புண்.

பிரதமர் அவர்களுக்கு புரிந்தாலும் சரி, புரியாவிட்டாலும் சரி உண்மை ஒன்றுதான்:

அதாவது இன்றைய அரசியல் சாசனத்தின் கீழ் வடக்குக் கிழக்குப் பிரச்சினையை தீர்க்க முயல்வ்தாகச் சொல்வது சுத்தமான அரசியல் மோசடி; அயோக்கியத்தனம்.

தீர்ப்தில் அக்கறை உள்ளவர்கள் செய்ய வேண்டியது அரசியல் சாசனத்தைப் பற்றி கவலைப்படாமல் யதார்த்த நிலைமைகளை புரிந்து கொள்ள முயல்வதுதான்.

ஒடுக்கும் தேசமும், ஒடுக்கப்படும் தேசமும் சமாதானமாக வாழ உள்ள ஒரே வழி ஒடுக்கப்படும் தேசத்தை சம அந்தஸ்துடன் அங்கீகரிப்பது மட்டுமே.....

பிரத்மருக்குப் புரியுமோ என்னவோ.

மோசமழிப்பான்

சலித்துப் போனவர்கள் மூட்டை முடிச்சுகளைக் கட்டினார்கள்.

1983இலிருந்து, யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு மகன் ஐரோப்பிய நாடு ஒன்றில் அகதியாக இருக்கிறான். இது மேல்தட்டு வர்க்கத்திற்கும், மத்தியதர வர்க்கத்திற்கும் மாத்திரமே சாத்தியமாக இருந்தது. அடித்தட்டு மக்கள் யாழ்ப்பாணத்திலேயே குடி கொண்டார்கள்.

மேல்தட்டு வர்க்கத்திற்கும், மத்தியதர வர்க்கத்திற்கும் சலிப்ட மிகுதியாக இருந்தது.

ஐரோப்பிய நாடு ஒன்றில் இருக்கிற மகன் அவர்களை கொழும்பிற்கோ, இந்தியாவுக்கோ அழைத்தான்.

அவர்கள் மூட்டை முடிச்சுக்களைக் கட்டினார்கள்.

அவர்கள் திமிரில்தான் சென்றார்கள் என்றும் கூற முடியாது. ஒரு பகுதி மக்கள் போரில் நலிவடைய தாங்கள் மாத்திரம் தப்பினால் போதும் என்கிற மன நிலையுடன் மாத்திரம் அவர்கள் போனார்கள் என்றும் கூறிவிட முடியாது.

வீடுகளிலும், சென்னையின் சந்து பொந்துகளிலும் வாழ்ந்தார்கள்.

தன் மண்ணை, மண்ணில் விளைந்த வளவை, வளவில் எழுந்த வீட்டை, வீட்டைச் சுற்றிய பழமரங்களை, கிணற்றை, தோட்டத்தை, வீட்டின் தளபாடங்களை, சூழ இருந்த மனிதர்களை, அவர்கள் உறவுகளை, நேசங்களை, பிரியங்களை எல்லாவற்றுக்கும் மேலாக தமது இன்பத்திலும் துன்பத்திலும் தம்மைப் பகிர்ந்து கொள்கிற தம் குல தெய்வங்களை அவர்கள் பிரிந்தார்கள்.

பிரிவா அது?

பிடுங்கி எறியப்பட்டு வேற்று மண்ணில் புரண்ட கொடுமை.

சதம் சதமாகச் சேமித்து வாங்கிய வளவு. கல்லையும், மண்ணையும் சீமெந்தையும் தம் இரத்தத்தால் வாங்கிக் கட்டிய வீடு. இனி இரத்தம் இல்லை என்றான போது வீடு சாந்து பூசப்படாது கொங்கிறீற் தெரிய நின்றது.

கிணறு கட்டி, துலா வைத்து, ஆழக் கிணற்றில் வாளி கோலி, நீரெடுத்து மரம் நட்டார்கள். அதன் ஒவ்வொரு

## யாழ்ப்பாணம் இன்று — 11

புலிகளின் போர் முறையில் சலிப்பு இருந்தது.

ஒரு முறை பிரேமதாசாவுடன் கூடிக் குலாவுகிறார்கள் இன்னொரு முறை பிரேமதாசாவை அரக்கன் என்கிறார்கள்.

அங்குல வளர்ச்சியிலும் மனம் மகிழ்ந்தார்கள். முளை வைத்துக் காய்த்த போது, காய்த்துப் பழுத்த போது என் பழம் என்று மனம் நிறைந்தார்கள்.

என்ரை பிள்ளை, என்ரை குடும்பம், என்ரை வீடு, என்ரை நிலம்... இது யாழ்ப்பாணத்து மக்களின் மிகச் சராசரிக் குணம்.

அரை அங்குல நிலத்திற்காக அடிதடி கொலையில் முடிகிற சமாச்சாரங்கள் யாழ்ப்பாணத்தில் உண்டு.

குண்டு போடுகிற போது, நல்லூர் முத்திரைச் சந்தியில் கியூவில் நின்று பாஸ் எடுத்தார்கள்.

பாஸ் கொடுக்கிற இடம் அடிக்கடி மாறியது. ஓடியோடி எடுத்தார்கள்.

பிறகு பிறகு யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுபவர்களுக்கான நிபந்தனைகள் இறுகத் தொடங்கின.

குடும்பமாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுபவர்கள் வீட்டைப் புலிகளிடம் உறுதிப் பத்திரத்துடன் கையளித்து குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டும்.

இதற்கும் தயாரானார்கள்.

எக் காரணம் கொண்டும் 12-25 வயதிற்குட்பட்ட ஆண்களும் பெண்களும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற முடியாது என்பது பிறகு ஒரு நிபந்தனையானது.

இந்நிபந்தனை "அடி வயித்தில இடி விழுந்தது போல" ஒரு செயல்.

12வயது பிறகு 10வயதானது

பிறகு பிறகெல்லாம் புலிகள் வீட்டை எடுக்க விரும்பவில்லை. நிரந்தரமாக வெளியேறுபவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு லட்சம் ரூபா வீதம் கட்ட வேண்டும். தற்காலிகமாக வெளியேறுபவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒருவர் பிணை நிற்க வேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறுபவர்கள் கட்டுப்படுத்தப்பட்டனர்.

ஒவ்வொரு நிபந்தனைகள் விதிக்க முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறியவர்கள் ஒவ்வொருவரும் "தப்பினோம் பிழைத்தோம்" என நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

புலிகளிடம் பாஸ் எடுத்து, முத்திரைச் சந்தி வந்து பஸ் எடுத்து, கேரதீவுக்கோ, கொம்படிக்கோ, கிளாலிக்கோ பஸ்சில் சென்று வள்ளம் ஏறிச் சிறுகடல் கடந்து, காத்து நிற்கிற பஸ்ஸில் ஏறி, கிளிநொச்சி தாண்டி, முறிகண்டிப் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்து (கற்பூரம் இல்லை) ஓமந்தையிலேயோ பன்றிக்கெய்த குளத்திலேயோ இரவு தங்கி, விடியச் சென்று புலிகளிடம் பாஸ் காட்டி, குறிப்பிட்ட தூரத்தை சைக்கிளில் அல்லது நடந்து கடந்து, கியூவில் நின்று, பாலம் கடந்து, இராணுவத்திடம் சென்று பார்சல் காட்டி, பாஸ் எடுத்து, வவுனியாவில் ரயில் ஏற அப்பாடா என்றிருக்கும்.

லைட் எரியும், சோடா குடிக்கலாம், இருண்ட கண்டத்திலிருந்து வெளியே வந்தது போல வேறொரு உலகம்.



# வேருடன பிடுங்கப்பட்ட மரம்

90இல் சிறீலங்கா இராணுவத்துடன் போர் தொடங்கிய காரணம் என்ன என்பது மக்களுக்குத் தெளிவுபடுத்தப் படவில்லை.

இது போதும்.

மக்கள் புலிகளின் போர் பற்றி நம்பிக்கை கொள்ளவில்லை.

"புலிகள் விரும்பிய நேரம் சண்டை தொடங்குவார்கள்; விரும்பிய நேரம் விடுவார்கள். இதற்கெல்லாம் நாங்களா அழிவது?"

இது பொதுவான கேள்வி. பெரும்பாலான மக்களைச் சலிப்படைய வைத்ததில் இது முக்கிய காரணி.

சலிப்படைந்த போது மாற்று வழி இருந்தவர்கள் யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட்டார்கள். இல்லாதவர்கள் யாழ்ப்பாணத்தில் அமுங்கினார்கள்.

புறப்பட்டவர்கள் இரக்கமற்றுத்தான் போனார்கள் என்றுதான் நாங்கள் நினைக்கிறோம். ஏனைய மக்களின் துன்ப துயரம் பற்றி ஒன்றும் நினையாது போய் விட்டார்கள் என்றுதான் நாங்கள் அறிகிறோம்.

அப்படிப் போனவர்களும் இருக்கிறார்கள் என்பதும் உண்மை.

ஆனால், வேருடன் பிடுங்கப்பட்ட மரம் போல போனவர்கள் வேதனைப் பட்டார்கள்.

யாருக்குத்தான் சொந்த மண்ணை விட்டு வெளியேற விருப்பம்?

ஒரு மாதம் இன்னொரு இடத்திற்கு உல்லாசப் பயணம் போலப் போய் வரலாம்.

ஆனால் நிரந்தரமாகப் பிரிய யாரினால் இயலும்?

வீட்டிலை ஒரு கோப்பைத் தண்ணீர் குடித்துச் சீவிக்கலாம். வெளி இடங்களில் வாய் நனைக்கவும் முடியாது.

மண்ணும் மனமும் பின்னிப் பிணைந்தவை. மனிதனும் மண்ணும் இரண்டறக் கலந்தவை.

ஒன்றிலிருந்து இன்னொன்றைப் பிரிக்க முடியாது. பிடுங்கத்தான் முடியும்.

பிடுங்கி எறியப்பட்டவர்களாகத்தான் கொழும்பு லொட்ஜ்களிலும், வாடகை

ஒவ்வொரு ஆண்டும் வேலி கட்டுகிற போது பக்கத்துக் காணியைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பறிப்பார்கள். வேலிச் சண்டை யாழ்ப்பாணத்தில் பிரசித்தம்.

அது கூட நிலத்தில் ஒன்றிப் போன வாழ்வின் பிணைப்பு.

இந்த வளவைவிட்டா அவன் புறப்படுவான்? இந்த வீட்டை விட்டா அவன் பயணம் தொடரும்? இந்த அயலையும், இந்தக் கோயிலையும், இந்த ஊரையும் விட்டா அவன் அடியெடுத்து வைப்பான்.

வைத்தான். அடியெடுத்து வைக்க வேண்டி வந்து விட்டது.

எத்தகைய நம்பிக்கையும் இல்லை. ஒரேயொரு நம்பிக்கை இருந்தது. தங்கள் மரணம் அகாலமாக நிகழுமென்று. தன் வீட்டு மரம் வெட்டக் கூட அவன் புலிகளிடம் அனுமதி பெற வேண்டுமெனில், தன் வளவு தனக்குச் சொந்தமில்லை என உணர்ந்தான். தன் வாழ்வு இன்னார் கையில் என அறிந்தான்.

கடைசிக் காலத்திலாவது மகனின் சொல் கேட்டல் உசிதம் எனப்பட்டது. மகன் சொன்னான் "கொழும்பிற்கு அல்லது இந்தியாவிற்குப் போங்கோ. நான் காசு அனுப்புகிறேன். உங்கிருந்து சாக வேண்டாம். நான் இங்கு உங்களை நினைத்து ஒவ்வொரு நாளும் செத்துக் கொண்டிருக்கிறேன்"

மகனின் வார்த்தையை மந்திரமாக்கி சிரமேற் கொண்டு போனார்கள்.

போவது லேசான காரியமல்ல. புலிகளிடம் பாஸ் எடுக்க வேண்டும்.

அதற்கு இரண்டு பவுணுக்குக் குறையாமல் கட்டியாக வேண்டும்.

அது பெரிய வேலை அல்ல; கட்டினார்கள்.

வெளிநாட்டிலிருக்கிற மகனைப் பொறுத்து குறிப்பிட்ட தொகை செலுத்தியாக வேண்டும்.

செலுத்தினார்கள்.

கோட்டையைச் சுற்றி 'அவ்ரோ'

இப்படிக் குடும்பத்துடன் புறப்பட்டு கொழும்பு சென்ற மாமா கடிதம் எழுதினார்.

"தம்பி, உன்னைத்தான் நம்பியிருக்கிறன். தென்னை இப்ப நிறையக் காய்க்கும். அழிய விட்டிடாதை. கறுத்தக் கொழும்பான் தங்கச்சிக்கு நல்ல விருப்பம். கொண்டு போய்க் குடு. ராசையா வாத்தியார் வீட்டில சைக்கிள விட்டுட்டு வந்தனான். என்ன மாதிரி என்று கேள். மாடும் கன்றும் நடராசாவிடம். நிறையப் பால் கறக்கலாம். உன்னால ஏலுமென்டால் கொண்டு போய் வைத்திரு. வீட்டைக் கவனமாகப் பார். புலிகளிடம் விடாதை. நான் வருவன் என்று சொல்லு. ஒவ்வொரு கல்லுக் கல்லாய் நான் எடுத்துக் கட்டின வீடு. உழைக்கிற காலம் வரைக்கும் நான் நிம்மதியாக வீட்டில படுத்ததில்லை. ஓவர் ரைம் என்று ஓடித் திரிஞ்சன். ஓய்ந்து போயிருக்கிற நேரத்தில என்ரை வீட்டில இருக்கக் குடுத்து வைக்கேல்ல...."

சலித்துப் போய்த்தான் பலர் வெளியேறினார்கள்.

ஒரு சலிப்புமில்லை. மண்ணோடு பின்னிப் பிணைய விருப்பம். மனிதர்களோடு வாழப் பிரியம். மக்களின் சுக துக்கங்களில் இணைய ஆர்வம்.

## — அருணா பரமேஸ்வரன்

ஆனால் அப்படியானவர்களில் சிலர் புலிகளினால் நாய் போல வேட்டையாடப்பட்டார்கள். அடிக்கப்பட்டார்கள். மறைக்கப்பட்டார்கள். ஒழிக்கப்பட்டார்கள். மண்ணோடு மண்ணாகப் புதைக்கப்பட்டார்கள். புலிகளுக்கு அஞ்சி மண்ணை விட்டு ஓடினார்கள்.

அது பிறகு.

# நாலு வார்த்தை எழுத விடு

## சூரியா

## சுதந்திர இலக்கிய விழா -1993.

ஒக்ரோபர் 8,9ஆம் தினங்களில் கொழும்பு ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் 'மோர்ஜ்', 'விபவி' நிறுவனங்கள் இணைந்து நடத்திய **சுதந்திர இலக்கிய விழா** நடைபெற்றது. அது குறித்து முழுமையாக இல்லாவிடினும் சில குறிப்புகளாவது தரலாம்.

இவ் விழாவிற்கு முன்னர், மாற்றுக் கலாசார ஏற்பாடுகள் எனும் வகையில், இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களது புதிய ஆக்கங்களை (சிறுகதை, கவிதை, பாடல்) தெரிவு செய்து அவற்றுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அவ்வாறே எழுத்தாளர்களுக்கான படைப்பிலக்கியத்திற்கு விருது வழங்குவதற்காக நாவல், சிறுகதை, கவிதை, மொழிபெயர்ப்பு இலக்கியம் எனும் வகைகளில் நூல்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

நாவல் -**ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்** (உலகமெல்லாம் வியாபாரிகள்), சிறுகதை -**சட்டநாதன்**(உலா), கவிதை -**கி.பி.அரவிந்தன்** (முகம் கொள்), மொழிபெயர்ப்பு -**கே.கணேஸ்** ஆகியோர் விருது பெற்றனர்.

இளம் எழுத்தாளர்களுக்கான சிறுகதை -**நட்சத்திரன் செவ்விந்தியன்,** கவிதை -**எம்.எல்.எம். அன்ஸார்** ஆகியோர் முதலாம் இடத்தைப் பெற்றனர்.

சிங்களமொழிப் படைப்பாளர்களுக்கும் இவ்வாறாக விருதுகள் வழங்கப்பட்டன.

சென்ற வருடம் நடைபெற்ற சுதந்திர இலக்கிய விழாவில் தமிழ் பேசுவோரது பங்களிப்புகள் குறைக்கப்பட்டமை தொடர்பாக இதே இடத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இம்முறை புறக்கணிப்புகள் ஏதும் நிகழவில்லை என்பதும் குறிப்பிட வேண்டியது.

பொதுவாகக் கலை நிகழ்ச்சிகளைப் பார்வையிடும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டவில்லை.

இரு கருத்தரங்குகளில் அமர்ந்து கொள்ளும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இளம் எழுத்தாளர்களுக்கான சிறுகதை பற்றிய மதிப்பீட்டினை **ரஞ்சகுமார்** வெளிப்படுத்தினார்.

"கலை ஆக்கம் ஒன்று பற்றிய விமர்சன அணுகுமுறைகள், ரசனைகள் என்பன காலத்துக்குக் காலம் வேறுபடுகின்றன.... புனைகதை மேலைத்தேசங்களிலிருந்து எமக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விமர்சன அணுகுமுறைகளும் அவ்வாறே... இன்பத்தையும், துன்பத்தையும் போரையும், சமாதானத்தையும் அவர்கள் அனுபவித்து சில பத்தாண்டுகளின் பின்னரேயே நாம் அனுபவிக்கிறோம் .. எமது சமூகங்களுக்கிடையேயுள்ள தனித்துவமான மேன்மைகளும், கேவலங்களும் கூட எமது நினைவுகளில் மிதக்கின்றன. இவை எல்லாவற்றையும் உள்வாங்கி ஊடறுத்துச் செல்ல வேண்டியதாக உள்ளது எமது படைப்பிலக்கியம்... நமது அண்டை நாடான தமிழ் நாட்டின் செல்வாக்கு எம்மீது தனது தடத்தை வலுவாகப் பதித்திருக்கின்றது எனினும், அன்றைய புதுமைப்பித்தனுக்கும் இன்றைய ஜெயமோகனுக்கும் நிகரான படைப்பாளிகள் இங்கு உள்ளார்களா? பழைய நினைவுகளில் மூழ்கிப் போவது எல்லோருக்கும் பிடித்தமான காரியம் நேற்றைய நிகழ்வுகள் நல்லவையே எனத்தான் எல்லோரும் நினைக்கிறார்கள் இன்றைய நிகழ்வுகள் வேதனையாகவும் பயங்கரமாகவும் இருப்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள். நாளைய எமது நிலை என்ன? பதிலளிக்க முடியாத கேள்வியாக நம்முன்னே எழுகிறது"

இவ்வாறு ரஞ்சகுமாரின் கருத்துகள் வெளிப்பட்டன.

அன்றைய புதுமைப்பித்தனுக்கும் இன்றைய ஜெயமோகனுக்கும் நிகரான படைப்பாளிகள் இங்கு உள்ளார்களா? என ரஞ்சகுமார் கேள்வி எழுப்புகிறார்.

உண்மை. இன்னும் இவை போன்ற பல உண்மைகளை ரஞ்சகுமார் தொட்டு, இன்னும் ஆழமாக இக் கட்டுரை படிக்கப்பட்டிருக்க வேண்டும். இவை குறித்துப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் எனது கருத்தையும் குறிப்பிடலாம்

**'இலக்கியமும் இன உறவும்'** எனும் தலைப்பில் **எம்.ஏ.நுஃமான்** அவர்கள் சில கருத்துக்களைக் குறிப்பிட்டார். மிக முக்கிய கருத்துக்கள் அவரால் தெரிவிக்கப்பட்டிருந்தன.

"இனப் பிரச்சினை சம்பந்தப்பட்ட வகையில் இனங்களுக்கிடையில் நல்லுறவு ஏற்பட இலக்கியம் எவ்விதம் உதவும் என ஆலோசிக்க வேண்டியுள்ளது. 1948ஆம் ஆண்டுக்குப் பின்னர் இன முரண்பாடுகள் வளர்ந்தே வந்துள்ளன. இலங்கையர் என்று யாருமே இல்லை. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள், இங்கிருக்கிறார்கள். இந்த மூன்று இனத்தவர்களும் இனரீதியான மோதல்களில் இரத்தம் சிந்தி இருக்கிறார்கள். அகதிகளாக இருக்கிறார்கள். வெளிநாட்டிலும் இருக்கிறார்கள்.

இனப் பிரச்சினை அரசியல் பிரச்சினையாகும். அரசியல்வாதிகளினால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகும். அதனை அரசியல் ரீதியாகத் தான் தீர்க்க வேண்டும். அரசியல் பிரச்சினையை இலக்கி ரீதியாகத் தீர்க்க முடியாது. ஆனால் இலக்கியம் வேறுதளத்தில் நின்று இன உறவினைக் கட்டி எழுப்ப முடியும்.

1950களின் பின் வந்த தமிழிலக்கியங்களில் இன உணர்வு மேலோங்கி நிற்பதைக் காணமுடியும். இயல்பான வளர்ச்சி இது. சிங்கள இலக்கியங்களை ஆய்வோர் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே பிற இன வெறுப்புணர்வு இருப்பதாகக் கூறுகிறார்கள்.

பல்வேறு நோக்குகளையும் பார்க்குமிடத்து இலக்கியத்தில் மனித நேயம், அவனுடைய வாழ்வியலைப் புரிந்து கொள்ள உதவுவதுதான் இலக்கியம் என நான் கருதுகின்றேன். பல்வேறு நாடுகளின் இலக்கியங்களைப் படிப்பதன் மூலம் மனிதனுக்குரிய இயல்பான அம்சங்களைப் புரிந்து கொள்கிறேன். எங்குமே சுரண்டல்கள் ஒரே மாதிரியாகவே நடைபெறுகின்றன. மனித இயல்புகளும் ஒன்றானவை.

நவீன சிங்கள நாவல்களைப் படிப்பதன் மூலம் அவர்கள் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முடிகிறது. அதே போல தமிழிலக்கியங்களை சிங்கள மக்கள் படிப்பதன் மூலம் தமிழர்தம் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முடியும். இலக்கியம் மனிதனைப் புரிந்து கொள்ள முக்கிய சாதனம்.

சிங்களத்தில் இருந்து தமிழுக்கு பத்து நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. 100 சிங்களச் சிறுகதைகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்ச் சிறுகதைகள் எத்தனை சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டன? சிங்கள எழுத்தாளர்கள் தமிழ்ச் சிறுகதைகளை சிங்களத்தில் மொழி பெயர்க்க முயற்சி செய்ததாகத் தெரியவில்லை.

தமிழ் அறிந்த சிங்கள எழுத்தாளர்கள் மிகவும் குறைவு. சிங்களம் அறிந்த தமிழ் எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். இன முரண்பாட்டினை இது காட்டுவதாக உள்ளது.

மொழி பெயர்ப்புக்கு இரு மொழிப் புலமையும் ஆழ்ந்த கலாசார அறிவும் அவசியம்"

இவை நுஃமானின் உரையின் சுருக்கமாகும். பல்வேறு விடயங்களைத் தொட்டுச் செல்வதாக இக் கட்டுரை அமைந்தது.

இளம் எழுத்தாளர்களுக்கான கவிதை பற்றி **சோ.தேவராஜாவும்** மொழிபெயர்ப்பு இலக்கியம் பற்றி **ந.ரவீந்திரனும்** கவிதை பற்றி **செ.யோகராசாவும்** தம் கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

சுதந்திர இலக்கிய விழா இம்முறை சோடை போகவில்லை.

# முஸ்லீம்களின் சுயநிர்ணயமும் தனித்துவமும்

## வரலாற்றுப் பின்னணியில் சில குறிப்புகள்

இலங்கையில் முஸ்லீம் மக்கள் நாட்டின் பல பாகங்களிலும் பரவி வாழ்ந்த காரணத்தால் அவர்களைத் தேசிய இனமாகக் கொள்ள முடியாது என்ற வாதத்தைப் பற்றி இன்னொரு கட்டுரையிற் குறிப்பிட்டேன். அவர்கள் தமிழைப் பேசுகிற காரணத்தால் அவர்களைத் தமிழினத்தின் ஒரு பகுதியாகக் கருத முடியுமா முடியாதா என்பதை விட, முஸ்லீம்கள் அவ்வாறு தம்மைக் கருத விரும்புகிறார்களா என்பதும் அவ்வாறு கருதுவதற்கு வாய்ப்பான நிலைமைகள் உள்ளனவா என்பதும் முக்கியமானவை. முஸ்லீம்களின் தனித்துவம், அவர்கள் தம்மை ஒரு தேசிய இனமாகக் கருதும் அளவுக்கு அவர்களை நிர்ப்பந்திக்குமாயின் அதற்கான அரசியற் காரணிகளையும் சமுதாயச் சூழலையும் வரலாற்றுப் பின்னணியையும் நாம் கவனிக்க வேண்டும்.

### சிங்கள தேசியவாதத்தின் முற்போக்கும் பிற்போக்கும்

தேசியவாதத்தின் முற்போக்கான அம்சங்கள் அதன் பிற்போக்கான அம்சங்களுடன் இணைந்தே வருகின்றன. காலனித்துவ எதிர்ப்பை மையமாகக் கொண்டு எழுச்சி பெற்ற சிங்களத் தேசியவாதம் பிற்காலத்தில் சிங்கள-பெளத்த பேரினவாதத்தின் விதைகளையும் தன்னுட் பொதித்திருந்தது. விதேசிய எதிர்ப்புணர்வு, சிங்கள-பெளத்த நலன்கட்குக் கேடானதாகக் கண்டவற்றுட் கிறிஸ்துவ மதத்தின் ஆதிக்கமும் ஒன்று. காலனித்துவமும் கிறிஸ்துவ திருச்சபை அதிகார பீடங்களும் கைகோர்த்து நின்ற சூழலில் அத்தகைய பகைமை இயல்பானதேயாயினும் ஒருபுறம் கிறிஸ்துவ அதிகார பீடத்திற்கும் சுரண்டும் வர்க்கங்கட்கும் மறுபுறம் ஒடுக்கப்பட்டுச் சுரண்டப்பட்ட கிறிஸ்துவ மக்களுக்குமிடையிலான வேறுபாட்டைச் சிங்கள-பெளத்த தேசியவாதிகளாற் காணமுடியவில்லை.

இத் தேசியவாதத்தின் தலைமை சிங்கள கொவிகம எனப்படும், வேளாள சாதியினரின் கையில் மட்டுமே இருக்கவில்லை. வணிகத் துறையிலும் உத்தியோகங்களிலும் உயர்தொழில்களிலும் மேலேறக் கூடிய நிலையில் இருந்த பிற சிங்களச் சாதிப் பிரிவினரும் சிங்கள-பெளத்தத்தின் எழுச்சிக்குத் துணை நின்றார்கள். இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வியாபாரிகளிடையிலான போட்டியின் அடிப்படையிலேயே முஸ்லீம் மக்களுக்கு எதிரான சிங்களப் பேரினவாதத் தாக்குதல் நிகழ்ந்தது. இதைச் சிங்கள முஸ்லீம் கலவரம் என அழைத்தாலும், இதன் காரண கர்த்தாக்கள் சிங்களப் பேரினவாதிகளே. பிரித்தாளும் தந்திரத்திற் கைதேர்ந்த பிரித்தானிய காலனித்துவம், இந்த மோதல் ஈற்றில் தமது அதிகாரத்துக்கு எதிரான எழுச்சிக்கு வழிகோலும் என்று அஞ்சியதாலேயே அதை அடக்க முற்பட்டது. அதற்குத் தலைமை தாங்கிய சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் சிறையிலிடப்பட்டனர். இத்தருணத்திற் சிங்களத் தலைவர்கட்குச் சார்பாகப் பிரித்தானிய ஆட்சியிடம் பரிந்துரை செய்யத் தமிழ் உயர் குடிகளின் பிரதிநிதிகள் முன்வந்து அவர்களை விடுவிப்பதில் வெற்றியும் கண்டனர்.

### சிங்கள தமிழ் உயர்குடிகளின் வர்க்கஒற்றுமை

வடக்குக் கிழக்கின் தமிழ்த் தலைவர்கள், முக்கியமாக யாழ் மாவட்டத்தின் உயர்சாதி அதிகார வர்க்கத்தினர், ஆங்கிலேய ஆட்சியாளர் தயவிற் தம்மை மேம்படுத்திக் கொள்ள முனைந்தவர்களின் பிரதிநிதிகளே தம்சாதி, வர்க்கம், பிரதேசம் தொடர்பான நலன்களையும் சமுதாயத்தின் மீதான தமது ஆதிக்கத்தையும் வலியுறுத்தும் நோக்கில் அவர்கள் வளர்த்துக் கொண்ட உறவுகள் தவிர்க்க முடியாமல் ஆங்கிலேயருக்கு விசுவாசமாகவும் சிங்கள உயர் குடிகளின் தலைமையுடன் நெருக்கமாகவும் அமைந்தன.

தமிழ் உயர் குடிகளின் வர்க்க நலன்கள் சிங்கள உயர்சாதியினருடன் அவர்கட்கு நெருக்கத்தை ஏற்படுத்தியது வியப்புக்குரியதல்ல. சாதிய ஆதிக்கத்தின் முன் மொழி, சமயம் என்ற பொதுத் தன்மைகளே பலவீனமாகின. வடமேல் மாகாணத் தமிழரும், வன்னி மட்டக்களப்புத் தமிழரும் தரங்குறைந்தவர்களாகக் கருதப்பட்டமையும் மலையகத்தமிழர் இழிவாகக் கொள்ளப்பட்டமையும் இன்னமும் முற்றாக நீங்கிவிடவில்லை. இத்தகைய உயர் குடிகளும் அதன் பிரதிநிதிகளும் தம் சாதி அமைப்பிற்குள் கட்டுப்படாத முஸ்லீம்களை அயலாராகவே கருதியதில் வியப்பில்லை.

தமிழ்ச் சமுதாய அமைப்பும் ஒரு காரணம். 1956 வரை,மட்டக்களப்புத்தமிழர், கொழும்பையும் யாழ்ப்பாணத்தையும் தமது தளமாகக் கொண்ட தமிழ்த் தேசிய வாதத் தலைமையை ஏற்க முற்றாகவே மறுத்தமையை நாம் கருத்திற் கொண்டால் முஸ்லீம்களின் அத்தலைமையை விளங்கிக்கொள்வது எளிது.

### இலங்கையில் முஸ்லீம்கள்:

பிரித்தானிய ஆட்சியின்கீழ் இலங்கையின் முஸ்லீம்கள் இலங்கை சோனகரென்றும் இந்திய சோனகரென்றும் வெவ்வேறாக அடையாளங் காணப்பட்டனர். டச்சுக்காரரின் ஆட்சியின்

> முஸ்லீம் மக்களின் சுயநிர்ணயம் பற்றிய பிரச்சினைகள் மேலும் ஆழமாக விவாதிக்கப்பட வேண்டும். முஸ்லீம்கள் நாட்டின் சகல பகுதிகளிலும் வாழ்ந்தாலும் அவர்களின் சனத்தொகைச் செறிவு வேறுபடுகிறது. அவர்கட்குரிய ஒரு தொடர்ச்சியான நிலப் பிரதேசத்தை வரையறுக்க இயலாமை காரணமாக அவர்கள் இன்னொரு தேசிய இனத்தினர் மத்தியில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களது தேசிய இன உரிமைகட்கும் வதிவிட உரிமை உட்பட பிற அடிப்படை உரிமைகட்கும் தடையாகக் கூடிய அபாயத்தை வடக்கினின்றும் அவர்கள் வெளியேற்றப்பட்டமை எடுத்துக் காட்டியுள்ளது. எனவே முஸ்லீம்கள் ஒரு தேசிய இனமென்ற அடிப்படையில் அவர்களது இருப்பை அவர்களே நிர்ணயிக்கக் கூடிய உத்தரவாதத்தைத் தரவல்ல தீர்வுகட்காக முற்போக்குச் சக்திகள் முன்னின்று போராட வேண்டும்.

போது, இன்றைய இந்தோனினேயாவின் ஜாவாத்தீவைச் சேர்ந்த மக்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டனர். இவர்கள் அன்றுமுதல் இன்னமும் மலாயர் என்றே அழைக்கப்படுகின்றனர். இவர்களைவிடச் சிறிய தொகைகளில் தென்னாசியாவின் பிற பகுதிகளினின்று வந்த முஸ்லீம்களும் உள்ளனர். கோல்புறூக் அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் மிகச் சிறுபான்மையான இனங்களின் பிரதிநிதி பிரதிநிதிகளை நியமிக்கும் நோக்குடன் ஆறு பாராளுமன்ற ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன. பறங்கியரும், மலாயரும் இவ்வாறு நியமிக்கப்பட்டனர். இந்த நடைமுறை பின்னர் கைவிடப்பட்டது.

மலாயரும் இலங்கைச் சோனகரும் தமக்கென வேறுபட்ட சங்கங்களை அமைத்துக் கொண்டனர். மலாயரிற் கணிசமானோர் தமிழ் பேசுவோராக இருந்ததும் குறிப்பிடத்தக்கது. (இலங்கை வானொலியில் தமிழ் ஒலிபரப்பிலேயே மலாயருக்கான நிகழ்ச்சிகள் அமைந்தமையும் கவனத்துக்குரியது.) எனினும் எண்ணிக்கையில் மிகச் சிறியவர்களான மலாய் இனத்தவர் இலங்கையின் இனவாத அரசியல் எழுச்சியின் பின் அரசியல் ரீதியாக மேலும் பலவீனமடைந்து பின்தங்கிய ஒரு சமுதாயமாகினர்.

முஸ்லீம்களில் இலங்கைச் சோனகரே எண்ணிக்கையிலும் அரசியல், சமூகச் செயற்பாட்டிலும் முக்கியமானவர்களாக இருந்தனர். வடக்கில், முக்கியமாக, மன்னார் மாவட்டத்திலும் கிழக்கின் திருகோணமலை மாவட்டத்திலும் இன்றைய அம்பாறை மாவட்டத்தை உள்ளடக்கிய மட்டக்களப்பு மாவட்டத்திலும் வடமேற்கிற் புத்தளப்பகுதியிலும் விவசாயம் மற்றும் கைத்தொழில்களில் ஈடுபட்ட முஸ்லீம்களைப் போலன்றி, இலங்கையின் பிற பகுதிகளிற் பரவியிருந்த முஸ்லீம்கள் வியாபாரத்தில் அதிகளவில் ஈடுபட்டிருந்தனர். மாநகரங்களின் கூலி உழைப்பாளர்களாகவும் முஸ்லீம்கள் இருந்தனர்.

பல்வேறு வரலாற்றுக்காரணங்களால் வடக்கு கிழக்கின் தமிழரையும் சிங்கள வரையும் விடக் குறைவான கல்வி வாய்ப்புக்களையே பெற்றிருந்த முஸ்லீம்களின் அரசியற் தலைமை, அவர்களிடையே இருந்த செல்வந்தர்களான வியாபாரிகளதும் நிலவுடமையாளர்களதும் கையிலேயே இருந்தது.

வடக்கு கிழக்கின் தமிழ்த்தலைமைகள் எவ்வாறு தமது உயர் வகுப்பினரது நலன்களைப் பேணத்தமிழ்த் தேசிய வாத அரசியலைப்பயன்படுத்தினரோ அவ்வாறே முஸ்லீம்களின் தலைமையும் செயற்பட்டது. பிரித்தானியரது ஆட்சியின் போதும் இலங்கையின் சுதந்திரத்தையொட்டியும் பட்டம் பதவிக்காகக் காட்டிக்கொடுத்தும் கட்சிமாறியும் செயற்பட்ட தமிழ்ப் பிரமுகர்களைப் போலவே இந்த முஸ்லீம் தலைவர்களும் செயற்பட்டனர்.

### 'தமிழ் பேசும் மக்கள்' என்ற கோட்பாட்டின் தோல்வி

தமிழ் பேசும் இனம் என்ற பேரிற் தன் அரசியலைத் தொடங்கிய தமிழரசுக் கட்சியின் கீழேயே முதற்தடவையாக, தமிழ்த் தேசியவாத அரசியற் தலைமையை முஸ்லீம் அரசியல் வாதிகள் ஏற்றனர். ஆயினும் தமிழரசுக்கட்சி மலையகத் தமிழரது வாக்குரிமையும் குடியுரிமையும் பாதிக்கப்பட்ட பின்னரே தமிழ்த் தலைமையின் ஒரு பகுதி தமிழினம், தமிழ் பேசும் மக்கள் என்ற கருத்துக்களை முன்வைத்தது. எனினும் முஸ்லீம்களையும், மலையகத் தமிழர்களையும் தனித்தனியான இனங்களாகக் காணும் தேவையை மறுதலிக்குமளவிற்கு தமிழ்த் தலைமையால் தமிழ் பேசும் மக்களை ஐக்கியப்படுத்த முடியவில்லை. தமிழ் பேசும் மக்கள் என்ற பேரில் அரசியல் நடத்திய தமிழ்த் தேசியவாத தலைமை சாதியத்தையே எதிர்த்து முறியடிக்கத் திராணியற்று இருந்த போது, முஸ்லீம்களையும் மலையகத் தமிழரையும் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் தமிழருடன் எவ்வாறு ஐக்கியப்படுத்தியிருக்க முடியும்? தன் அரசியற் பாரம்பரியத்தை இத்தலைமையால் எளிதாக நிராகரிக்க முடியவில்லை. சிங்களப் பேரினவாதம் ஏற்படுத்திய நெருக்கடிகளே தமிழ் பேசும் மக்கட் பிரிவுகளிடையில் போராட்ட ஐக்கியத்துக்கு வாய்ப்பளித்தன. முஸ்லீம்களின் அரசியற் தலைமை பிற தமிழ் பேசும் மக்களினது தலைமைகளினின்று வேறுபட்டும் தனித்தும் இருந்தமைக்குப் பிரித்தானியரது பிரித்தாளும் தந்திரங்களை விடச், சாதிய அடிப்படையிலான

> தமிழ் பேசும் மக்கள் என்ற பேரில் அரசியல் நடத்திய தமிழ்த் தேசியவாத தலைமை சாதியத்தையே எதிர்த்து முறியடிக்கத் திராணியற்று இருந்த போது, முஸ்லீம்களையும் மலையகத் தமிழரையும் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் தமிழருடன் எவ்வாறு ஐக்கியப்படுத்தியிருக்க முடியும்?தமிழ் பேசும் மக்கள் என்ற பேரில் அரசியல் நடத்திய தமிழ்த் தேசியவாத தலைமை சாதியத்தையே எதிர்த்து முறியடிக்கத் திராணியற்று இருந்த போது, முஸ்லீம்களையும் மலையகத் தமிழரையும் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் தமிழருடன் எவ்வாறு ஐக்கியப்படுத்தியிருக்க முடியும்?

எவ்வளவு தூரத்துக்கு முஸ்லீம் மக்களது நலன்களை பேணும் என்ற நியாமான அச்சம் முஸ்லிம் மக்களிடையே இருந்தது. தமிழரசுக் கட்சியினர் தமிழர் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஒரு சமஷ்டி அரசைக் கோரிய போது, அது பிற மாகாணங்களில் வாழ்ந்த தமிழ்ப் பேசும் மக்களது, குறிப்பாக மலையகத் தமிழரதும் முஸ்லீம்களதும் நலன்களைப்பற்றித் தீர ஆராயவில்லை. தமிழரசுக்கட்சி மலையக முஸ்லீம் மக்களுக்குத் தலைமை தாங்க விரும்பிய அளவுக்கு அம்மக்களை ஒரு சமமான பங்காளிகளாகக் கொண்ட ஒரு தலைமையை அமைக்கத்தக்கதாக இருக்கவில்லை. அக்கட்சியின் வேலைமுறைகளும் போராட்டங்களும் வடக்கு கிழக்கு மாகாணத்தமிழரில் ஒரு பகுதியினரது நலன்களையே பேணுகிற நோக்கில் அமைந்தமையும் முஸ்லீம் மக்களின் சார்பில் அவர்களது நலன்களைப் பேணும் கோரிக்கைகளை வலியுறுத்தத்தவறியமையும் முஸ்லீம் மக்களிடையே தமிழரசுக்கட்சிக்குச் செல்வாக்கு வளரத்தடையாகின.

முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாகவும் ஒப்பிடத்தக்களவில் தமிழர்களும் வாழும் பாராளுமன்றத்தேர்தற் தொகுதிகளிற், தான் வெற்றி பெறுவதற்கு ஏதுவாக முஸ்லீம் பாரளுமன்ற வேட்பாளர்களைத் தெரிந்து தமிழரசுக்கட்சி நியமனஞ்செய்தது. தமிழரசுக் கட்சியின் பலவீனத்தை அறிந்த சில சந்தர்ப்பவாதிகள், தேர்தலில் வென்ற பிறகு, கட்சி மாறினர். இது முஸ்லீம்கள் பற்றிய ஒரு தவறான கருத்தைத் தமிழ் மக்களிடையே ஏற்படுத்தியது. தமிழ்த்தேசியவாதத் தலைமையைப்பலவீனப்படுத்தவும் தமிழருக்கெதிரான இன ஒடுக்கல் அரசியலில் முஸ்லீம்களை நடுநிலைப் படுத்தவும், சிங்களப் பேரினவாத அரசுகள் இந்தத் தலைவர்கட்குப் பதவிகளையும் சலுகைகளையும் வழங்கினர். யூ.என்.பி 1956இல் தோற்கடிக்கப்பட்டதன் பின் ஏற்பட்ட அரசியற் மாற்றங்கள் பின்தங்கிய சமுதாயங்கட்குச் சில நன்மைகளை வழங்கின. இதுவும் அரசாங்கப் பதவிகளும் அரசாங்க ஆதரவும் இந்த அரசியல் வாதிகளது அரசியற் செல்வாக்கைத் தக்கவைக்க உதவின. இவர்களது அரசியற் சூதாட்டத்தால் அதிக நன்மை அடைந்தோர் வசதி படைத்த முஸ்லீம்களே.

உண்மையிற் தமிழ்த்தலைவர்கள் முன்னைய காலங்களில் நடந்து கொண்ட விதமாகவே, 1956க்குப் பின்னைய காலத்தின் கிழக்கு மாகாண முஸ்லீம் தலைவர்கள் நடந்தனர்: தென்னிலங்கையின் முஸ்லீம் அரசியல்வாதிகளின் கட்சிச் சார்புகள் கூடிய உறுதியுடன் இருந்தன. இடதுசாரி அரசியலிலும் முற்போக்கு இலக்கியத் துறையிலும் பங்குபற்றிய முஸ்லீம்கள் கிழக்கிலங்கையின் முஸ்லீம் பாராளுமன்ற அரசியல்வாதிகளினின்று முற்றிலும் வேறுபட்டவர்களாகவும் உறுதியான அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டவர்களாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கிலங்கையில் தமிழரசுக் கட்சித் தலைமைக்கும் கட்சிமாறிய முஸ்லீம் அரசியல்வாதிகட்குமிடையிலான முரண்பாட்டின் விளைவாக இடையிடையே தமிழ்,முஸ்லீம் மோதல்களும் ஏற்பட்டன. அத்துடன் தமிழ் முஸ்லீம் நிலவுடமையாளர்களிடையே இருந்த மனக் கசப்பும் இத்தகைய மோதல்களை ஊக்குவித்தன. எவ்வாறாயினும், சிங்களப்பேரினவாதமும் திட்டமிட்ட குடியேற்றமும் தொடர்ந்து வந்த சூழ்நிலையிற் தமிழரும் முஸ்லீம்களும் சிங்களப் பேரினவாதத்திற்கு முகங்கொடுக்க வேண்டிய தேவையை உணர்ந்தனர். மட்டக்களப்புப் பகுதிக்கு வெளியே தமிழரும் முஸ்லீம்களும் சேர்ந்து வாழ்ந்த பகுதிகளில் மிகவும் சுமுகமான உறவே நிலவியது.

### முஸ்லீம்களை ஒதுக்கிய 'தமிழ் தேசிய வாதம்':

தமிழ் தேசியவாதத்தலைமை, முஸ்லீம் மக்களைக் கலந்தாலோசியாது அவர்கட்கும் சேர்த்துத் தீர்வுகளைத் தேடும் பாவனையிற் செயற்பட்டதன் மூலம், முஸ்லிம் மக்களைத் தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்படுத்த உதவிய போதிலும், 1961ம் ஆண்டின் சத்தியாக்கிரகம் முஸ்லீம் மக்களது ஆதரவைப் பெற்றது. இவ்வாறே, 1958,1977,1983ம் ஆண்டுகளின் வெறியாட்டங்களின் போதும், முஸ்லீம்கள் தமிழர்கட்கு மிகவும் அனுதாபமாகவும் ஆதரவாகவுமே நடந்தனர்.

1977க்குப் பிறகு யூ.என்.பி. அரசாங்கத்தின் பேரினவாதம் கிழக்கு மாகாணத்தைத் துரிதமாகச் சிங்கள மயப்படுத்தும் முயற்சியில் முனைப்புடன் இறங்கியபோது முஸ்லீம்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். 1983ம் ஆண்டின் தமிழர் விரோத வன்முறையையடுத்துத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைமை முற்றாக நிராகரிக்கப்பட்டு விடுதலைப் போராட்ட இயக்கங்கள் எழுச்சி பெற்ற போது அவற்றுக்கு முஸ்லீம் மக்களது பரவலான அனுதாபம் இருந்ததோடு சில முஸ்லீம் இளைஞர்களும் அவற்றில் இணைந்தனர். இக்கால கட்டத்திலேயே, வசதி படைத்த முஸ்லீம்களின் சந்தர்ப்பவாத அரசியலை நிராகரிக்கும் முஸ்லீம் தேசியவாத வெகுஜன சக்திகளும் தோன்றின. தமிழர் விடுதலை இயக்கங்கள் தமது அரசியல் தீர்வுகளையும் நடவடிக்கைகளையும் முஸ்லீம்கள் நிபந்தனையின்றி ஆதரிக்க வேண்டும் என எதிர்பார்த்தோடு தம்மிடையே இருந்த இயக்க முரண்பாடுகளைத் தீர்க்கக் கையாண்ட வன்முறையைத் தமக்கு விரோதமான அல்லது துரோகமான நபர்கள் எனக் கருதிய முஸ்லீம்கள் மீதும் பிரயோகித்ததன் விளைவாக, முஸ்லீம்களின் நல்லெண்ணத்தை இழந்தனர்.

சிவம்

1987க்கும் 1989க்கும் இடையில் இந்திய இராணுவம் வடக்குக் கிழக்கில் நிலைகொண்டிருந்த காலத்தில் இந்திய ஆதரவிற் செயற்பட்ட சில முக்கிய விடுதலை இயக்கங்கள் இந்தியப் படையினரின் ஆதரவுடன் முஸ்லீம்கள் மீது தொடுத்த தாக்குதல் தமிழ்-முஸ்லீம் உறவுக்கு ஒரு அடியாயிற்று. இந்தியப் படைகளின் வெளியேற்றத்தின் பின்பு விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லீம்களுக்குமிடையில் நல்லுறவுக்கான சூழ்நிலை இருந்தது. ஆயினும் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்ட காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலை உட்பட அண்மையில் நடந்த பொலன்னறுவ மாவட்டப் படுகொலைகள் வரையிலான தாக்குதல்கள் முஸ்லீம்களிடையே தமிழர் தலைமை பற்றிய சந்தேகங்களை வலிமைப்படுத்தியுள்ளன. முஸ்லீம்கள் வடக்கிலிருந்து விரட்டப்பட்டமையை முஸ்லீம் சமுதாயம் மறப்பது கடினம்.

### முஸ்லீம்களின் தனித்துவம்:

மேற்குறிப்பிட்டவற்றின் காரணமாக சிங்களப் பேரினவாதத்துடன் கூட்டுச் சேர்ந்து தம் சுயலாபத்தை பேண முனையும் முஸ்லீம் தலைவர்கள் முஸ்

11

சின்னச் சின்னக் காரணத்தால்
கன்னமதில் நீர்த்துளிகள்
என்னை மட்டும் புரிந்து கொண்டால்
அத்தனையும் தேன்துளிகள்
இப்படிக்கு
கணிதம்

இது கணிதபாடத்தைப் போதிக்கும் ஆசிரியர் ஒருவரது விளம்பரம். கணித பாடத்தில் சித்திபெற தன்னை நோக்கி மாணவர்களை வரச் செய்வதற்காக பத்திரிகைகளில் இப்படி ஒரு விளம்பரம் கொடுத்திருக்கிறார் அவர்.

வெறும் பத்திரிகை விளம்பரங்கள் மட்டுமல்ல. இப்போது சினிமாப் போஸ்ரர்கள், பிறவிளம்பரப் போஸ்டர்களை எல்லாம் தூக்கி வீசிவிட்டு தெருவோரச் சுவர்களில் எல்லாம் இடம் பிடித்திருக்கின்றன ரியூட்டரிப் போஸ்டர்கள்.

'யாழ் பிரபல ஆசிரியர்' என்ற பதம் ஒரு விசேட தகுதியாக ஆசிரியர்களின் பெயர்களின் முன்னால் போடப்படுகிறது. மாணவர்கள் பரீட்சையில் நிச்சயமாக சித்தி பெற அருமையான சந்தர்ப்பம் என்று அவர்களது ஆவலைத் தூண்டி தடுமாற வைக்கும் 'தேசிய லொத்தர் சபை' பணியிலான விளம்பரங்கள் வெளிவருவது இப்போதெல்லாம் பத்திரிகையில் மிகச் சாதாரணமாகிவிட்டது.

அரசாங்கத்தின் கல்விக் கொள்கைப் படி மூன்று ஆண்டுப் படிப்பை மூன்றே மணி நேரப் போட்டிப் பரீட்சையில் ஒரு மாணவன் எழுதும் பதிலிலிருந்து கணிப்பிடும் முறையே நிலவுவதால்,பரீட்சைகளில் எப்படி பாஸ் செய்வது என்று 'கோச்' பண்ணப்பட வேண்டிய மாணவர்களது தேவையை நிறைவு செய்யும் நிலையங்கள்ாக இந்த ரியூட்டரிகள் உள்ளன.

பரீட்சையில் சித்தியடைவது மாணவர்களது கையிலல்ல, ரியூட்டரிகளதும், ஆசிரியர்களதும், அவர்கள் கற்பிக்கும் தொழில்நுட்பங்களிலும்' தான் தங்கியிருக்கிறது என்பதே இன்றைய பாணியாகிப் போய்விட்டது. ஒரு ரியூட்டரி ஆசிரியர் சொல்கிறார்: என்னிடம் வரும் மாணவர்களுக்கு நான் எல்லாத்தையும் சொல்லி விடுகிறேன். அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு அப்படியே ஒப்புவித்து விட வேண்டியது தான். அப்படியும் செய்யத் தெரியாதவர் 'பெயில்' பண்ணுவது தவிர்க்க முடியாது..... பத்து வருட வினாத்தாள்களை 'பேப்பர் கிளாஸ்' நடத்தி செய்துவிட்டு அதை வைத்துக் கொண்டு எப்படி கேள்வி வரலாம் என்றும் ஊகித்து சொல்லிக் கொடுத்து விட்டால்... பிள்ளை A அல்லது B எடுக்கிறதில் என்ன கஸ்ரம்?''

உண்மைதான் ஆனால் அவர்களது அறிவு?

''அறிவை அவர்கள் விரும்பினால் பிறகு தேடிக் கொள்ளலாம். இப்ப தேவை சோதனை பாஸ் பண்ணிறது தான்...'

இந்த ஆசிரியரின் 'விரும்பினால்' என்பதில் இருந்த அழுத்தம் யாரையும் திடுக்கிட வைக்கும்!




## ஏன் டியூட்டரிகள் தொடங்கின?

- ஆசிரியர்களுக்கான அரசாங்க சம்பளம் போதாமை
- போட்டிப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட கல்வி அமைப்பு முறையின் காரணமாக அதற்கேற்றாற் போல் ரியூட்டரிகள் செயல்படுதல்
- பாடசாலைக் கல்வியிலுள்ள கற்பித்தல் பற்றாக்குறை
- கற்பித்தல் சந்தைவாய்ப்பு அதிகரிப்பு
- பாடசாலை அனுமதி கிடைக்காத மாணவர்கள் மற்றும் பாடசாலை சென்று படிக்க சந்தர்ப்பம் இல்லாதவர்கள்,திரும்பவும் பரீட்சைக்கு தோற்ற இருப்பவர்கள் போன்றவர்களுக்கு ரியூட்டரியே சாதகமாக உள்ளது.
- க.பொ.த(உ/த) மற்றும் பல்கலைக்கழக அனுமதி புள்ளி அதிகரிப்பு.

மான இந்த ரியூட்டரிகள் இன்று தமிழ் மக்கள் வாழும் எல்லாப் பிரதேசங்களிலும் பணம் தரும் தொழில் ஸ்தாபனங்களாகப் பல்கிப் பெருகியுள்ளன.


அதுவும் குறிப்பாக கொழும்பில் இன்று பல்வேறு புதுப்புது வடிவங்களில் மாணவர்களிடமிருந்து பணத்தைக் கறப்பதற்கு புதிய புதிய வழிமுறைகளைக் கையாளும் நிறுவனங்களாகியுள்ளன. பிற தொழில் ஸ்தாபன்ங்களுக்குள்ள வரிகளோ பிற கட்டுப்பாடுகளோ இல்லாத 'சிறப்புரிமை' பெற்ற வியாபாரமாக மாறியுள்ள இந்த ரியூட்டரிகள் ஆசிரியர் மாணவர்களுள்ளிட்ட மொத்த சமூகத்தின் மீதும் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் இலேசாக தட்டிக் கழித்து விடக் கூடியவையல்ல!

மாதமொன்றிற்கு பலவழிகளிலும் ஐயாயிரம் முதல் ஒருலட்சம் வரை (வருமான வரி கூட இல்லாமல்) சம்பாதிக்கக் கூடிய ஆசிரியர்களும், ரியூட்டரிகளும் நடாத்தி வரும் இந்த 'வியாபாரம்' மாணவ சமுதாயத்தைத் தொடர்ந்து மந்தமூட்டி வருகின்றதென்றே சொல்ல வேண்டும்.

## ஒய்வு நேரத்தை விழுங்கும் ரியூட்டரிகள்:

மாணவர்கள் தமது சந்தேகங்களை கேட்டுத் தெளிந்து கொள்வதற்காகவும் சில பாடங்களில் பாட போதனைகள் ஒழுங்காக நடக்காததாலும் போட்டிப் பரீட்சைக்கு முகம் கொடுப்பதற்காக பிரத்தியேகமாக சில மணி நேரங்கள் 'கேட்டுப் படிக்கும்' அவசியம் உருவானதிலிருந்து தான் இந்த 'ரியூசன்'கள் முளை விடத் தொடங்கின.

ஆனால் இப்போதெல்லாம் பாடசாலைகட்கு சமாந்தரமான 'தனியார் கல்வி நிலையங்களாக' முழுப்பாடத்திட்டத்தையுமே போதிக்கும் இரண்டாவது பாடசாலைகளாக ரியூட்டரிகள் உருமாறி விட்டன. பாடசாலைக்கு போகா விட்டாலும் மாணவர்கள் ரியூட்டரிக்கு போவது அவசியம் என்ற பிரமையை ஏற்படுத்தும் விதத்தில் மூளைச் சலவை செய்யும் புதிய விளம்பர உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றால் தெரிந்தோ தெரியாமலோ மாணவர்கட்கு ஏற்படுகின்ற




பிரச்சினைகள் ஏராளம். முதலாவதாக மாணவர்களது பொக்கிசமான அவர்களது ஓய்வு நேரத்தை ரியூட்டரிகள் விழுங்கி விடுகின்றன.

சர்வதேச ரீதியாக ஒரு மாணவன் கற்றல் கற்பித்தல் செயல்முறையில் பங்கு கொள்ளும் நேரம் என அங்கீகரிக்கப்பட்டது 6 மணித்தியாலங்கள் மட்டுமே. மீதியாகவுள்ள நேரங்கள் மாணவர்கள் ஓய்வு எடுப்பதற்கும் விளையாட்டில் பங்கு பற்றுவதற்கும், வேறு தமக்கு பிடித்தமான பொழுது போக்குகளில் ஈடுபடுவதற்கும், தானாக கற்றலில் ஈடுபடுவதற்கும் என்றே ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்று பாடசாலை நேரங்களைத் தவிர மீதி நேரங்களை இத்தனியார் கல்வி நிலையங்கள் ஆக்கிரமித்துள்ளன. பாடசாலை முடிவுற்று மாலை நேரங்களில் மாணவர்கள் இக் கல்வி நிலையங்களுக்கு படையெடுக்கின்றனர். சனி, ஞாயிறு விடுமுறை தினங்களும் விதிவிலக்கல்ல. போதாக்குறைக்கு தவணை விடுமுறை நாட்களையும் இவை விழுங்கி விடுகின்றன.

இது அவர்களது ஓய்வு நேரத்தை சிதைத்து விடுகிறது. ஒரு மனிதனுக்கு உழைப்பு எவ்வாறு அவசியமோ அவ்வாறே ஓய்வும் அவசியம். ஆனால் இது மாணவர்களுக்கு கிடைப்பதேயில்லை. ''ஓய்வு இன்மையால் மாணவர்கள் தமது உணவு, உடல் ஆரோக்கியம் சம்பந்தமான விடயங்களில் கூட அதிகம் கவனம் செலுத்த முடிவதில்லை'' என்கிறார் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர்.

''ஓய்வு நேரம் இல்லாமையால் விளையாட்டுக்களில் மாணவர்கள் ஈடுபடுவதும் இன்று குறைந்து வருகின்றது. விளையாட்டில் ஈடுபட வேண்டுமாயின் மாலை நேரங்களிலும் சனி, ஞாயிறு கிழமைகளிலும் மாணவர்கள் பயிற்சிக்கு பாடசாலைகளில் நிற்க வேண்டும். இந்நேரங்களில் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்ல வேண்டியிருப்பதனால் விளையாட்டுக்களில் பங்கு கொள்வதைத் தவிர்த்து விடுகின்றனர்.'' இது இன்னொரு ஆசிரியரின் முறைப்பாடு.

## ஆளுமையையும் அபகரித்து விடுகின்றன:

கொழும்பில் ஒப்பீட்டு ரீதியில் தனியார்க்ல்வி நிலையங்களிலான நாட்டம் சிங்கள மாணவர்களை விட தமிழ் மாணவர்கள் மத்தியிலேயே அதிகம் உள்ளது. மாணவர்களை வேறு பயிற்சிகளுக்கு சேர்க்கும் போது தமிழ் மாணவர்கள் எல்லாம் ஓடி ஒளிந்து கொள்கின்றார்கள் என்பது ஆசிரியர்களது பொதுவான குற்றச் சாட்டாக இருக்கிறது.

''விளையாட்டு என்பது வெறுமனே உடற்பயிற்சியல்ல. அது மனித ஆளுமையையும்,அறிவையும் நுண்மதி ஆற்றலையும் அதிகம் விருத்தி செய்கின்றது என்பதை இன்று யாரும் கவனிப்பதில்லை'' என்று குறைபட்டுக் கொள்கிறார் உடற்பயிற்சி போதிக்கும் ஒரு ஆசிரியர்.

மாணவர்களின் ஓய்வு நேரமின்மையால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் பற்றி பின்வரும் தகவல்களைத் தருகின்றார் உயர்தர மாணவர்களுக்கு அரசியல் விஞ்ஞானம் போதிக்கும் ஆசிரியர் ஒருவர்.

- விளையாட்டு மட்டுமல்ல ஏனைய கலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றல், மன்றங்களில் பங்குபற்றல், ஆக்க இலக்கிய முயற்சிகளில் பங்கு பற்றல், சாரணீயத்தில் பங்கு பற்றல், என்பவற்றிலும் கூட மாணவர்களின் அக்கறை குறைந்து வருகின்றது. வருடாந்தம் பாடசாலைகளில் நடைபெறுகின்ற விழாக்களில் கூட கலை நிகழ்ச்சிகளில் மாணவர்களை பங்கு கொள்ளச் செய்வதற்காக மாணவர்களுடன் பெரிய போராட்டங்களை ஆசிரியர்கள் நடத்த வேண்டியுள்ளது. இப் போராட்டங்கள் பொதுவாக பயிற்சிக்கான நேரத்தை ஒதுக்குவதிலேயே ஏற்படுகின்றன. வருடத்தில் எப்போதாவது நடைபெறுகின்ற விழாக்களுக்கான பயிற்சிக்கு கூட இந்நிலை என்றால் நாள்தோறும் பயிற்சிகளை மேற்கொள்கின்ற நிகழ்ச்சிகளை உருவாக்க எவ்வாறு முடியும்.
- பாடசாலையில் நாடகப்பட்டறை, எழுத்துப் பட்டறை போன்றவற்றை நடத்த முடிவதில்லை. அதற்கும் மாணவர்களுக்கும் நேரமில்லை; ஆசிரியர்களுக்கும் நேரமில்லை என்ற நிலையே உள்ளது. காரணம் இருவருமே ரியூட்டரிக்கு செல்ல வேண்டியவர்களாக உள்ளனர்.

## மட்டமான பொதுஅறிவுள்ள ஆசிரியர்களும் மாணவர்களும:

- ஓய்வு நேரம் இன்மையால் பொது அறிவை மாணவர்கள் தேடிக் கொள்ளுதலும் குறைந்து போகிறது. பொதுஅறிவு என்பது பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் வாசித்தல், பல்வேறு துறைகள் பற்றிய கருத்தரங்குகளில் பங்குபற்றல், தொலைக்காட்சி, வானொலி என்பனவற்றைப் பயன்படுத்தல், நூல் நிலையங்களைப் பயன்படுத்தல், பல்வேறு இடங்களைப் பார்வையிடல் என்பவற்றின் மூலமே கிடைக்கின்றது. இவற்றுடனான பரிச்சயம் இன்றைய மாணவர்களுக்கு குறைவாகவே இருப்பதனால் அவர்களின் பொது அறிவும் மிகத் தாழ்ந்த நிலையிலேயே உள்ளது.
- மாணவர்களிடம் மாத்திரமல்ல. ஆசிரியர்களிடம் கூட பொதுஅறிவு மட்டமானதாகவே உள்ளது. பட்டதாரிகளை ஆசிரியர்களாக சேர்ப்பதற்காக அரசாங்கத்தினால் நடாத்தப்பட்ட பொதுப் பரீட்சையில் பொதுஅறிவில் மிகவும் குறைவான புள்ளிகளையே அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்கிறது ஒரு செய்திக்குறிப்பு.

இப்பொதுஅறிவுக் குறைவினால் பரீட்சைகளின் போது பொது அறிவோடு தொடர்புடைய வினாக்கள் கேட்கப்படுகையில் மாணவர்கள் அவ் வினாக்களுக்கு விடை எழுதாமல் விடுவதே வழக்கமாக உள்ளது. க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளில் வர்த்தகம், பொருளியல், அரசறிவியல், அளவையியல்,தமிழ் என்பவற்றில் பகுதி2 வினாத்தாள்கள் அண்மைக்காலமாக பொது விடயங்களையும், நடைமுறை விடயங்களையும் ஒட்டியுமே அதிகமாக வருகின்றன. மாணவர்களின் பொது அறிவக் குறைவினால் இவற்றில் குறைந்த புள்ளிகளையே அவர்கள் எடுக்கின்றனர். உதாரணமாக அரசறிவியலில் அரசியற் கட்சிகள் சம்பந்தமான வினாக்கள், பிரதான கட்சிகளின் அண்மைக்



**மாணவர் ஆளுமையை அபகரித்து விடுகிற ஒரு தொழில் நிறுவனம்**

-என




## காற்றுள்ள போதே தூற்றிக் கொள்கிற.....

- இலங்கை அரசின் கல்வித்திட்டத்தின்படி கல்விமுறையானது பரீட்சையை நோக்கிக் குவிக்கப்பட்டமையால் மாணவர்கள் பரீட்சையையே நோக்கமாகக் கொள்கின்றனர். பரீட்சைக்கேற்ப கற்பிக்கும் ரியூட்டரிகளில் மாணவர் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.
- கண்டிப்பின்மை - விரும்பினால் வரலாம். வராமலும் விடலாம். படிப்பில் கவனம் செலுத்துவது செலுத்தாததை கவனத்தில் எடுப்பதில்லை. பயிற்சிகள், வீட்டு வேலைகள் தரப்படாது. தந்தாலும் திருத்தப்படமாட்டாது. இவை மாணவர்களைப் பொறுத்தளவில் சந்தோஷமான விடயங்கள்.
- அலுப்புத்தட்டாமல் இருக்க வேண்டும் என்பதற்காக தேவையற்ற இரட்டை அர்த்தம் தொனிக்கும் பகிடிகள். மாணவர்களின் பலவீனமான மனவியல்பை பயன்படுத்தல். மலினமான நகைச்சுவை, கோமாளி வேடம் என்பவற்றை ஆசிரியர்கள் சர்வசாதாரணமாக செய்வார்கள்.
- ஆண் பாடசாலைகள் பெண் பாடசாலைகள் என்று பால் வேறுபாடுகளைக் கொண்ட வகையில் பாடசாலைகள் இயங்குவதால் ஆண்,பெண் இருசாரரும் ஒரே இடத்தில் கூடுவதை விரும்பும் மாணவர்களின் மனநிலை ரியூட்டரிக்கு சாதகமாக உள்ளது.
- யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சியை அறிந்து கொண்ட மாணவர்கள் யாழ் ஆசிரியர்களிடம் கற்றால் சித்தியடையலாம் என்ற எதிர்பார்ப்புக்கேற்ப யாழ் ஆசிரியர்களைக் கொண்டு வகுப்புக்களை நடத்துதல் (இன்று கொழும்பில் பிரபல யாழ் ஆசிரியரின் ... என்ற வாசகம் கொண்ட போஸ்டர்களும் விரம்பரங்களும் இதற்கு சான்று பகர்கிறது யாழ்ப்பாணத்திலேயோ பிரபல மகாஜன கல்லூரி, இந்துக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி என விளம்பரப்படுத்தப்படுகின்றது)

## பெருவருமானம் ஈட்டும் தொழில் நிறுவனங்கள்:

மாரிகாலம் வந்தால் தான் புற்றீசல்களைக் காணமுடியும். ஆனால் வருடம் 365 நாட்களும் நாடுமுழுவதும் காணக் கூடியதாக புற்றீசல்களை விட அதிகமாகப் பரவியுள்ளன ரியூட்டரிகள்.

தமிழ் மக்கள் மத்தியில் 70களில் யாழ்ப்பாணத்தில் முதன்முதலில் அறிமுக






பல்கிப்பெருகும்
ூட்டறிகள் பற்றிய
ல அவதானிப்புகள்
மரன் -



பதாக வரு
து. கடந்த
ா.த (உ/த)
ாத்தாளில்
சியற் கட்சி
ஏற்பட்ட
டிருந்தது.
ரிகைகளை
ழுத முடி
பாடத்தில்
ர் இலக்கி
தாடர்பாக
கூட அது
கள், சஞ்சி
விட்டால்
வு நேரம்
கவும் முடி

களுடைய பொதுவான கருத்து ''இந்தத் தடவை வினாத்தாள் கஷ்டம்'' என்பதே ஆகும்.

### பாடசாலையில் கற்பித்தலில் கவனமற்ற ஆசிரியர்கள்:

* ரியூட்டரியினால் உருவாக்கப்பட்டுள்ள இன்னோர் பிரச்சினை ரியூட்டரியில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் பாடசாலையில் கற்பிப்பதில் போதியளவு அக்கறை செலுத்தாமை ஆகும். பாடசாலைக்கு வெளியே கற்பித்தலில் அதிக கூடிய கவனம் செலுத்தவேண்டி இருப்பதால் பாடசாலையில் கற்பித்தலில் அதிகளவு அக்கறை செலுத்துவதில்லை. பாடசாலை மாணவர்களின் வினாத்தாள்களை திருத்துதல், பாடசாலையின் ஏனைய நிகழ்ச்சிகளில் பங்குபற்றல் என்பவற்றிலும் அதிகளவு அக்கறை செலுத்துவதில்லை. சில ஆசிரியர்கள் மாணவர்களின் வினாத்தாள்களைத் திருத்தாமல் கூடப் புள்ளிகளை வழங்குவதுண்டு. பெரும்பாலான ரியூசன் ஆசிரியர்கள் தமது ஓய்வு பெறும் இடமாகவே பாடசாலைகளைக் கருதுகின்றனர். ரியூட்டரிக்குச் செல்லாத செல்ல வசதியற்ற மாணவர்களே இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

பாடசாலையில் ஒழுங்காக கற்பித்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி மாணவர்கள் ரியூசனுக்கு செல்லத்தான் செய்கிறார்கள். நாம் ஏன் கஷ்டப்பட்டு படிப்பிக்க வேண்டும் என்ற மனோபாவம் ஆசிரியர்களிடம் காணப்படுகிறது. இதனாலும் கற்பித்தலில் கவனம் செலுத்தாமல் விடுகின்றார்கள். கொழும்பில் உள்ள சில பாடசாலைகளில் ஒரு சில ஆசிரியர்கள் பாடசாலைக்கு வரும்போதே ஆனந்த விகடன், குமுதம், கல்கண்டு போன்ற சஞ்சிகைளைக் கொண்டு வருகிறார்கள். பாடசாலை நேரம் முழுவதும் அதனை வாசித்துத் தள்ளுவார்கள். 'படிப்பிக்கவில்லையா' எனக் கேட்கின்ற போது 'மாணவர்கள் எங்களை நம்பியா இருக்கிறார்கள்' என்பது அவர்களது பதிலாக இருக்கும்.

மாணவர்களின் தேவை கல்வி அல்ல, பரீட்சையில் சித்தியடைவதே என்ற நிலை உருவாகி விடுவதாலும் இத்தேவை ரியூட்டரிகளில் ஒழுங்காக செய்யப்பட்டுவிடுவதாலும் அவர்கள் பாடசாலைக் கல்வியில் அக்கறை செலுத்துவதில்லை. கற்பிப்பவர் சிறந்த கற்பித்தல் ஆற்றல் உடைய ஆசிரியராக இருந்தாலும்கூட மாணவர்கள் அக்கறை செலுத்துவதில்லை என்றே பொதுவாகக் குற்றம் சாட்டப்படுகிறது. அத்தோடு பாடசாலைக்கு ஒழுங்காக வருவதிலும் அக்கறை காட்டுவதில்லை. இதற்கு களைப்பு ஒரு காரணமாக இருந்தாலும் அவர்களது தேவை வேறு இடத்தில் பூர்த்தி செய்யப்படுவதே பிரதான காரணமாக உள்ளது.

பாடசாலை ஆசிரியர்களுக்கான ஊதியமானது ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாக உள்ளதும், அவர்களது வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க போதாதிருப்பதும் ஆசிரியர்களை ரியூட்டரிக்குச் செல்ல உந்துகின்றன.

யாது. ரியூட்டரிகள் இருக்கும் வரை ஓய்வு நேரத்தைத் தேடிக் கொள்ளவும் முடியாது.

* ரியூட்டரிகள் நேரத்தை விழுங்கிக் கொள்வதினால் பாடம் சம்பந்தமான விடயங்கள் எல்லாவற்றையும் 'குளிகைகளாக' தாமே கொடுக்க முயல்வதாலும் மாணவர்களிடம் தாமாகவே தேடிப் படிக்கும் தன்மையும் நுண்மதியைப் பயன்படுத்தும் தன்மையும் அற்றுப் போய்விடுகிறது. இதனால் தமது குறிப்புக் கொப்பியில் உள்ளவற்றிற்கு வெளியே வரும் விடயங்கள் தொடர்பாகவும், நுண்மதியை பயன்படுத்திப் பதிலளிப்பதற்கும் அவர்களுக்கு முடிவதில்லை. இது தொடர்பான வினாக்கள் வருகின்ற போதெல்லாம் மாணவர்




## ...ாதாள உலகம்

...ிக்குகள்
...ன. ஒருவர்
...ார்க்கிறார்.
...திப்படுத்தி
...றையினுள்

...து பேர் நிற
...தை. இன்

னும் ஐந்தாறு பேர் வந்தவுடன் சீரியஸாக ஒருவர் கதைக்கத் தொடங்குகிறார். சரியாகப் பன்னிரண்டு பேர்.

கதை: மாதாந்தம் 50,000 ரூபாச் சீட்டைப் பற்றியது.

இருந்த பன்னிரண்டு பேரும் ரியூட்டரி ஆசிரியர்கள்.

## ஒரு அப்பாவி டியூட்டரி ஆசிரியருக்கு
## நிர்வாகத்தின் அட்வைஸ்

''என்ன சேர் நீங்கள்? நல்லாப் பகிடி விடுங்கோ. அப்பத்தான் பிள்ளைகள் வரும். டபிள் மீனிங்கிலை பகிடி விட்டுப் பாருங்கோ. சொல்லி வேலை இல்லை. யாழ்ப்பாணத்திலை குழந்தை மாஸ்ரர் என்ன செய்யிறவர்? முழுக்க டபிள்மீனிங் பகிடி தானே? ஐயர் இங்கிலீசுக்கு என்ன செய்யிறவர்? ஏன் மகேஸ்வரன் இஞ்சை தமிழ் படிப்பிக்கேக்கை வகுப்பு முழுக்கச் சிரிச்சுக் கொண்டிருக்கும். மற்ற மாஸ்ரர்மார் தங்கன்ரை வகுப்பிலை படிப்பிக்க ஏலாமல் இருப்பினம். நாங்கள் சொல்றது உங்களுக்கு விளங்குவதில்லை.

மற்றது சேர் நீங்கள் ஒழுங்காக வகுப்புக்கு வாங்கோ. ஆனால் முழுநேரமும் படிப்பிக்காதையுங்கோ. பிறகு பிள்ளைகள் சீப்பாக நினைக்கும். மற்றது எதுக்கும் ரியூட் கொடுக்கிறது நல்லது. அது உங்களுக்கு மேலதிக வருமானம்.

''நல்லாப் பகிடி விடுங்கோ. இது முக்கியம்''.

''பகிடி விடுவதா? அப்படி என்றால் நான் செந்திலாக அல்லது கவுண்டமணியாக இருக்க வேண்டும்'' என அவ்வாசிரியர் நினைத்துக் கொண்டார்.

தமது வருவாயின் (அனேகமாகப் பாடசாலை ஊதியத்தை விட 2,3 மடங்கு வருவாயினை) பெருக்கித் தரும் ரியூட்டரி கற்பித்தலுக்கு மாணவர்களைத் திரட்டுவதும், பாடசாலையில் ஒழுங்காகக் கற்பிக்காமல் இருப்பதும் ஒன்றுடன் ஒன்று பிணைந்த விடயங்களாக உள்ளன. பாடசாலையில் ஒழுங்காகப் போதிக்குமிடத்து ரியூட்டரிகள் அவசியமில்லாது போய்விடும் என்பது ஆசிரியர்களைப் பொறுத்த வரை பொருளாதார ரீதியில் அச்சமூட்டும் ஒரு விவகாரமாக உள்ளது.

பாடசாலையில் ஆசிரியர்களுக்கு கற்பித்தாலென்ன இல்லாவிட்டாலென்ன ஊதியம் கிடைக்கிறது. ஆனால் ரியூட்டரி என்கிற சந்தையில் ஆசிரியரின் திறமையான போதனை -அது வெறும் பரீட்சையில் சித்தியடைவதற்கான தொழில்நுட்பத்தை காட்டிக் கொடுப்பதேயாயினும் ஒரு போட்டிக்குரிய விவகாரமாகி விடுகிறது. விளம்பரங்கள், மலினமான பகிடிகள், மாணவர்களை கவர்கின்ற புதிய உத்திகள், போன்றவற்றின் உதவியுடன் இப்போட்டியில் வெற்றிபெற ஆசிரியர்கள் பாடுபடுகின்றனர். ரியூட்டரிகளில் ''பேரும் புகழும்'' பெறும் ஆசிரியர்களின் முன்னால் ரியூட்டரிக்குப் போக விரும்பாத ஆசிரியர்கள் திறமை குறைந்தவர்களாக மாணவர்களால் மதிக்கப்படும் நிலையும் உருவாகின்றது. இது ஆசிரியர்களின் கௌரவப் பிரச்சினையாகி அவர்களையும் ரியூட்டரிகள் நோக்கி விரட்டுகின்றது.


### குரு - சிஷ்ய உறவு:

பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் உறவுநிலையானது இன்னமும் குரு-சிஷ்ய மனோபாவ நிலையிலிருந்து விடுபடாத நிலையே நிலவுகின்றது. ஆசிரியர்களை அப்படியே பின்பற்றும் போக்கு மாணவர்களிடம் நிலவவேண்டுமென்கிற சமூக நிர்ப்பந்தம் நிலவுவதால் உருவாகும் மாணவ பரம்பரை இந்த 'வியாபார போட்டிகளின் விளைபொருட்களாக உருவாகின்றனர். சமூக பொறுப்புணர்வு, அக்கறை என்பன அற்ற இப்புதிய பரம்பரையின் மட்டுப்பட்ட அறிவே அடுத்த பரம்பரைக்கு கடத்தப்படுகின்றது என்ற ஆபத்தான நிலையும் உருவாகின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த ரியூட்டரிகள் பெற்றோருக்கு பாரிய பணச்சுமையைக் கொடுப்பனவாயுள்ளன. தன்னிடம் வருடக்கணக்காக பணம் கட்டி, படிக்கின்ற மாணவருக்கு மீட்டல் வகுப்புகளையும், பரீட்சை வழிகாட்டி வகுப்புக்களையும் நடாத்த வேண்டியது ஆசிரியரது கடமை. ஆனால் ரியூட்டரிகளோ சாதாரண வகுப்புக்கள், மீட்டல் வகுப்புக்கள் பரீட்சை வழிகாட்டி வகுப்புக்கள் என்பவற்றுக்கு தனித்தனியாக பணம் அறவிடுகின்றன. கொழும்பில் ஆசிரியர் ஓரிரு நாட்கள் நடாத்தும் பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கு வகுப்புக்களினால் மட்டும் ஒவ்வோர் வருடமும் ஒன்றரை லட்சம் ரூபா வரை சம்பாதிப்பதாகப் பெருமையடித்துக் கொள்கிறார் ஒரு ரியூட்டரி ஆசிரியர். இதை விடத் தனிப்பட்ட வகுப்புக்களுக்கு மணித்தியாலத்திற்கு நூறு ரூபா தொடக்கம் நூற்றைம்பது ரூபா வரை அறவிடப்படுகின்றது.

தன் பிள்ளை பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதற்காக பெற்றோர்கள் எத்தகைய பொருளாதார சுமையையும் தாங்கிக் கொள்ள முயற்சி செய்கின்றனர். இதற்காக தங்களது உழைப்பட நேரத்தையும் அதிகப்படுத்தி ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் அவர்களும் உழைக்க வேண்டி வருகின்றது.

ஆசிரியர்கள், மாணவர்களின் ஒழுக்கத்தில் கவனம் செலுத்துவதென்பது



## டியூட்டரி = மினி சினிமா

ஒற்றுமைகள்
1) எவ்விதத்திலும் காற்று வரமுடியாத 10'x20'அடி கொண்ட அறைகள்
2) உள்ளே உள்ள வெப்பமான காற்றையே மீண்டும் மீண்டும் வழங்குகின்ற ஒரே ஒரு மின் விசிறி.
3) வருகிற நபர்களைப் பொறுத்து 40-60 பேர் வரையில் நெருக்கியடித்து இருப்பர்.
4) அரைக் குண்டிக்கும் போதாத வாங்குப் பலகைகள்
5) அடுத்து என்ன நடக்கப் போகின்றது என ஆர்வம் மின்னும் கண்கள்

வேற்றுமைகள்
மினி தியேட்டரில் தொலைக்காட்சிப் பெட்டியும் டெக்கும் காணப்படும். ரியூட்டரியில் ஆசிரியர் கரும்பலகையுடன் இருப்பார்.



ரியூட்டரிகளில் கவனிக்கப்படுவதில்லை. கூட்டம் கூட்டமாக ரியூட்டரிகளில் மாலை நேரங்களில் கூடும் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ மாணவியர் மத்தியில் ஏற்படும் சச்சரவுகள் ரியூட்டரி நிர்வாகத்தினதோ ஆசிரியர்களதோ அக்கறையை ஈர்ப்பதில்லை. இவை ஒழுக்கக் கேடான போக்குகளை உருவாக்கி விடுகின்றன.


உதாரணமாக மாணவிகளுக்கு கல்எறிதல், கூழ்முட்டை எறிதல் போன்ற வக்கிரமான பாலியல் சேட்டைகள், கோஷ்டிச் சண்டைகள் இவர்கள் மத்தியில் சாதாரணமாகி விடுகின்றன. ரியூட்டரி நிர்வாகங்கள் பணத்தை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளதால் இவ்ஒழுக்கச் சீரழிவுகளில் அக்கறை செலுத்துவதில்லை.

* * *

மேற்கூறப்பட்ட பாதகமான அம்சங்களையும்,போக்குகளையும் கொண்ட இந்த ரியூட்டரிக் கல்விமுறை பற்றி யாரும் அதிகம் அலட்டிக் கொள்வதாயில்லை. மாணவர்களைப் பொறுத்த வரை அரசின் இந்தப் போட்டி முறைக் கல்வியின் கீழ் அதிக புள்ளிகளைப் பெற்றுவிட இது உதவுகிறது. ஆசிரியர்களைப் பொறுத்த வரை பாடசாலைச் சம்பளத்தின் கீழ் ஓட்ட முடியாத வாழ்க்கைச் சுமையிலிருந்து விடுபட ரியூட்டரி வருமானம் உதவுகிறது. பெற்றோர்களைப் பொறுத்தவரை பிள்ளைகள் பரீட்சைகளில் சித்தியெய்துவது தான் எல்லாவற்றையும் விட முக்கியமானது. அதற்காக பிள்ளைகளின் ரியூசனுக்காக எவ்வளவும் செலவழிக்கத் தயார். ரியூசன் முறை அவசியமானதும் கூட.

ஆக, எல்லாத் தரப்பிலும் 'அவசியமாய்ப்படுகின்ற' இந்த ரியூட்டரிகளின் தோற்றத்திற்கும் நிலைப்புக்கும் பின்களனாக உள்ள எமது கல்விமுறையே பிரதான்மாக கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டும் . காலனித்துவம் உருவாக்கித்தந்த அரசியல், சமூக, பண்பாட்டம்சங்கள் எம்மில் நிறையப் பாதிப்புக்களை உருவாக்கியிருக்கின்றன. கல்வியும் அதில் ஒன்று. எமது சமூகப் பயன்பாடு. தேவை கருதி இவை உருவாக்கப்படவில்லை. காலனித்துவம் தனது தேவைக்கான மூளை உழைப்பாளிகள், இடைத்தரஊழியர்கள், தொழிலாளர்கள் என்போரை உருவாக்க எம்மீது புகுத்தியதே இந்தக் கல்வி முறை.

நாங்கள் ஆரம்பிக்க வேண்டியது எமக்கான புதிய கல்விமுறை ஒன்றின் தேடலிலிருந்தே.



# இலங்கையின் அரசியலமைப்புகளும் இனப்பிரச்சினையும்

செம்பாட்டான்.

ஜனாதிபதி தேர்தல்முறை,விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் என்பவற்றில் மாற்றம் கொண்டு வருவதற்காக அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வருவதற்கான முயற்சிகள் அண்மைக் காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. டி.பி.விஜேதுங்க அரசு, இது தொடர்பாக ஆராய்ந்து போதிய சிபாரிசுகளை செய்வதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றையும் உருவாக்கியுள்ளது. திருத்தம் பற்றிய மக்களின் அபிப்பிராயங்களைப் பெறுவதற்காக மக்களிடம் பகிரங்க வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பிற்கான 17வது திருத்தமாக இதனைக் கொண்டுவருவதற்காக இம்முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஆட்சியதிகாரத்திலிருக்கும் கட்சி அதனதும் அது சார்ந்துள்ள வர்க்கத்தினதும் நலன்களுக்கேற்ப காலத்துக்கு காலம் புதிய புதிய திருத்தங்களை கொண்டு வருவதற்கு வழி செய்யும் அமைப்பாகவே பாராளுமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. 'மக்கள் அதிகாரத்தின்' அதியுயர் ஜனநாயகபீடமென வர்ணிக்கப்படும் பாராளுமன்றம், அரசியலமைப்பில் ஆளும்கட்சி வேண்டியபோது வேண்டியபடி திருத்தத்தைக் கொண்டுவர முடியாதென்றும், இது மக்களது பிரதிநிதிகளின் ஆதரவுடனேயே சாத்தியம் என்று விதந்துரைக்கப்பட்டு வருகின்றது. பிரித்தானியா அறிமுகப்படுத்திய இந்தப் பாராளுமன்ற முறை மேற்பார்வையில் ஜனநாயகத்தன்மை கொண்டதாகத் தெரியினும் உண்மையில் அது ஆதிக்க அணியின் நலன்பேணும் அமைப்பாகவே செயற்பட்டு வந்துள்ளது. ஸ்ரீலங்காவிலும் ஆரம்பகால சட்டசபைகள் முதல் இன்றைய பாராளுமன்றம் வரை இதே நிலைமையே நீடித்து வந்துள்ளது.

இன்று பாராளுமன்றத்தில் திருத்தமொன்றைக் கொண்டு வர முயலும் சக்திகள் அனைத்தும், தமது நலன்களைப் பேணவே அரசியலமைப்பை திருத்த முயன்று வருகின்றன. பிரேமதாச காலத்தில் உருவாகிய நெருக்கடிகளை தணிக்கவும், ஆளுங்கட்சியான யூ.என்.பி தன்னை ஒரு ஜனநாயகக் கட்சியாகக் காட்டிக் கொள்ளவும் டி.பி. விஜேதுங்க அரசினால் கொண்டு வரப்படவுள்ள திருத்தித்திற்கான முயற்சிகளே மேற்கூறிய முயற்சிகளாகும். இம்முயற்சிகள் கைகூடினும் சரி, கூடாத போதும் சரி, பாராளுமன்றத்தைக் கூட்டி தமது பிழைப்பை நடாத்த யூ.என்.பிக்கு முடியும் என்பது இதன் கிளையாகப் பிறக்கும் இன்னொரு உண்மையாகும்!

எவ்வாறெனினும் சிறிலங்காவின் அரசியல் திட்ட வரலாற்றில் ஜே.ஆரின் ஆட்சிக்காலத்திலேயே அதிகளவு திருத்தங்கள் அரசியலமைப்பிற்கு கொண்டு வரப்பட்டன. 1978ம் ஆண்டு ஜே.ஆர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்று 1988ம் ஆண்டு முடிகின்ற 10வருட காலப்பகுதியில் அரசியலமைப்புக்கு 16 திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. தமிழ் மொழியையும் அரசகரும மொழியாக்கும் திருத்தமே 16வது திருத்தமாக கொண்டு வரப்பட்டது.

1989ம் ஆண்டு பிரேமதாச ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் இதுவரை ஒரு திருத்தமேனும் கொண்டு வரப்படவில்லை. ஆட்சியிலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை இல்லாமையே இதற்கான காரணமாகும். பிரேமதாச அரசாங்கம் பலதடவைகள் இதற்கு முயற்சித்த போதும் எதிர்கட்சிக்காரரின் ஆதரவு கிடைக்காமையினால் அம் முயற்சி கூடவில்லை. சில வருடங்களுக்கு முன்னர் சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளுக்கிணங்க அரசியலமைப்பில் உள்ள அடிப்படை உரிமைகள் பகுதிகளில் மனித உரிமைகளில் மேலும் சில வார்த்தைகள் சேர்க்க அரசாங்கம் முன்வந்தது. ஆனால் எதிர்கட்சிகள் என்ன காரணமாயினும் சரி,அரசு கொண்டு வரும் தீர்மானங்களை எதிர்ப்பதே பணியென்று கருதுவதாலோ என்னவோ அம்முயற்சிக்கு ஆதரவு கொடுக்கவில்லை. இதனால் இம் முயற்சி பிசுபிசுத்துப் போய் விட்டது.

அண்மையில் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நெவில் பெர்ணாண்டோ உறுப்பினர்கள் கட்சி மாறுவதற்கான உரிமையை வழங்கும் ஒரு திருத்தத்தை கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்தார்.எனினும் இரண்டு பிரதான கட்சிகளும் அதற்கு ஆதரவு கொடுக்காததினால் அவரது முயற்சிகளும் கைகூடவில்லை.

சிறிலங்காவின் பிரதான அரசியற் கட்சிகள் இரண்டும் பொதுவான பிரச்சினைகள் தொடர்பான திருத்தங்களில் ஆதரவு தெரிவிக்காவிட்டாலும் சிறுபான்மை இனங்களை ஒடுக்குவதை நோக்கமாகக் கொண்டு வரும் திருத்தங்களுக்கு ஆதரவு தெரிவித்தே வந்துள்ளன. அரசியலமைப்பிற்கான 6வது திருத்தம் இதற்கு சிறந்த உதாரணமாகும். தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியைப் பறிக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட இத்திருத்தத்திற்கு இரு பிரதான கட்சிகளும் தமது ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்திருந்தன. இப்போது கொண்டுவர முயற்சிக்கின்ற ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட திருத்தங்களுக்கும் சிறுபான்மையினங்களுக்கு எதிரான திருத்தங்களாக இருப்பதால் இரு கட்சிகளும் ஏகோபித்த ஆதரவைத் தெரிவிக்கும் என்று நம்பலாம். திருத்தத்தைக் கொண்டு வரும் அரசும் இதனைக் கருத்தில் கொண்டே திருத்தத்திற்கான முழுப் பொறுப்பையும் தான் எடுக்காமல் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை உருவாக்கி அதனூடாக முயற்சித்து வருகின்றது.

சிறுபான்மையினரை ஒடுக்குவது தொடர்பான சட்டங்களைப் பொறுத்த வரை அரசியலமைப்பைத் திருத்தும் முயற்சியில் மட்டும் அரசு தங்கியிருக்கவில்லை. அரசியலமைப்புரீதியாக திருத்தும் முயற்சிகள் தடைகள் இருக்கின்ற போதும் சாதாரண பாராளுமன்ற சட்டங்களினூடாக அதனைக் கொண்டு வந்து அமுல்படுத்துவதற்கு அது ஒருபோதும் தயங்கியது கிடையாது. 1956 இல் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் தொடக்கம் 1990 இல் கொண்டு வரப்பட்ட மாகாணசபைகள் கலைக்கும் சட்டம்வரை இதற்கு பல உதாரணங்கள் உள்ளன. 1956 இல் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் அப்போது அமுலில் இருந்த சோல்பரி அரசியலமைப்பின் 29வது பிரிவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டது. இதேபோல் 1990இல் கொண்டுவரப்பட்ட மாகாண சபைகள் கலைக்கும் சட்டம் அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டத்திற்கு எதிராகக் கொண்டு வரப்பட்டது. இவ்வாறான சிறுபான்மை இனங்களுக்கு எதிரான பாராளுமன்ற மூலமான சட்டங்களை சிறீலங்காவின் அரசியல் சாசன வரலாறு முழுவதிலும் பார்க்க முடியும்.

சிறீலங்காவின் அரசியல் சாசன வரலாறு என்பது 1833ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புறுக் அரசியல் சீர்திருத்தத்துடன் ஆரம்பமாகின்றது. இதனோடேயே அரசியலில் உள்நாட்டவர்களின் பிரவேசமும் ஆரம்பமாகின்றது. இக் கோல்புறுக் சீர்திருத்தத்திலிருந்து ஓரளவு பொறுப்பாட்சி வழங்கப்பட்ட டொனமூர் அரசியல் திட்டம் வரையிலான 98ஆண்டு காலம் வரை ஓர் அரசியல் சாசன அரசுக்கான பயிற்றுவித்தலே நடைபெற்றது என்றுதான் கூறவேண்டும். இப் பயிற்றுவித்தல் என்பது ஒருபல்லின சமூகத்திற்கான அரசியல் சாசன பயிற்றுவிப்புக்கு பதிலாக பெரும்பான்மை இனத்தின் மேலாதிக்கத்திற்கான பயிற்றுவிப்பாகவே அமைந்திருந்தது. அரசியலில் உள்நாட்டவர்களின் ஆதிக்கம் ஓரளவு தெரியத் தொடங்கிய 1920ம் ஆண்டு மானிங் அரசியல் திட்டத்துடனேயே இப் பேரின மேலாதிக்கத்துக்கான கூறுகள் வெளிப்படத் தொடங்குகின்றன. ஆரம்ப காலங்களில் இது தெளிவாகத் தெரியாவிட்டாலும் டொனமூர் அரசி

→ 11

**ஆட்சியதிகாரத்தில் இருக்கும் கட்சி அதனதும் அது சார்ந்துள்ள வர்க்கத்தினதும் நலன்களுக்கேற்ப காலத்துக்கு காலம் புதிய புதிய திருத்தங்களை கொண்டு வருவதற்கு வழி செய்யும் அமைப்பாகவே பாராளுமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. 'மக்கள் அதிகாரத்தின்' அதியுயர் ஜனநாயகபீடமென வர்ணிக்கப்படும் பாராளுமன்றம், அரசியலமைப்பில் ஆளும்கட்சி வேண்டியபோது வேண்டியபடி திருத்தத்தைக் கொண்டுவர முடியாதென்றும், இது மக்களது பிரதிநிதிகளின் ஆதரவுடனேயே சாத்தியம் என்றும் விதந்துரைக்கப்பட்டு வருகின்றது. பிரித்தானியா அறிமுகப்படுத்திய இந்தப் பாராளுமன்ற முறை மேற்பார்வையில் ஜனநாயகத் தன்மை கொண்டதாகத் தெரியினும் உண்மையில் அது ஆதிக்க அணியின் நலன்பேணும் அமைப்பாகவே செயற்பட்டு வந்துள்ளது. ஸ்ரீலங்காவிலும் ஆரம்பகால சட்டசபைகள் முதல் இன்றைய பாராளுமன்றம் வரை இதே நிலைமையே நீடித்து வந்துள்ளது.**

---

*சுதந்திர இலக்கிய விழாக் குழுவினர் நடாத்திய இளம் எழுத்தாளர்களுக்கான போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற கவிதை:*




*மூன்று நாளாய் வானம்*
*சாடையான மூசாப்பு பின்னேரங்களில்*

*புழுதி அடங்கவும்*
*வெக்கை குறையவும்*
*பெய்யாதோ மாரியென அவாவ நான்*
*தொடங்கிற்றே மத்தியானம் சராலெனத்*
*தலையினிலோர்*
*நீர்க் குண்டை விழுத்தி.*

*எதிற் கொழுவிப் பீய்த்தலாகினவோ இம்*
*முகிற் பைகள்.*
*கொட்டுகின்றன தான் விடாமல்*
*இரவு எட்டு மணியான பிறகும்.*

*நிலா முளைத்திருக்க வில்லை.*
*வெள்ளிகளாச்சும் பூத்தனவோ*
*என்னவோ!*
*வெளியில் கும்மிருட்டு இப்போ!*
*குப்பி விளக்குக் குருடு பற்றும் அறையின்*
*உட் சுவரில் சாய்ந்திருக்கும் எனை*
*ஜன்னல் கம்பிகளைக் குளிர்த்தி வரும் ஈரக்*
*காற்று*
*உசுப்புது.*

*இக் கூதலில்*
*இழுத்துப் போர்த்திப் படுத்தல் போல் சுகம்*
*வேறெதுவும் அல்லவே!*
*எனினும், அவ்விதம் இயலாதின்று.*
*ஆமை ஊர்வதாற் கடகடக்கும்*
*தார்ப் பீப்பாத் தகட்டுப்*
*பின் வேலிப் பக்கம்*
*நேற்று அவள் வந்ததும்*
*கை, கால்கள் உதற உதற நான்*
*ஒன்றுக்குமாகாத ஓரிரு*
*வார்த்தைகளை உதிர்த்தியதும்,*
*வேண்டுமென்றே*
*பொய்யாய்க் கோபித்துக்*
*குழற வைத்துப்*
*பின் சிரித்து விடை பெற்று வந்ததும்,*
*அதுவரை*
*படுவேகமாய் இதயம்*
*துடித்துக் கொண்டதால் இளைத்து*
*மூச்சிரைக்கப் போய் வீட்டுக்*
*கதவில் சரிந்ததும்.*

*கொச்சிப் பழச் சிவப்பு அவள்*
*தடித்த இதழ்ச் சதைக் கட்டிகள்*
*பொன்னி வண்டுகள் மினுங்குகின்ற*
*அவ் விரு விழிகள்.*
*இருப்புக் கொள்ளாமல்*
*குட்டி போட்ட பூனையாய் நான்*
*அப் பொழுதின் பின்*

*முன் கதவிடுக்கினூடாக*
*தெம்பிலி மரத்தின் ஊசியிலைகள்*
*மழைத் துளி பட்டு அசைவது தெரியுது.*
*வாசலில் நிற்கிற*
*கறுத்தக் கொழும்பான் மாமரத்தில்*
*கொள்ளை இலைகள்*
*இலைக் கொரு பூவும் பிஞ்சுகளும்*
*எல்லாம் உதிர்ந்து கிடக்கும் காலையில்.*

*சற்றே இம் மழை ஓயுமெனின்*
*சில்லூறுச் சத்தம்*
*அல்லது தவளை கத்துவது கேட்கும்*
*நீர் ஓடிப் போன சுழிகளில்*
*மணல் தூர்ந்திருக்கும்.*
*சோவெனவும் உர்ரெனவும் இம் மழை.*

*நூர்ந்திற்று விளக்கு*
*இடிக்குது முழங்குது வானம்*
*உடைந்து துண்டு துண்டாய் விழுமோ?*
*இரு மின்னல் கீற்றுகள்*
*வெட்டி மறைந்தன தொடராய்.*
*அக் கண நேர வெளிச்சத்தில்*
*விறாந்தையின்*
*சதுரக் கம்பிகளுக்கு அப்பால்*
*எதிர் வீட்டுப் பீலியால் நீர் வழிவது*
*தெரிந்திற்று.*

*அச்சிறு துளி*
*ஒளியின் பின் எனைச் சூழவும் முற்றாய்*
*நிரம்பியிருக்கிற கறுப்பு வெளியினிலே*
*புலப்படுமொரு புள்ளி வட்டமாய்*
*அவள் முகம் மட்டும்...*

என்.ஆத்மா




''சீ'' இந்த விட்ட விடியங்காட்டில என்ன அவிச்சலாக் கிடக்கு. தோளில் கிடந்த துண்டைத் தூக்கி ''ஊ.ஆ'' என்று வாயசைத்து விசிக்கிக் கொண்டார் போடியார். ஓசோன் படலம் படுவான் கரைக்கு மேலே பிஞ்சி விழுந்து விட்டதைப் போன்ற வெயில். இந்த விடியக்காலைப் பொழுதில் அவ்வளவு வெக்கை, புழுக்கம். ஒரு காலமும் இப்படி இருந்ததில்லை. இப்பதானே எல்லாம் மாறிக் கீறிக் கிடக்கு தனக்குள் தானே சொல்லிக் கொண்டு தலையில் இருந்த நாலைந்து மயிர்களையும் இழுத்து முடிச்சுப் போட்டு தனது நீண்ட கால நெருங்கிய சகாவான வெள்ளிக் கொண்டையூசியை அதன் இடையில் சொருகிக் கொண்டார்.

''இந்தக் கிழடுபத்தியும் இவருக்கு இன்னும் புதுமாப்பிள்ளை என்ற நினைப்புப் போல. தேத்தண்ணிக் கோப்ப எவ்வளவு நேரமா திண்ணையில கிடக்கு ஆறிப் போச்சி கீறிப் போச்சு எண்டு என்னிட்ட ஒன்டும் கதைக்க வேணாம்'' உள்ளுக்குள் இருந்து போடியாரின் மனிசி பொன்னம்மா தொண்டை கிழியக் கத்தினாள்.

இப்பதான் போடியாருக்கு தேத்தண்ணிக் கோப்பையின் ஞாபகமே வந்தது. திண்ணைச் சுவரில் சாய்ந்து தேத்தண்ணிக் கோப்பையைத் தூக்கி ஒரே மிடரில் உள்ளுக்கும் இழுத்துக் கொண்டார். இஞ்சி போட்ட தேத்தண்ணி அதுவும் போடியாரின் மனிசிர கை பட்டதென்றால் அதன் ரேஸ்ற் தனிதான். பட்டியிலிருந்து கறந்து வந்த பால் முட்டி நிறைய இருக்கும் அடுப்படிக்கட்டில். ஆனால் போடியாருக்குக் காலையில் இஞ்சி போட்ட தேத்தணனிதான் வேணும். போடியார் வீட்ட காலையில வாற எல்லாருக்கும் கோப்ப முட்ட முட்ட ஊத்தின பால்தான் கிடைக்கும். ஆனால் போடியார் மட்டும் வித்தியாசம். போடியார் எல்லா விசயத்திலும் இயல்பாகவே கொஞ்சம் வித்தியாசமான மனிசர்.

சுவரில் கொழுவியிருந்த குடையைத் தூக்கி கமக்கட்டில் இடுக்கிக் கொண்டார். திண்ணையை விட்டு வெளியே வந்தார். 'வாறன் பொடிச்சி' வாசல் கதவைத் திறந்து வெளியே வந்தார்.

அது களியும், கிறவலும் கலந்து போட்ட தெரு. அந்தத் தெருவிலே உள்ள ஒரே ஒரு கல்வீடு என்றால் அது போடியாரின் வீடுதான். நாட்டோடு மேய்ந்து முதிரைப் பலகையும் பழங்காலத்து சுட்ட செங்கல்லும் சுண்ணாம்பும் சேர்த்துக் கட்டின பெரிய வீடு இன்னும் அழகாய், அசையாமல், கம்பீரமாய் போடியாரைப்போல் உறுதியாய்த்தான் இருக்கிறது. இந்த ஊருக்கே ஒரு அழகு என்று கூடச் சொல்லலாம். இந்த வீட்டில் திண்டு குடிச்சி படுத்தெழும்பாத மனிசரே இல்ல.

போடியாருக்குக் புள்ள குட்டியென்று ஒன்றும் இல்ல, எல்லாம் இந்த ஊரும் பொன்னம்மாவும் தான். நிறையவே மாடு கன்றுகளும் நிலபுலன்களும் இருக்கிறது. என்னதான் இருந்தாலும் இந்தக் காலத்தில அந்த ஆண்டவன் வந்தால் கூட இந்த ஊருக்குள்ள ஒன்றுமே செய்ய முடியாது. காலம் மாறி கெலி புடிச்சுப் போய்க் கிடக்கு என்னத்தைதான் கதைச்சுப் பேசினாலும் போடியாருக்குப் பெருமை என்றது கொஞ்சம் கூட இல்ல.

ஊரில என்ன புதினம் எண்டாலும் போடியாரும் மனிசியும்தான் முன்னுக்கு நிப்பார்கள். இப்ப என்னதான் நடக்கிறது? அதுதான் அந்த நாசமாய்ப் போய் நஞ்சு விழுந்து குடி முழுகிப் போற துயரங்களைத் தவிர வேறென்னதான் நடக்கிறது. யார்ர வீடென்றாலும் போடியாரும் பொன்னம்மாக்காவும் முன்னுக்கே வந்து விடுவார்கள். பொன்னம்மாக்கா தேத்தண்ணிப் பானையும் சக்கரைக் கட்டியும் பனையோலைப் பெட்டியிலை பாணுமாய் வீட்டுக்குப் பின் பக்கம் வந்து குந்திக் கொண்டு ஒவ்வொருத்தராய்க் கூப்பிட்டு ''என்ன பொடிச்சி செய்யிற. ஊரோட ஒத்தது கன்னங்குடாவானுக்கும் என்ற மாதிரி உனக்கு மட்டுமா இது. அந்தக் கண் தெரியாத ஆண்டவன் கூட இந்தத் துவக்குகன்ற கண்ல பட்டா சும்மா விடாது. நாமளும் இண்டைக்கோ நாளைக்கோ. இல்லாட்டி இந்த நிமிசம் தானோ. அது யாருக்குமே தெரியாத ஒன்று. இதக் குடிச்சிற்று போய் குந்துடி மனேய்'' வாயிலை வந்ததை எல்லாம் வெளியில கொட்டித் துயரம் படிந்த மனசுகளை ஓரளவுக்காவது வென்றுவிடுவா பொன்னம்மாக்கா. போடியாரும் அப்பிடித்தான். நல்ல மனுசன். தங்கமான மனுசன்.

இப்ப இந்த ஊரையே பேயாய்ப் புடிச்சு ஆட்டுற புதினம் எண்டால் இதுதான். சில நேரம் சவம் தூக்க ஆம்பிளையளே இல்லாமல் பொண்டுகள்தான் சேர்ந்து தூக்க வேண்டி வரும். ஒரு நாள் இப்படித்தான். ஊரடங்குச் சட்டம் போட்ட நேரம் செல்லண்ட பொடியன் செத்து ரண்டாவது நாள் ஊனம் வடிந்து நாற்றம் எடுக்கத் தொடங்கிற்று. காணாததற்கு கச்சான் காற்றும் வேற ஊனம் வடிந்து காற்றோடு ஊரெல்லாம் நாற்றமெடுக்கத் தொடங்கிற்று. தூக்குறதுக்கு துடிப்பான ஆம்பிளையள் யாருமே இல்ல. போடியாரும் பொன்னரும் இன்னும் யார்யாரோ கிழடுகட்டைகளும்தான். பிரேதமும் நல்லா ஊதி எழும்பி பாரம் எடுத்திற்று. போடியாருக்கோ தொந்தியும் குந்தியும். ஓடியாடி வேலை செய்யிற அளவுக்கு மனுசனிட்ட இப்ப தைரியம் இல்ல.

''அடியே பொடிச்சிகள் இந்தச் சனியன் புடிச்ச ஊரடங்குச் சட்டம் எடுக்க மட்டும் பாத்திருந்தா வயித்தில இருக்கிற புள்ளையளும் வளர்ந்து கல்யாணம் கட்டுற வயசுக்கு வந்திடுங்கள். இதைப் பாத்துக் கொண்டு இருக்கேலாது. எப்பிடிக் கிளி மாதிரிப் பொடியன். ஊதிப் பெருத்து, கறுத்து ஆளே மாறிப் போயிருக்கு. எழும்புங்கடி. நாமதான் தூக்குவம்'' அன்றைக்கு அந்தப் பிரேத ஊர்வலம் பொன்னம்மாக்காவின் தலைமையில் பொம்பிளையளாலதான் தூக்கிப் போய் அடக்கம் செய்யப்பட்டது.

இதே மாதிரி இந்த ஊரிலை இன்னுமின்னும் நிறைய. ஊரிலை என்ன நடந்தாலும் பொன்னம்மாக்காவும் போடியாரும் ஒரு பிரிக்க முடியாத அங்கம்.

போடியார் தெருவில இறங்கி நடந்தார். கிறவலும் களியும் இறுகிப் போன அந்தத் தெருவில செருப்புக்கள் போடாத போடியாரின் கால்களைப் புழுதி மேய நடந்தார். சந்தி கழித்து, மறுமுனை திரும்பி எதிரே நடந்தார். பெரு விருட்சங்களாய் அரசும், ஆலும் வான்முகடு மறைத்து நிழல் பரப்பி நின்றன. கீழே அம்மன் கோவில். கோவிலுக்குப் பின் நோக்கி வலது திசையில் சர்ப்பங்களாய் சுருண்டு நிமிர்ந்து கிடக்கும் ஆலைகளுக்குக் கீழே நாகதம்பிரான் புற்று. நாற்புறமும் பெரிய வெளி. நிறைய மரங்கள் காற்றில் அசைந்து ஆடி நிழல் பரப்பின.

கோவிலுக்குப் பின் நோக்கிய வெளிதாண்டி வயல் வெளிகளும் வாய்க்கால்களும். வயல்களுக்கு நடுநடுவே ஆங்காங்கே தலையசைக்கும் தென்னைகளும் வாடிகளும் வயல்வெளிகள் தாண்டி அருகே அமர்ந்திருப்பதாய் ஆரங்கணம் காட்டி முறைத்துப் பார்க்கும் தாந்தாமலையும் வானுயர் காடுகளும் தொலைவில்..... மலையின் முகடுகளில் வனாந்தரங்களின் உச்சிகளில் படிந்து போன வெண்ணைக்கட்டிகளாய் மேகங்கள் ஆங்காங்கே. தொலைவிலும் அருகிலும் பசுவும் கன்றுகளும் நிரைநிரையாய் கூட்டமாய் கலைந்து தனித்து முலைகள் அசைத்து வாயிற் புற்கள் மென்று அசைந்து திரிந்தன.

போடியார் தெருவிலிருந்து இறங்கி, வெளியில் நடந்து கோவிலடிக்கு வந்தார். ஒரு போருக்குப் பிந்திய முந்திய சமாந்தரச் சுமைகளுடன் தனிமையில் சலித்துக் கிடந்தது கோவிலு! அதன் சூழலும். வெயிலும் நடந்த களைப்பும், புழுக்கமும் அனல் கலந்த காற்றின் செறிவும் அதன் அலைவும் போடியாருக்கு ஏதோ போல் இருந்தது.

கோவிலடியை அடைந்ததும் மரங்களின் அசைவும் குளுகுளுப்பும் சாந்தமான அமைதியும் மனதுக்கு இதமாக இருந்தது. தோளில் கிடந்த துண்டை தூக்கி எடுத்து முகத்தில் அப்பிப் போயிருந்த வியர்வைத் துளிகளை அழுத்தித் துடைத்துக் கொண்டார். துண்டை ஒரு கையாலும் நிலத்தை நோக்கி திரித்து விடப்பட்ட மரக் கயிறுகளாய் தொங்கும் ஆலம் விழுதொன்றை மறுகையாலும் பற்றிய படி நாற்புறமும் விழிகளால் மௌனமாய் விளாவினார்.

சருகுகள் சிதறி நிலம் முழுதும் மறைந்து கிடந்தது. ஆங்காங்கே யேசு பிரித்துக் கொடுத்த ஆயிரமாயிரம் அப்பத் துண்டுகளைப் போல் மஞ்சள் ஆலம் சருகுகள் நிமிர்ந்து கிடந்தன. ஈரமாயும் அரைகுறை ஈரமாயும் பீயுருட்டி வண்டுகள் உருண்டை பிடித்து உருண்டோடின. எஞ்சிய சாணங்களின் நெடில் மூக்குத் துவாரங்களை எட்டிப் பார்த்தது.

சலம் விழுந்த குழிகள் வெளிறிய மஞ்சளாய் ஒரு வெக்கை நெடியுடன். ஒவ்வொரு சருகுகளின் மேலும் காகம் குருவிகள் போட்ட எச்சங்கள் பால் வெள்ளையாய், மஞ்சளாய், மஞ்சளும் கறுப்புமாய். நடுவே அம்மன் கோவில். கோவிலின் மேலே ஆலம் விழுதுகள் இறங்கி காற்றில் நர்த்தனமாடின. காய்ந்த கருகிய பழுத்து வெளிறிய இலைகள். எதிரே சற்றுத் தள்ளி கிணறும் அதன் அருகே கொத்துக் கொத்தாய் மஞ்சள் பூக்கொத்துக்களுடன் கொன்றை மரம்.

உள்ளக் கிடக்கையின் சுமைகளை நீண்ட பெருமூச்சாக்கி வெளியேற்றினார். ஆலம் விழுதை விட்டு அவ்விடத்திலிருந்து நகர்ந்தார் போடியார். வேட்டியையுயர்த்தி மடித்துக் கட்டினார் தோளில் கிடந்த துண்டை கிணற்றுக் கட்டில் வைத்தார். தண்ணியை அள்ளி முகம் கைகால் அலம்பினார். துண்டையெடுத்து துடைத்தபடி கோவிலுக்குள் நுழைந்தார். சிரட்டையிலிருந்த திருநீற்றையள்ளி நெற்றியெல்லாம் அழுத்திப் பூசினார்.

போடியாரை அறியாமலேயே உதடுகள் எதைஎதையோ சொல்லி முணுமுணுத்தன. இரு கரங்களையும் கூப்பி, முழந்தாள் வணங்கி கசிந்து உருகினார். ''அம்மனே கண்ணகித்தாயே கண் திறந்து பாராயம்மா. இந்த வருஷமாவது உன்ர கோயில் கதவு திறந்து சடங்கு செய்யிறதுக்கு இந்த அருமந்த வயசில அழிஞ்சு போற பொடியள் பொடிச்சிகளை நெருப்பில வதங்கிக் கொண்டிருக்கிற இந்த ஊரை காப்பாத்து தாயே, கோதாரிபுடிச்சி கொல்லையில விழுற இந்த சனியன்களை சுட்டெரியம்மா'' கண்களில் நீர் வழிந்தோட ''யாதுமாகி நிறைந்தாயே'' பாடினார். பரவசமானார்.

கால்களை நீட்டி மடித்து, சப்பாணி போட்டு மூலையில் போய் உட்கார்ந்தார். நெற்றி நிறைய வெள்ளை வெளீரென்ற விபூதிப் பூச்சு. சின்ன வயதில் மனப்பாடம் செய்த எல்லாப் பதிகங்களையும் வாய்விட்டுப் பாடினார். நிறையவே வேண்டுதல் கோரிக்கைகளாய் அம்மனிடம் கொடுத்தார். வாதவூரரும் வந்து போனார். 'இமைப் பொழுதும் என் நெஞ்சில்' பாடினார். கண்களை மூடி நிறைய நேரம் தியானத்தில் ஆழ்ந்தவர் போலிருந்தார். போடியாரைப் பார்த்து வானம் சிரித்தது.பாவம் மனிசன். வெளியே வெறுமை.

போடியாரின் உள்ளக்கிடக்கையில் பாறாங்கற்களை ஒன்றுக்கு மேல் ஒன்றாய் உருட்டி விட்ட அவஸ்தை, வலி எல்லாம் இந்த புள்ளகுட்டியளைப் பற்றியதுதான். பாவம் இந்த பொடிப்புள்ளயைள் இந்த அருமந்த வயசில தங்களைப் பற்றி எந்தக் கவலையுமில்லாமல் எப்பிடியெப்பிடி அழிந்து கொண்டு போகுதுகள். இரவும் பகலும் இங்கு ஒன்றுதான். சுதந்திரமாய் மனிதர்கள் நடமாடி எத்தனை ஆண்டுகள். ஊரடங்குச் சட்டம், ரவுண்ட் அப் எந்த நேரத்தில் வலியாய் வந்து முட்டி மோதி மனித உயிர்களை கவ்விச் செல்லுமென்று சொல்லமுடியாது.

இந்த ஊரும் உலகமும் தலைகீழாய்ப் புரண்டு படுற பாட்டையெல்லாம் வெறும் குருட்டுத்தனமாய் பார்த்துக் கொண்டு வாழ போடியாருக்கு அறவே புடிக்கயில்ல. போடியார் வாழ்க்கையின் எல்லாப் பருவங்களையும் பந்திபந்தியாய் பக்கம் பக்கமாய் அனுபவித்தவர். சொத்து சுகங்களா? நிலபுலன்களா? மாடுகன்றுகளா? எல்லாமிருந்தும் அவருக்கேனோ இதெல்லாம் புடிக்காது. இந்தக் காலத்தில புள்ள குட்டியள் இருந்தால் தான் சோலி சுரட்டு அதிகம். எல்லாப் பக்கங்களுக்கும் பதில் சொல்லத் தெரிந்திருக்க வேணும். போடியாருக்கு அந்தப் பிரச்சினை கூட இல்லை.

போடியார் இயல்பாகவே கொஞ்சம் வித்தியாசமான மனிதர். இந்த உலகத்தின் மேல், இந்த ஊரின் மேல், அதையும் மீறி இந்த மனிதர்களின் மேல் அவருக்கொரு தனிப் பிரியம். அலாதி. இந்தக் கொஞ்சக் காலமாக இந்த ஊர் படுற அவஸ்தை, துயரம். வேதனை எல்லாத் தாய்மார்களும் அவர்களின் கருவறைகளில் நெருப்புத் துண்டங்களைக் கொட்டிக் கொண்டு வாழ்கின்ற துயரம் வேறு யாருக்குத்தான் புரியப் போகிறது.

தாய்மையின் கருவறைகளெல்லாம் தோண்டிப் புதைக்கப்பட்ட ஒரு கொடுமையால் தனித்துக் கிடக்கிறது இந்த ஊர். முன்பென்றால் இந்தக் கோவிலடி எப்பிடி செந்தழிப்பாய்க் கிடக்கும். கிழடுகட்டைகளும், பொடியள் பொட்டையளுமாய் நிறைந்து, அடிமரத்து வேர்களில் தலைசாய்த்து காற்று வாங்கும் சுகம். ஆலம் விழுதுகளில் ஊஞ்சலாடும் பொடியள் பொடிச்சிகளின் சத்தம் காதைக் குடையும். வெள்ளிக் கிழமைகளில் பொங்கல் பானைகள் நிரம்பும். தாமரையிலை பிடுங்கி பொங்கல் சாப்பிடும் அலாதிப் பிரியம், வருஷத்துக்கொருக்கால் வைகாசிக்கு சடங்கு ஊரே. ஒட்டுமொத்தமாய் கூடிக் குலாவி நிறைக்கும்.

இந்தக் கோவிலடிப் பக்கம் இப்ப யாருமே வாறதில்லை. ஒரு சூனியப் பிரதேசம் போல். கோவிலுக்கு எதிரே நீண்டு செல்லும் மண்முனைப் பாலத்து றோட் போக்குவரத்துக்காய் யாருமே பாவிப்பதுமில்லை.. போடியார்தான் ரெண்டொரு நாள் கோவிலடிப் பக்கம் தலை காட்டுவார். போடியாரும் இல்லாவிட்டால் அம்மன் கோவில் தனிமைதான். திடீர் திடீரென நடக்கும் ரவுண்ட் அப்பில் சில நேரம் கோவிலுக்கு பின் வெளியிலும் கூடிக் கலைந்து குளறிக் கூத்தாடும் ஊர். மற்றும்படி யாருமே கோவிலடிப் பக்கம் தலைகாட்டுவதில்லை.

கோவிலுக்குள்ளிருந்து வெளியே வந்த போடியார் கால்களால் சருகுகளைக் கிளறி ஆலின் அடி மரத்துடன் சாய்ந்து கொண்டார். மேலே வானம் மறைத்து கிளைகள் வளைந்து, நெளிந்து, உயர்ந்து இலைகள் செறிந்து அடர்த்தியாய்க் கிடந்தது. கீழே அரிநிழல் இலைகளைத் துளைத்து பூமியில் விழுந்தன. காற்று குபுகுபுவென வீசியது. கொஞ்ச நேரம் இப்பிடியே கண்ணை மூடிக் கொண்டால் எப்பிடியிருக்கும்.

வீட்டில பொன்னம்மா ஊர் நடுங்க கத்திக் கிழிப்பாளே ''இவ்வளவு நேரமா இந்த மனிசன் எங்க துலஞ்சி போயிற்றோ'' என்று. போடியாருக்கு இப்ப முகத்தில துளி கூட சந்தோசமில்ல. இந்தக் கொஞ்சக் காலமாக இந்த ஊரை உறுத்தும் அச்சம் நிறைந்த வாழ்கையைப் பற்றி, சிதைந்து போய்க் கொண்டிருக்கும் மனித வாழ்வியலின் கொடூரங்களைப் பற்றி, வாய்கிழித்து அலறும் துவக்குகளின் குரூரங்கள் பற்றி நிறையவே துயரப்பட்டார்.

முன்பென்றால் வருஷத்துக்கொருக்காய் மார்கழியில் வெள்ள நிவாரணம் பதிய வரும் டி.ஆர்.ஓவின் ஜீப்பும், எப்பாவது தேர்தல் காலங்களில் வரும் ஒன்றிரண்டு கார்களையும் தவிர இந்த ஊரில் மாட்டு வண்டிலும், கரியல் பூட்டிய சைக்கிளும் ரக்ரரும் தான். ஆனால் இப்ப நிலைமை முற்றிலும் வித்தியாசம். எந்த நேரமும் சொல்லிக் கொள்ளாமல் ஊருக்குள் நுளையும் கொள்ளிவாய்ப் பிசாசுகளாய் ஜீப்புகளும், ட்ரக்குகளும் அலறிப் புடைத்துக் கொண்டு வரும். கிறவலும் களியும் கிண்டி, புழுதி மண்டலம் புயலாய்க் கிளம்பும். மேலே இரைச்சல் போட்டுக் கொண்டு விமானங்கள் ஓடி மறையும். அச்சத்தால் நெல்மணிகளும் நிலத்தில் சாயும்.

போடியார் தன்னை மறந்து மரத்துடன் ஒன்றிப் போனவராய் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். மேலே காற்றில் இலைகள் அசைந்தன காகங்கள் எச்சம் துப்பின. குருவிகள் கீச்சிட்டன. அணில்கள் கிளைக்குக் கிளை தாவி ஒன்றையொன்று கட்டிப் பிடித்தன. தூரத்தே மேகங்கள் ஓடி ஒளிந்தன. இயற்கை எவ்வளவு அழகாய் செதுக்கப்பட்டிருக்கிறது. ஐந்தறிவு படைத்தவைகள் தங்கள் தங்களது வாழ்க்கையை எவ்வளவு அழகாய் செப்பனிட்டு ஒழுங்குபடுத்தியுள்ளன. இந்த ஆறறிவு படைத்த மனிதர்கள் மட்டும் இந்த உலகமெல்லாம் எவ்வளவு முரட்டுத்தனமாய் நடந்து கொள்கிறார்கள். தங்களைத் தாங்களே அழித்து சிதைத்து இந்த உலகின் ஆன்மாவைக் காயப்படுத்தி ரணகளமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தூரத்தே காய்ந்து கருகி வெறுமையாய்க் கிடக்கும் வயல் வெளிகள். மழைக்காலங்களில் நிரம்பி வழிந்தோடும் வாய்க்கால்கள், எதிர்த் திசையில் வெற்றிலையின் நடுநாராய் பிரிந்து செல்லும் றோட். இரு பக்கமும் வயல் வெளிகள் நெரிக்க, ஆள் அரவமின்றி தனித்து நீண்டு சென்றது. உச்சி வெயில் அகோரம் தணிந்து மெல்ல மெல்ல மேற்கே நகர்ந்தது. போடியார் இன்னமும் கண்ணயர்ந்து தன்நிலை மறந்து மரத்துடன் ஒன்றிப் போனவராய் தூங்கிக் கொண்டிருந்தார்.

திடீரென காகங்கள் செட்டையடித்துப் பறந்தன. மேலேமேலே இன்னும் மேலே சிறகுகளை வலித்து எழுந்தன. அணில்கள் கிளைக்கு கிளை தாவின. குருவிகள் கீச்சிட்டுக் கொண்டு எங்கோ ஓடித்தப்பின. போடியார் திடுக்கிட்டு கண் விழித்தார். ஏதும் பேய் பிசாசு பிடித்து ஆட்டுற கனவோ. வானமும் திடுக்கிட்டு விழித்தது. பூமி அச்சத்தால் ஒரு கணம் அதிர்ந்து குலுங்கியது.

கோரமாய்ப் புயல் வீசியது. ஜீப்புகளும் ட்ரக்குகளும் ஒன்றன்பின் ஒன்றாய் ஊருக்குள் நுழைந்தன. கிறவல் மண்டி புழுதி கிளம்பியது. துவக்குகள் ஒன்றுக்கொன்று பதில் சொல்லி வெடித்துச் சிதறி குருதி குடித்தன. மனிதம் உரத்து ஓலமிட்டபடி.....

ஏதோ பித்துப் பிடித்தவர் மாதிரி போடியார் ஓடினார். அவிழ்ந்த வேட்டியை ஒரு கையில் பிடித்தபடி கோவணத்துடன் தொந்தி குலுங்கி, மனம் பதைபதைக்க ஊருக்குள் ஓடினார். சூரியக் கதிரின் வீச்சைப் போல் எல்லாம் ஒரு கணப் பொழுதில் முடிந்து விட்டது. சந்தி திரும்பி அந்தப் பூவரசுக்கு கீழே போடியார் மல்லாந்து சரிந்தார். ஒரு வளைகுடா முடிந்து இன்னுமோர் யுத்தத்துக்காய் ஊர் அடங்கி விட்டது.



கௌதமரைப் போல் வானம் கண்மூடி கவலையில்லாமல் கிடந்தது. சூரியன் தொலைந்து எங்கும் இருள் மூடி விட்டது. குருதியால் நனைந்து போடியார் மல்லாந்து கிடந்தார். அருகே பொன்னம்மாக் கிழவி ஒரு குழந்தையைப் போல் விம்மி விம்மியழுதாள். பொன்னையாக் கிழவரும் இன்னும் நாலைந்து கிழடுகட்டைகளும் பொண்டுகளும் குழந்தை குட்டிகளுமாய் ஊரே கூடிவிட்டது. வாயில் விரல் வைத்து எல்லோரும் ஓவென்று அழுதார்கள்.

குப்பி விளக்குகளின் ஒளியில் சந்திப் பூவரசு பூவும் கன்னியுமாய் காற்றில் தலையசைத்து கதை கேட்டுக் கொண்டிருந்தது.



## செங்கை ஆழியானின் நாவல்

# குவேனி

## -சில குறிப்புகள்

### மல்லிகா சிவகடாட்சரம்

சமீபத்தில் பெண் விரோதக் கருத்துகளால் நிறைந்த ஒரு தமிழ் நாவலொன்றை வாசிக்க நேர்ந்தது. இதனைப் பிரபலமான இலங்கைத் தமிழ் நாவலாசிரியர் செங்கை ஆழியான் எழுதியுள்ளார். குவேனி என்னும் இந்த நாவல் 1991ஆம் ஆண்டு தமிழ்த் தாய் பதிப்பகத்தால் யாழ்ப்பாணத்தில் பிரசுரிக்கப்பட்டது. குவேனியைப் படித்து முடித்த போது, பெண்களை மாயப் பிசாசங்கள் எனவும், வஞ்சகப் பேய்கள் எனவும் வர்ணிக்கும் பட்டினத்தார் பாடல்களைப் படித்தது போன்ற உணர்வு ஏற்பட்டது.

குவேனி நாவலை மகாவம்சத்தில் இடம் பெறும் குவேனி-விஜயன் ஐதிகத்தை அடிப்படையாக வைத்து செங்கை ஆழியான் எழுதியுள்ளார். ஆனால் தனது.சமூக, அரசியல் கருத்து நிலையின் அடிப்படையில்· இந்த ஐதீகத்தை அவர் வியாக்கியானம் செய்துள்ளார்.

விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இலங்கையில் ஆதித் திராவிட இனத்தைச் சேர்ந்த இயக்கர், நாகர் என்ற இரு குழுவினர் வாழ்ந்தனர். விஜயன் தலைமையில் இலங்கைக்கு வந்த ஆரியர்களுக்குத் தம்மத்தியில் இடம் கொடுத்தன் மூலம் தென்பகுதி இயக்கர்கள் தமது இனத்தூய்மையை இழந்தனர். ஆரியரின் மேலாட்சிக்கு வழி வகுத்தனர் என்பது செங்கை ஆழியானின் கருத்தாகும். இவ்வாறு அவர்கள் தமது ''இனத்தூய்மையை'' இழந்தமைக்கு குவேனி விஜயன் மீது கொண்ட ஆசையே முழுமுதற் காரணமாக இருந்தது -அதாவது முதல் பாவத்தை- முதற் குற்றத்தைப் புரிந்தவள் பெண்ணே என்று அவர் அறுதியிட்டுக் கூறிவிடுகிறார்.

''இன்றைய அவல நிலைகளுக்கு நமது முன்னோர்கள் விட்ட தவறுகள் எவ்வாறு காரணமாயின' என்பதை விபரிக்குமுகமாகவே இந் நாவலை எழுதியுள்ளதாக முன்னுரையில் தெரிவிக்கும் செங்கை ஆழியான், இத் தவறுகள் யாவற்றையும் ஒரு பெண்ணின் தவறுகளாகக் காட்ட முற்படுவதே அவரை ஒரு பெண் எதிர்ப்பாளராக நாம் எண்ணத் தூண்டுகிறது.

தாய் வழிச் சமூக அமைப்பைக் கொண்ட இயக்கர்கள் குழுவுக்கு குவேனி பெருந்தாயாக, பெண் தலைவியாக இயங்கினாள் எனவும் தனது சுயநலம், காமம் ஆகியவற்றின் காரணமாக ஆரியர்கள் உள்நுழையவும், நிலைபெறவும் காரணமானார்கள் எனவும் அவர் கூறுகிறார்.

குவேனி என்ற பாத்திரம் உருவாக்கப்பட்டிருக்கும் முறை, குவேனியின் எதிர்மறைப் பாத்திரங்களான தாரதத்தன், சலதி என்போர் விபரிக்கப்படும் விதம், ஆசிரியரது உரை ஆகியவை மிகத் தெளிவாக 'பெண்புத்தி பின்புத்தி' என்ற பழமைவாதக் கருத்தையே வற்புறுத்துகின்றன. இது மாத்திரமன்றி பெண்களின் தலைமை பற்றிய சந்தேகம், மாற்றத்தையும் புதுமையையும் விரும்பும் பெண் அழிவையே தேடுகிறாள் போன்ற கருத்துகளும் இந் நாவலில் விரவிக் கிடக்கின்றன.

நாவலில், கதைத் தொடக்கத்திலிருந்தே குவேனி வித்தியாசமான, தனது குழுவில் எந்த ஆணையும் விரும்பாத ஒரு பெண்ணாகக் காட்டப்படுகிறாள். அவளை விரும்புகின்ற, அவளது குழுவைச் சேர்ந்த தாரதத்தன் என்னும் இளைஞனைப் பார்த்துக் குவேனி பின்வருமாறு கூறுகிறாள்.

''...ஏனோ எனக்கு உன்னைப் பிடிக்கவில்லை. இந்தக் கூட்டத்திலுள்ள எந்த இளைஞனையும் பிடிக்கவில்லை''

-பக் 9

விஜயனும் அவனது கூட்டத்தினரும் கரையிறங்கிய போது, குவேனி விஜயனது சிவந்த நிறத்தாலும் அழகாலும் கவரப்படுகிறாள். இச் சபலத்தின் காரணமாக அவளது கூட்டத்தின் அரசகுருவான தாரதத்தன் மறுப்புத் தெரிவித்த போதும் விஜயன் கூட்டத்தவருக்கு இடம் தருகிறாள். விஜயனையும் அவனது கூட்டத்தாரையும் தங்க அனுமதிப்பதற்கு குவேனி கூறும் காரணங்கள் அரசகுருவான தாரதத்தனுக்கு சரியெனப்படவில்லை. அவன் பின்வருமாறு சிந்திக்கிறான்.

''....ஓரினத்தைச் சேர்ந்தவர்களை தண்டிப்பதற்காக எங்கிருந்தோ வந்த ஆரியரின் துணையை நாடுவதா? இது எவ்வளவு ஆபத்தானது. அதனை உணரும் நிலையில் குவேனி இப்போது இல்லை. சிங்ஹல விஜயன் காதல் போதையில் அவள் சிக்கிவிட்டாள். அவன் அணைப்பின் சுகத்தை அவள் இழக்கத் தயாரில்லை'' தாரதத்தனின் சிந்தனையோட்டத்தை மேற்கண்டவாறு விபரித்து விட்டு செங்கை ஆழியான் ஆசிரியரது குரலூடு இக் கருத்தை மேலும் உறுதி செய்கிறார்.

''உண்மையும் அதுதான். விஜயனின் காதல் போதையில் குவேனி சிக்கிவிட்டாள்'' குவேனி பின்வருமாறு கூறுகிறாள்.

''ஆரிய குமாரா, எனக்கு நீ வேண்டும். அதற்காக என் அரசையே உனக்குச் சமர்ப்பிப்பேன். என் கூடத்தார் அனைவரும் உனக்குரியவர்கள்''

இவ்வாறு குவேனி செய்த தவறு என்று செங்கை ஆழியான் கூறுவதின் விளைவு பற்றி தாரதத்தன் முன்கூட்டியே கூறிவிடுகிறான். ''இப்பெருந் தாய் இன்று செய்த இத்தவற்றால் நமது இனம் காலம்காலமாக அழியப் போகிறது''. இவ்வாறு பல உதாரணங்களைக் எனது கருத்தை வற்புறுத்துவதற்காக எடுத்துக்காட்ட முடியும். –

சுருக்கமாகச் சொன்னால் பெண் உணர்ச்சிக்கு அடிமையானவள், புத்தியற்றவள், தனது பாலியல்பைக் கட்டுப்படுத்த முடியாதவள், அவள் தண்டணைக்குரியவள் என்ற அடிப்படைக் கருத்தே செங்கை ஆழியானின் கருத்து நிலையாகக் காணப்படுகிறது. குவேனி கொல்லப்படும் விதமும் இதனை உறுதி செய்கிறது. அன்னிய ஆடவனுடன் தொடர்பு கொள்ளும் பெண் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என்ற தீர்ப்பையும் வழங்கி விடுகிறார். மகாவம்சத்தின்படி குவேனியை அடிக்கும் போது அவள் இறக்கிறாள். செங்கை ஆழியான் அதனை மாற்றி கல்லெறிதல் ஆக்குகிறார்.

இத்தகைய பெண் விரோதக் கருத்துகள் மாத்திரமன்றி இன்று காலாவதியாகிப் போன ஆரியர்-திராவிடர் இனங்கள் போன்ற கருத்தின் அடிப்படையிலும் நாவல் அமைந்துள்ளது.

சுருங்கக் கூறினால் பெண்களைப் பற்றிய பழமைவாதப் பிற்போக்குக் கருத்துகளையும் நவீன வரலாற்றாய்வில், எத்தகைய விஞ்ஞானபூர்வமான ஆதாரமும் அற்றது என நிராகரிக்கப்பட்ட இனத் தூய்மை; இன உணர்வுக் கருத்துகளையும் இந் நாவல் எடுத்துக் கூறுகிறது.

இலங்கையின் இனத்துவ முரண்பாட்டு நெருக்கடிக் காலகட்டத்துப் பின்னணியில் இந் நூலைப் படிக்கும் போது இலக்கியம் எவ்வாறு இனத்துவம் தொடர்பான கருத்துகளை உருவாக்கம் செய்ய முடியும் என்பது புலனாகிறது. வரலாறு பற்றிய பழமைவாதக் கருத்துகளையும், பெண் பற்றிய பிற்போக்குக் கருத்துகளையும் கூறும் இந்நூல் சில தமிழ் விமர்சகர்களால் புகழப்பட்டதும், சிறந்த நாவல் எனப் பரிசு பெற்றதும் இலக்கிய உலகில் காணப்படும் தத்துவ வறுமையையும், ஆண் முதன்மை மனோபாவத்தையுமே வெளிப்படுத்துகிறது. ●



## ஜோர்ஜ் கீற்றின் பார்வையிலும்

## பெண்கள்

## நுகர் பண்டங்களா?

சரிநிகர் இதழ் 2? இல் இலங்கை ஓவியர் ஜோர்ச் கீற்றின் மறைவையொட்டிய செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. கீற்றின் ஓவியப்படைப்புக்களில் தனிச்சிறப்புக்கள் பல உண்டு எனவும், அதிலும் பெண்ணின் சித்திரிப்பு தனிச்சுவை படைப்பனவாக உள்ளது எனவும் அக்குறிப்பை எழுதியவர் குறிப்பிட்டிருந்தார். எனக்கு ஓவியம் பற்றி பெரிதாக ஒன்றும் தெரியாது. ஆனால் பல ஓவியர்களின் பெண்ணின் சித்திரிப்பை அவதானித்துள்ளேன். பெண்ணின் சித்திரிப்பு எனும் போது வீரம், தாய்மை, போராட்டம்,அடக்குமுறை என பல அம்சங்கள் இருக்கும் போது எல்லா ஓவியர்களுமே பெண்ணை வெறும் நுகர்பண்டமாக கருதி அவர்களின் மார்பகத்தையும் ஏனைய கவர்ச்சியான பகுதிகளுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்தும் வரைவது ஏன் என்பது விளங்காமலே உள்ளது. இவ்ஓவியங்களுக்கும் ஆணாதிக்க சமுதாயத்திற்கும் ஏதோ தொடர்பு இருப்பது போல் உள்ளது. பெண் விடுதலையில் அக்கறை உள்ளவர்கள். இந்த ஓவியங்கள் பற்றி சரியான பார்வையினை பெற்றுக் கொள்வது அவசியமாகும். எனவே இவ் ஓவியங்கள் பற்றி பெண்விடுதலையில் அக்கறையுடையவர்களின் கருத்துக்களை அறிய ஆவலாக உள்ளேன். எனவே இம்மடலை உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

க.வாசுகி ●

## ஜோர்ஜ் கீற்றின்

## ஓவியங்களில்

## பெண் சித்தரிப்பு

ஓவியத்தில் கோடுகள் பிரதானம் பெறுகின்றன. பெண் உடலமைப்பின் வளைவுகள் ஓவியத்தை சமநிலைப்படுத்தி மெருகூட்டுவதாலோ என்னவோ ஓவியங்களில் பெண் நிர்வாணம் பிரதானம் பெற்றுவிடுகிறது. கூடவே, உலகில் பெரும்பான்மை ஓவியர்கள் ஆண்களாய் இருப்பதால், பெண்ணை உணர்வுச் சித்திரிப்புக்காக அன்றி உடலமைப்புக்காகவே ஓவியங்களில் கொண்டுவரப்படுவது இயல்பாக நடைபெறுகின்றது. கீற்றும் கூட, ஆண்நிலைப்பட்ட இரசனைத்தளத்தில் நின்றே ஓவியங்கள் படைத்துள்ளார்.

நாயகி(nayaki)என்ற தலைப்பிலான தொடர் ஓவியங்களுடனேயே கீற்றின் பெண் சித்திரிப்பு முதன்மை பெறத் தொடங்குகின்றது. இடைவரை வரையப்பட்ட பக்கப் பார்வையுடனான கறுத்த மேனிப் பெண்களில் காணப்படும் கவர்ச்சி இலங்கையின் சிகிரிய ஓவியங்களை நினைவுபடுத்துவனவாகவுள்ளன. மேலும், மேற்கத்தைய நவீன ஓவியர் பிக்காசோவின் பாணியின் தாக்கத்தினையும் இவ் ஓவியங்களில் அவதானிக்க முடிகின்றது. பெண்ணின் தோற்றம் இவ் ஓவியத் தொடரின் அழகியல் உணர்வுடன் தொட்டுக் காட்டப்பட்டிருப்பது இரசிக்கத்தக்க அம்சமாகவே அமைந்துள்ளது.

இதன் பின் கீற்றின் ஈடுபாடு இந்து மத தத்துவங்களில் சென்றதுடன் இராத கிருஷ்ணன் இவரது ஓவியங்களில் பிரதான கருப்பொருளாவது கவனிக்கத்தக்கது. இவ் ஓவியங்கள் காதல் சுவை கொண்டனவாக அமைந்திருந்ததுடன் பெண்ணின் சித்திரிப்பும் பிரதானம் பெறத் தொடங்குகின்றது.

பிற்பட்ட காலங்களில் கீற்றின் ஓவியங்களில் பெண்கள் வெறும் உடல் இரசிப்பிற்காக மாத்திரமே வரையப்பட்டது போன்ற தொனியைத் தருவதாகவே அமைந்துள்ளது. அவற்றினூடே பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருந்தாலும் அவை பெரும்பாலும் பெண உடலமைப்பையே கருத்திற் கொள்ள வைத்த ஓவியங்கள். இது ஓர் ஆண் நிலைப்பட்ட இரசனை என்ற அம்சத்தையே எடுத்துக்காட்டுகிறது என்பதில் இரண்டு கருத்தில்லை.



மாதவி

கலைகளிலும் இலக்கியங்களிலும் பெண்மையை அல்லது பெண்ணிலையைச் சித்திரிப்பது மற்றும் பெண்நிலை உணர்வுகளை ஆண் கலைஞர்களால் எவ்வளவு தூரம் வெற்றிகரமாகச் சித்திரிக்க முடியும்? ஆகிய கேள்விகள் இன்று நவீன பெண்ணிலைவாதச் சிந்தனையாளர்களிடையேயும் கலைஞர்களிடையேயும் இடையறாது விவாதிக்கப்படும் ஒரு பிரச்சினை என்பதையும் இங்கு நினைவூட்டுவது பொருத்தமாகும். ●

# காட்டுக் கந்தோருக்கு பயமா?

உங்கள் 31வது சரிநிகர் படித்ததும் இங்குள்ள நிறையப் பேருக்கு சரியான சந்தோஷம். மட்டக்களப்பில் புதையுண்டு போயிருந்த எத்தனையோ விடயங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருந்தீர்கள். யாருமே இதுவரை உண்மைகளை இப்படி எழுதியதில்லை.

சரிநிகரின் 32வது இதழில் கருணாகரம் எம்.பியின் அறிக்கையைப் படித்ததும் அவரது அறிக்கை எவ்வளவு சுத்தப் பொய் என்றும் இதை எவ்வாறு மட்டக்களப்பு மக்கள் ஜீரணிப்பார்கள் என்பதே எமது கேள்வியானது. தன்னுடைய இனத்தையே மாசுபடுத்துகின்ற இவர்களெல்லாம் எப்படி மனிதர்களாக இருக்க முடியும் என்கிற கேள்வியும் எழுந்தது.

உங்கள் கட்டுரையில் வந்த அனைத்து விடயங்களும் உண்மையிலும் உண்மை.

துரைக்குட்டி ரெலோ உறுப்பினர் தான். இது இங்குள்ள எல்லோருக்கும் தெரியும். கருணாகரமும் ரெலோவும் மட்டுமல்ல எல்லா இயக்கங்களும் செய்கின்ற ஒரு 'திருக்கிலாஸ்' வேலைதான் இது. செய்தது எல்லாம் செய்து போட்டு இவர் எமது உறுப்பினரல்ல; வெளியேற்றப்பட்டவர் இல்லையேல் எம்மால் தேடப்பட்டு வருபவர் என்பார்கள். அதைத்தான் கருணாகரமும் செய்திருக்கிறார். எமது ஊரைப் பொறுத்தவரையில் கூட இதுவரை ஆமியிலிருந்து அதிரடிப்படை வரை எல்லா வகையான படைகளுடனும் சேர்ந்து இருப்பவர்கள் ரெலோக்காரர் மட்டுமே. எமது ஊருக்குள் மட்டும் இதுவரை (2வது சண்டைக்குப் பிறகு) 350க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் புலிகள், முஸ்லீம் ஊர்காவல் படை, ரெலோ, ஆமி சுட்டதால். இதில் 300க்கு மேற்பட்டோர் ரெலோ, ஆமி சுட்டதால் மட்டுமே செத்தவர்கள். (இது பற்றிய முழுத் தகவலும் நீங்கள் வந்தால் நிச்சயம் தருவோம். வீடு வீடாக கூட்டிப் போய்க் காட்டலாம்) ஒரு குடும்பத்தில் (அவர்கள் புலி ஆதரவாளர்களாய் இருந்தவர்கள்) கர்ப்பிணிப் பெண், அண்ணன், தகப்பன் என மூவரையும் ஒரு மாத இடைவெளிக்குள் சுட்டவர்கள். ரெலோ உறுப்பினர் ''கிழவி ரவி'' என்பவர் மண்முனையில் ஆமியுடன் ஜீப்பில் சென்ற போது சக்கை வெடித்துக் கொல்லப்பட்டதற்காக ஆரையம்பதி ஆமி காம்பைச் சுற்றியிருந்த 41இளைஞர்கள் ஒரே இரவில் ஆரையம்பதி மெயின் ரோட்டில் ஆமி காம்புக்கு பக்கத்திலுள்ள சவக்காலையில் ரயர் போட்டு உயிருடன் எரிக்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் புலிகளல்ல. ஊரிலிருந்த அப்பாவிகளே. இதையும் ரெலோ இயக்க ராம், ராபட், அச்சுதன், வெள்ளை, அன்வர் ஆகியோர் ஆமியுடன் சேர்ந்து செய்தார்கள். இது நடக்கும் போது கருணாகரம் மட்டக்களப்பில் தான் நின்றார். இப்போதும் ஆரையம்பதி அதிரடிப்படை முகாமில் கணேஸ், அச்சுதன், அன்வர் உட்பட பலர் இருக்கிறார்கள். இதில் அன்வர் என்பவர் அதிரடிப்படையுடன் வீடுகளுக்குச் சென்று இளைஞர்களையும் யுவதிகளையும் பிடித்து வருவார். கணேஸ், அச்சுதன் இருவரும் பேரம் பேசி வருவார்கள். பின்னர் காசை வாங்கிவிட்டு விட்டுவிடுவார்கள். இது இன்று எங்கள் ஊரில் நடக்கின்ற ஒன்று. தங்கள் இயக்கம் கொள்ளையடித்தது என்று நிரூபித்தால் மன்னிப்புக் கேட்கத் தயார் என்கிறார் கருணாகரம் எம்.பி. ஆறு மாதங்களுக்கு முன்னர் ஆரையம்பதி சவக்காலை வீதியிலுள்ள ஒருவரின் கடைக்கு பட்டப்பகலில் சென்ற ரெலோக்காரர் (அன்வர், அச்சுதன், கணேஸ்) ஒரு லட்சம் பெறுமதியான சாமான்களை மக்கள் பார்த்திருக்கத் தூக்கி வந்தார்கள். இப் பொருட்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ரெலோ இயக்க உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டது. (இக் கடைக்காரர் இதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் புலிகளால் படுவான்கரைக்கு அழைக்கப்பட்டபோது 25,000 கப்பம் கொடுத்தார் என்பதற்காகச் செய்ததாக ரெலோக்காரர் ஊருக்குள் சொன்னார்கள். (இச் செய்தி வீரகேசரியிலும் வந்தது. ஆரையம்பதியில் பட்டப்பகலில் கடையுடைத்து இனந்தெரியாதோரால் அபகரிப்பு என) இதைப் போல் நூற்றுக்கணக்கில்..... இன்றும் இதைத்தான் செய்கிறார்கள்.

காட்டுக் கந்தோர் பற்றி கருணாகரம் எம்.பி குறிப்பிட்டது முழுக்க முழுக்கப் பொய். காட்டுக் கந்தோருக்குப் போனவர்கள் திரும்பி வருவது மிகவும் அரிது. கண்கள் தோண்டியெடுக்கப்பட்டு அனுப்பப்படும் இடமாகவும் முன்பு இதுதான் இருந்தது. குழந்தைப் பிள்ளைகள் கூடக் காட்டுக் கந்தோர் என்றால் கப்சிப் என்றிருக்கும்.

இது பற்றித் தனது அலுவலகத்தில் முறைப்பாடுகள் எதுவும் இதுவரை வரவில்லை என்கிறார். இவரது அலுவலகத்தில் இவரே இருப்பதில்லை. இவரது உறுப்பினர்கள்தான் இருப்பார்கள். அந்தப் பக்கம் போவதற்கே பயம். என்ன புலிக்குத் தகவல் எடுக்க வந்ததா என்று இவர்கள் பிடிப்பார்கள். ஊருக்குள் போனால் ரெலோ ஒப்பீசுக்குப் போனது ஏன் என்று புலிகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். ஏனைய இயக்கக்காரர்களை விட ரெலோக்காரின் அட்டகாசம் தான் இங்கு அதிகம். முன்னரும்தான்; இப்பவும்தான்.

இன்னமும் ரெலோக்காரர்தான் ஆமியுடன் திரிகிறார்கள். களுவாஞ்சிக்குடியில் கருணாகரம் எம்.பியின் சொந்தத் தம்பி மாமா என்பவர் தலைமையில் ஆமியுடன் திரிகிறார்கள். ஆமியைக் கண்டால் கூட இவ்வளவு பயமில்லை. இவர்களைக் கண்டால்தான் நடுக்கம். செட்டிப்பாளையத்தில் ஒரு வீட்டில் இவர்கள் கொள்ளையடித்ததாக பொலிஸில் முறைப்பாடு செய்த அதே ஊரைச் சேர்ந்த ஒருவரும் மற்றுமொருவரும் நடுரோட்டில் வைத்து உலக்கையால் அடித்துக் கொல்லப்பட்டனர். இதனையும் கூட கருணாகரம் எம்.பியின் தம்பி மாமா தான் செய்தார்.

செங்கலடிப்பக்கம் வேல்ட்டோ என்னும் ரெலோக்கார் தலைமையில்தான் அட்டகாசம். இவர்கள் ஆமிக்காரர்களுக்குப் பெண்களைப் பிடித்துக் கொடுக்கிறார்கள்.

மற்றையது, கருணாகரம் எம்.பி இப்படி 31 பேரை சிபாரிசு செய்துள்ளதாக சரிநிகரில் படித்துத்தான் எங்களுக்குத் தெரியும். அவர் தனக்கு மட்டக்களப்பில் ஏற்பட்டு வரும் செல்வாக்கைப் பார்த்து பொறுக்க முடியாதவர்கள் தான் இப்படிக் குற்றம் சாட்டுவதாக எழுதியுள்ளார். உண்மைதான் பிடிபட்டுக் கொண்டிருக்கும் தங்கள் பிள்ளைகளை எடுத்து விடும்படியும் இருக்கிற தங்கள் பிள்ளைகள் புலிகள் என்று ரெலோவால் பிடித்துக் கொடுக்கப்படாமல் இருக்கவும் கருணாகரம் எம்.பிக்கு ஊருக்குள் வரும்போது மாலைகளால் கழுத்து நிரம்புவது உண்மைதான். கருணாகரம் எம்.பியின் பொய் அறிக்கையை வெளிச்சத்துக்குக் காட்ட இக் கடிதத்தையும் சரிநிகரில் பிரசுரியுங்கள்

ஜோ.ச............

**ஆரையம்பதி**

பிற்குறிப்பு:
உங்களையும் காட்டுக் கந்தோருக்கு அனுப்பி விடுவார்கள் என்ற பயத்தினால் கருணாகரம் எம்.பியின் கடிதத்தைப் பிரசுரித்தீர்கள். எங்கள் கடிதம் அப்படி எதுவும் இல்லை. உண்மை தானே. பிரசுரிக்க சிலநேரம் நீங்கள் தயங்கக் கூடும்

## முஸ்லீம்களின்......

லீம் மக்களை ஏமாற்றும் வாய்ப்பு மீண்டும் உருவாகியுள்ளது. எவ்வாறாயினும், இன்றைய முஸ்லீம் சமுதாயம் முன்னை விட அதிகம் விழிப்புணர்வுடையது. பிற்போக்குவாதிகளையும் சந்தர்ப்பவாதிகளையும் எதிர்த்துக் குரல் கொடுக்கும் சக்திகள் முஸ்லீம் இளைஞர்கள மத்தியில் வலுப்பெற்று வருகின்றன. தமது மதத்தையும் வழிபாட்டுச் சுதந்திரத்தையும் தமது தனித்துவத்தையும் உயர்வாகக் கருதும் முஸ்லீம்களை மதத்தின் பேரால் ஏமாற்ற முனையும் அரசியல்வாதிகளையும் சுரண்டல்காரர்களையும் அம் மக்கள் அடையாளங்காண வல்லவர்கள். முஸ்லீம்களது அடிப்படை உரிமைகளையும் தனித்துவத்தையும் சுயநிர்ணயத்தையும் தமிழ்த் தலைமைகள் மதித்து நடப்பதன் மூலமே முஸ்லீம்கள் மத்தியில் உள்ள நல்ல சக்திகளை வளர்த்து இனஒடுக்கலுக்கு எதிரான போராட்டத்தில் அவர்களது ஆதரவைப் பெற முடியும். அதேவேளை, மத அடிப்படையிற் தம்மை ஒரு தேசிய இனமாகக் கருத இலங்கையின் வேறுபட்ட முஸ்லீம் மக்களும் விரும்பினால் அக் கருத்து மதிக்கப்பட்டு, அதன் அடிப்படையிற் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கான ஆலோசனைகள் வரவேற்கப்பட வேண்டும்.

முஸ்லீம் மக்களின் சுயநிர்ணயம் பற்றிய பிரச்சினைகள் மேலும் ஆழமாக விவாதிக்கப்பட வேண்டும். முஸ்லீம்கள் நாட்டின் சகல பகுதிகளிலும் வாழ்ந்தாலும் அவர்களின் சனத்தொகைச் செறிவு வேறுபடுகிறது. அவர்கட்குரிய ஒரு தொடர்ச்சியான நிலப் பிரதேசத்தை வரையறுக்க இயலாமை காரணமாக அவர்கள் இன்னொரு தேசிய இனத்தினர் மத்தியில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களது தேசிய இன உரிமைகட்கும் வதிவிட உரிமை உட்பட பிற அடிப்படை உரிமைகட்கும் தடையாகக் கூடிய அபாயத்தை வடக்கினின்றும் அவர்கள் வெளியேற்றப்பட்டமை எடுத்துக் காட்டியுள்ளது. எனவே முஸ்லீம்கள் ஒரு தேசிய இனமென்ற அடிப்படையில் அவர்களது இருப்பை அவர்களே நிர்ணயிக்கக் கூடிய உத்தரவாதத்தைத் தரவல்ல தீர்வுகட்காக முற்போக்குச் சக்திகள் முன்னின்று போராட வேண்டும்.

சலுகைகளைப் பொறுக்கித் தம்தனிப்பட்ட வசதிகளை பெருக்கும் பழைய தலைமை சோனகர், இஸ்லாம் என்ற பேர்களில் பரந்துபட்ட முஸ்லீம் மக்களது, குறிப்பாகத் தொழிலாளர், கூலி விவசாயிகள், ஏழை விவசாயிகள் போன்ற பகுதியினரது, நலன்களை தொடர்ந்து அலட்சியம் செய்து வந்தது. இன்றைய போராட்ட சூழலில் தலைதூக்கியுள்ள சில புதிய சக்திகள் மத்தியிலும் வெறுமனே மத அடிப்படையில் மட்டுமே முஸ்லீம்களின் உரிமைப்பிரச்சினையை பார்க்கும் தன்மையும் ஒடுக்கப்பட்ட பிற தேசிய இனப்பி

→12

## இலங்கையின்.....

யல் திட்ட உருவாக்கத்துடன் பேரினவாதப் போக்கு தெளிவாக வெளித்தெரிய ஆரம்பிக்கிறது.

இவ்வாறு சுதந்திரத்திற்கு முற்பட்ட அரசியல் சாசனங்களையும் பின்னரான அரசியல் சாசனங்களையும் கூர்ந்து கவனிப்போமாயின் அரசியல் திட்டத்தில் மாற்றங்களும் வளர்ச்சிகளும் ஏற்பட்ட தற்கேற்ப பேரின மேலாதிக்கத்திலும் வளர்ச்சிகளும் மாற்றங்களும் ஏற்பட்டு வந்துள்ளதை அவதானிக்க முடியும். இவ் வளர்ச்சிகளும் மாற்றங்களும் எவ்வாறு ஏற்பட்டன? அரசியல் சாசனம் இனப் பிரச்சினையை எவ்வாறு பிரதிபலிக்கின்றது. இனப்பிரச்சினையில் அரசியல் திட்டத்தின் பாத்திரம் எவ்வாறு உள்ளது என்கிற விடயங்களை எல்லாம் வரலாற்று ரீதியாக ஆய்வுக்கு உட்படுத்துவது இக் கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

அரசியலமைப்புச் சட்டம் வரலாற்று ரீதியாக உருமாறி வந்த வரலாறு என்பது இலங்கை சிறிலங்காவாகிய வரலாறாகும்;பல்லின மக்களின் தாயகமாக விளங்கிய நாடு சிங்கள மக்களுக்கு மட்டுமே உரியதென மாறியதன் வரலாறாகும்; சிறுபான்மை இனமக்களை நாடற்றவர்களாக்கி, அவர்களைச் சிங்கள பெரும்பான்மையினர் ஆதிக்கம் செய்யும் நிலைமை உருவாகியதன் வரலாறாகும்.

ஒரு நாடு என்று இருந்த அன்றைய இலங்கை இரண்டு தேசங்களை -ஒரு ஒடுக்கும் தேசத்தையும் ஒரு ஒடுக்கப்படும் தேசத்தையும்- கொண்ட நாடாக இன்று உருமாறிப் போய் உள்ளது. இந்தக் கைங்கரியத்தை' ஆற்றுவதில் இந்நாட்டில் மாறிமாறி வந்த அரசியலமைப்புகள் எவ்வளவு சிறப்பாக ஆளும் வர்க்க அணியினருக்கு வாய்ப்பாகப் பயன்பட்டு வந்துள்ளது என்பதை இக் கட்டுரைத் தொடர் ஆராயும்.

# அச்சம் மச்சம்

## நீயுமா புரூட்டஸ்?

இலங்கையில் பூரணமான பத்திரிகைச் சுதந்திரம் நிலவுகிறதென்றும், ஐம்பதுக்கு மேற்பட்ட பத்திரிகைகளும்,சஞ்சிகைகளும் வெளிவருகின்றனவென்றும், பத்திரிகையாளர்கள் பூரண சுதந்திரத்துடன் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஒரு முறை பேசியிருந்தார்.

சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் ஏராளமாக வெளிவருகிற ஆபாசப்பத்திரிகைகளையும், தமிழ் நாட்டிலிருந்து தாராளமாக இறக்குமதியாகிற (தாராள இறக்குமதிக் கொள்கைக்குப் பிறகு) 'கிளாமர்' வகையறா அரைநிர்வாணச் (முக்கால் நிர்வாணங்களும் உண்டு) சஞ்சிகைகளை ஆமர்வீதிச் சந்தியிலும், மருதானை முடக்குக் கடைகளிலும் பார்க்கிறவர்களுக்கு பிரதமர் சொன்னதன் உண்மை அர்த்தம் புரியாமலிருக்கப் போவதில்லை.

பிரதமர் சொன்ன பத்திரிகைச் சுதந்திரத்தின் ஒரு முகம் அது.

இன்னொரு முகம் இது:
ஒப்பறேசன் யாழ்தேவி ஆரம்பமானவுடன் படையினர் யாழ்ப்பாணத்திற்கே போய்ச் சேர்ந்து விட்டாற் போல பிரபல ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் எழுதித் தள்ளின. 'இந்த முறை நல்ல உதை கொடுத்தோம்' என்றெழுதி சிங்கள மக்களை மகிழ்ச்சிப் பிரவாகத்தில் ஆழ்த்தியது திவயின.

பிரபாகரனும், சகாக்களும் குண்டடிபட்ட பன்றியைப் போல ஓடித்திரிகிறார்கள் என்று வெற்றி முழக்கமிட்டது இன்னொரு பத்திரிகை.

'வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு' படையினர் கிளாலியிலிருந்து பின்வாங்கி ஆனையிறவு முகாமுக்குள் முடங்கிக் கொண்டிருக்கையில் கிளாலியில் இருநூறு மினிமுகாம்கள் படையினரால் அமைக்கப்பட்டிருப்பதாக எழுதியிருந்தது அரசு தரப்பு பத்திரிகை ஒன்று.

நூற்றுக்கணக்கான படையினரையும், நான்கு கவச வாகனங்களையும், பலலட்சக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியுள்ள ஆயுத உபகரணங்களையும் இழந்து 'தலை தப்பினது தம்பிரான் புண்ணியத்தில்' என்கிறாப் போல ஆனையிறவுக்குத் திரும்பிய செய்தி வெளிவர ஆரம்பித்ததும் எல்லாப் பிரமைகளும் நொருங்கவாரம்பித்தன.

இராணுவத்தால் ஏன் கைப்பற்ற முடியாமற் போனது என்ற கேள்வி எழுந்ததும் அரசினர் இராணுவத்தினர் மீதும், இராணுவத்தினர் கடற்படையினர் மீதும் என்று குற்றச்சாட்டுக்களை மாறிமாறிச் சுமத்த ஆரம்பித்தனர்.

பேரினவாதிகளும், பேரினவாத கோட்பாட்டு நிலைப்பட்ட பத்திரிகைகளும் இவ்வாறுஎழுதுவதுஒன்றும் ஆச்சரியமானதல்ல.

அரசு வழங்குகிற பத்திரிகைச் சுதந்திரத்தின் இந்த இரண்டாவது முகம் எப்போதும் சிறுபான்மையின மக்களுக்கெதிரான உணர்வுகளைத் திட்டமிட்டு வளர்க்கவும், அவர்களுக்கெதிரான ஒடுக்குமுறைக்கான நியாயப்பாட்டைத் தேடவும் தாராளமாக அனுமதித்து வருகிறது என்பது தான் உண்மை.

பேரினவாதத்திற்கு எதிராக, அல்லது அவர்களது பொய்மைகளைக் களைகிறாற் போல எழுதுகிற எவரும் அரசுக்கும் தேசத்திற்கும் விரோதமானவர்களாகவே கொள்ளப்படுவர்.

கிளாலி யுத்தத்தின் தோல்வி குறித்து இக்பால் அத்தாஸ் என்கிற பத்திரிகையாளர் சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் ஒக்டோபர் பத்தாம் திகதி இதழில் ஒரு கட்டுரை வரைந்திருந்தார்.
இக் கட்டுரை பேரினவாத நிலைப்பட்ட சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் யாழ்தேவி ஒப்பிரேசன் குறித்து வழங்கிய தகவல்களின் பொய்மையை வெளிச்சமாக்கியது.

கிளாலியின் 'வெற்றி' குறித்துப் பீற்றிக் கொண்டிருந்த அரசுக்கும் தனது பீற்றல்கள் அம்பலமாவதை பொறுத்துக் கொள்ளமுடியவில்லை.

ஸ்ரீலங்கா அரசின் ராணுவத் தளபதியான லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ன சண்டே ரைம்ஸ் உரிமையாளர் ரஞ்சித் விஜயவர்த்தனாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ''இக்பால் அத்தாஸ் ஈழத்திற்கு ஆதரவானவர். ஒக்டோபர் பத்தாம் திகதிய அவரது கட்டுரை இராணுவத்தினரின் உளநிலையை உடைக்கவே பிரசுரிக்கப்பட்டுள்ளது. எனவே இக்பால் அவர்களை உடனடியாகவே சண்டே ரைம்ஸ் நிறுவனத்திலிருந்து நீக்கி விட வேண்டும். அல்லது அவருக்கு ரயர்தான் போட வேண்டிவரும்'' என கொலை மிரட்டல் விடுத்திருக்கிறார். (ஜே.வி.பி காலத்தில் ரயர் போட்ட அனுபவம் நன்றாய்த்தான் இருக்கிறது!)

பிரதமர் அவர்கள் குறிப்பிட்ட பத்திரிகை சுதந்திரத்தின் லட்சணம் இந்தளவில் தான் இருக்கிறதென்பது ஒரு விடயம். மற்றைய விடயம் இந்தக் கொலை மிரட்டல் தொடர்பாக சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளின் எதிர் விளைவு என்ன என்பது பற்றியது.

சிசில் வைத்தியரட்னவின் கொலை மிரட்டலைக் கண்டித்து சுதந்திரப் பத்திரிகை இயக்கம் வெளியிட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றை தேசத்தைக் காக்கப் போராடும் படையினருக்கு எதிராக செயற்படக்கூடாது என்கிற அபிப்பிராயத்தின் பேரில் திவயினவும், ஐலண்டும் இன்னும் சில 'தேசநலன்' பேணும் பத்திரிகைகளும் வெளியிட மறுத்து விட்டன.

ஆக, இந்தப் பத்திரிகைகள் கோருகிற பத்திரிகைச் சுதந்திரமும் அரசு வழங்குகிற பத்திரிகைச் சுதந்திரமும் எவ்வாறு சிறுபான்மையினருக்கு எதிராக தமக்கிடையே முரணற்று இருக்கின்றது என்பது புரிகிறதல்லவா?

பிரச்சினை அதுவல்ல;
இதுவரை காலமும் தமிழ் மக்களுடைய பிரச்சினை பற்றி அவர்களுடைய நியாயமான போராட்டம் பற்றி அவ்வப்போது எழுதி வந்த 'ராவய' என்கிற மாற்றுப் பத்திரிகை கூட அதன் ஒக்டோபர் பத்தாம் திகதிய ஆசிரிய தலையங்கத்தில் ''அரசு ஏனோதானோ என்று யுத்தம் புரிவதை தவிர்க்க வேண்டும். யுத்தம் செய்வதானால் அதனைச் சரிவரத் திட்டமிட்டுச் செய்ய வேண்டும்'' எனத் தமிழ் மக்களுக்கு எதிரான இந்த யுத்தத்தை ஆதரித்து எழுதியிருக்கிறது.

ராவயவின் இந்த ஆசிரியர் தலையங்கம் இன்று மேலோங்கியுள்ள பேரினவாதக் கூச்சல்களுக்கு மத்தியில் தனது இன சமத்துவக் கொள்கையிலிருந்து அது நிலைதளம்பவாரம்பிக்கிறதா? அல்லது இவ்வளவு கால வரலாறுகளிலிருந்து இந்த இன சமத்துவக் கொள்கை அர்த்தமற்றது என்கிற தனது கண்டுபிடிப்பால் பேரினவாதத்திற்கு ஆதரவான புதிய நிலைப்பாட்டினை எடுத்து விட்டதா? என்கிற கேள்வியை எழுப்பி விடுகிறது. அவ்வாறுதான் என்றால் எங்களிடமிருந்து எழக்கூடிய ஒரேஒரு கேள்வி

நீயுமா புருட்டஸ்? என்பதுதான்!

கி. சந்திரன்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சரிநிகர்

# கடத்தப்பட்டவர்கள் எங்கே?

இப்போது ஜே.வி.பி காலப் பாணியில் சிவிலுடை தரித்த ஆயுதபாணிகளின் கைவரிசையினால் திடீரெனப் பலர் கடத்தப்படுகின்றனர். காணாமல் போகின்றனர். நடுநிசியில் வீடுகளின் மதில்களைப் பாயும் இவர்கள் கேட்டுக் கேள்வியின்றி கதவுகளை உடைத்து கட்டிய சாரத்துடன் தூக்கம் கலையாது நித்திரையில் உள்ளோரைத் தூக்கிச் செல்கின்றனர். இவ்வாறு வருபவர்கள் அரச படையினரின் வாகனங்களிலேயே வருவதாகவும் இலக்கத்தகடுகளைப் பார்க்காத வண்ணம் மின்சார விளக்குகளைப் போடவோ அன்றி வெளியில் வருவதற்கோ அனுமதிப்பதில்லை எனவும் கூறப்படுகின்றது.

1) நாகையா ரவிச்சந்திரன்
2) பத்மநாதன் கோபிநாதன்
3) வடிவேலு பார்த்திபராஜன்
4) நடராஜா மனோரஞ்சித்
5) அருளப்பு யூட் அருள்ராஜா
6)தில்லையம்பலம் உதயராணி
7) நாராயணசிங்கம் இந்திராகாந்தி
8)நாராயணசிங்கம் மகாலஷ்மி

''இன்னும் பலரது பெயர் விபரங்கள் யாருக்குமே தெரியாது இருக்கின்றன. உறவினர்கள் தகவல்களைத் தர அஞ்சுகிறார்கள்'' என்கிறார் ஒரு மனித உரிமை இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர்.

இக் கடத்தல்கள் தொடர்பாக அவ்வப் பகுதி பொலிஸ் நிலையங்கள் கைவிரித்து விட்டன. ஒன்றில் தமக்குத் தெரியாது என்றோ அல்லது தமது சக்திக்கு அப்பாற்பட்டது என்றோ அன்றித் தமது பகுதிக்குள் தமக்குத் தெரியாது கடத்தல்கள் நடைபெற்று விட்டதென ஆத்திரப்பட்டோ விஷயத்தை முடித்து விட்டனர். கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் அவ்வப்பகுதிகளின் ஓ.ஐ.சி, எச்.கியூ, ஏ.எஸ்.பி, எஸ்.பி, டீ.ஐ.ஜி, ஐ.ஜி.பி முதல் பாதுகாப்பு அமைச்சு வரையிலும் கூடவே பாராளுமன்றத்திலும் மனித உரிமைகள் குழுக்களிடமும் முறையிட்டும் எந்தப் பலனும் கிடைக்கவில்லை.

8

இறுதியாக 23.10.93 மாலை இருவரும் 24.10.93 இரவு இருவருமாக ராகமவில் உள்ளூர்ப் பகுதியில் வாகனம் ஒன்றில் கொண்டுவரப்பட்டு தள்ளிவிடப்பட்டிருக்கிறார்கள். தள்ளி விட்ட சில மணி நேரங்களின் பின்பு முன்னைய இருவரும் ராகமப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பின்னைய இருவரும் தள்ளிவிடப்பட்ட பகுதி மக்களினால் நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கடத்திச் செல்லப்பட்டவர்களின் சித்திரவதைக்கு உள்ளான இவர்கள் மீண்டும் மக்களின் அடிஉதைக்கு உள்ளாகி தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இத் தடுப்புக் காவல் சட்டத்திற்கான காரணம் பற்றி அறிய முயன்றபோது தமது பகுதிக்குள் சந்தேகத்திற்கிடமான முறையில் இவ் விளைஞர்கள் காணப்பட்டதற்கான காரணங்கள் அறிய வேண்டும் எனவும் பொதுமக்களால் பிடித்துக் கொடுக்கப்பட்டதனால் விசாரணை முடியும் வரை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் ராகமப் பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தமது பகுதிக்குள் காரணம் இன்றி விடப்பட்டமைக்கான விசாரணையை மேற்கொள்ள வேண்டியது அவசியமானால் பிறிதொரு பகுதிக்குள் இருந்து அப்பகுதி பொலிஸ் நிலைய பொறுப்பாதிகாரிகளுக்கு தெரியாமல் கடத்தப்பட்டது தொடர்பான விசாரணைகள் ஏன் பொலிஸாரால் மேற்கொள்ளப்படவில்லை.

யார் பிடித்தார்கள் எங்கு கொண்டு சென்றார்கள் என விசாரணை மேற்கொண்டால் அரசாங்கத்தின் அனுசரணையோடு திட்டமிட்டு இயங்கும் பிரத்தியேக ஆயுதக் குழுக்கள் பற்றி வெளியே தெரிய வந்து விடும் என்பதால்தான் இவ்விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லையா என அஞ்ச வேண்டியுள்ளது.

உண்மையில் கிழக்கு மாகாணத்தில் முன்பு தமிழ் மக்களுக்கு எதிராக கீழ்த்தரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அரசாங்கத்தின் நற்பெயரை சம்பாதித்துக் கொண்ட சில உயர் அதிகாரிகளின் தலைமையில் உருவாக்கப்பட்ட இரகசிய உளவுப்பிரிவே இந்நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிய வருகிறது.

இந்த உளவுப்பிரிவில் தமிழ் விடுதலை இயக்கங்களில் இருந்து உதிரிகளாகப் புறப்பட்டு கிழக்கில் இராணுவத்துடன் இராணுவமாய் திரிந்த சில முக்கிய பேர்வழிகளும் இருப்பதாக பேசப்படுகிறது. இந்தப் பேர்வழிகளையே இரகசிய கடத்தல்களுக்காக அரசாங்கத்தின் உளவுப்பிரிவு பயன்படுத்துவதாகவும் தெரியவருகிறது. இக்கடத்தல் சம்பவம் அனைத்திலும் சுத்தமான தமிழில் பேசும் ஆயுதபாணிகளும் சம்பந்தப்பட்டு இருப்பதாக மனித உரிமை இயக்கங்களிடம் புகார் செய்யப்பட்டுள்ளன.

இவைபற்றிக் கருத்துத் தெரிவித்த அதிகாரி ஒருவர் இந்நடவடிக்கை மூலம் ஜே.வி.பியை இல்லாது ஒழித்தது போல் குறுகிய காலத்தில் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் புலிகளை ஒழிக்கலாம் என அரசாங்கம் நம்புகிறது. அதற்காக கடத்தப்பட்டு சந்தேகம் என அறியப்படும் நபர்கள் சிலரைத் தெரிவு செய்து தெருக்களில் சுட்டுப் போடுவதற்கும் தயாராக உள்ளது எனத் தெரிய வருகிறது என்றார்.

அண்மையில் திருகோணமலையில் உள்ள ராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு வேண்டிய தமிழர் ஒருவர் வெள்ளை வானில் கடத்தப்பட்டதாகவும் அதன் பின்புதான் அமைச்சர் விழித்துக் கொண்டதுடன் இக்கடத்தலை அம்பலத்திற்கு கொண்டு வரும்படி மேலிடத்தைக் கேட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இராஜாங்க அமைச்சரே ஒப்புக் கொண்ட இந்த வெள்ளை வான் கடத்தல் பேர்வழிகளும் கொழும்பில் ஆட்கடத்தலில் ஈடுபடுவோரும் ஒரே ஆட்களா, இவர்களைப் பற்றி ஏதாவது தெரியுமா என கொழும்பிலுள்ள தமிழ்க்கட்சிகளை விசாரித்த போது அவர்களும் தமக்கு எதுவும் தெரியாதென உதட்டைப் பிதுக்குகிறார்கள்.



நடுநிசி வெறியாட்டத்தின் பின்

## ஒரேபாணியிலான கடத்தல்கள் சில

கடந்த 17ம் திகதி அதிகாலை 3.30ற்கும் 4.45மணிக்குமிடையில் நான்கு இளைஞர்கள் ஒரே பாணியில் கடத்தப்பட்டனர். இவர்கள் வெள்ளவத்தை, கிரிலப்பனை, கொகுவல, கல்கிசைப் பகுதிகளைச் சார்ந்தவர்கள். மூவர் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியினதும் ஒருவர் குருணாகல் பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரியினதும் மாணவர்கள். இவர்களில் ஒரு சிலர் முதல்நாட் சுற்றிவளைப்புகளில் கைதாகி விடுதலை செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தவிரக் கொட்டாஞ்சேனைப் பகுதியில் நான்கு பெண்களும் மட்டக்குளியில் தனியார் கல்வி நிலைய ஆசிரியர் ஒருவரும். வெள்ளவத்தையில் சவூதி அரேபியாவில் இருந்து நாடு திரும்பிய இருவரும் கடத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது.

பொலிஸ் நிலையங்கள். மற்றும் மனித உரிமை இயக்கங்களிலிருந்து திரட்டப்பட்ட தகவல்களின்படி கடத்தப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் பின்வருமாறு:

## முஸ்லீம்களின்......

ரிவுகளினின்று முஸ்லீம்களை தனிமைப்படுத்தும் முனைப்பும் உள்ளன. இத்தகைய சக்திகளிற் சில ஏற்கனவே இனஒடுக்கல் ஆட்சியில் கைப்பாவைகளாகி விட்டன. இவ்வாறான தவறுகட்கு தமிழ்த் தேசியவாத சக்திகளின் நடத்தையும் பங்களித்துள்ளது உண்மையே ஆயினும் இத்தவறுகளால் நன்மை பெறுவோர் நிச்சயமாக முஸ்லீம்கள் அல்ல.

முஸ்லீம்களின் தனித்துவம் பற்றிப் பேசும்போது மத அடிப்படையிலான தனித்துவத்தை மட்டுமன்றிக் கலாசார ரீதியான பிற பண்புகளையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும். அவர்களது மொழியுரிமை அவர்கட்குத் தமிழிற் கற்கவும் தொழில் செய்யவும் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவுமான உரிமையாக மட்டுமே பார்க்கப்பட முடியாது. மிகச் சிறுபான்மையானோராயினும், முஸ்லீம்களில் ஒரு பகுதியினர் சிங்களத்தைத் தமது வீட்டு மொழியாக்கிக் கொண்டுள்ளனர். அவர்களது மொழியுரிமையும் தமிழ் பேசும் முஸ்லீம்களது உரிமையளவுக்கு முக்கியமானது.

முஸ்லீம்கள் செறிவாக வாழும் பிரதேசங்களிலும் பரவலாகச் சிதறியுள்ள பிரதேசங்களிலும் அவர்களது தனித்துவத்தையும் உரிமைகளையும் பேணுவதற்கான தீர்வுகள் பற்றி முஸ்லீம் வெகுஜனங்களின் சார்பாக இயங்கும் புதிய சக்திகள் யோசனைகளை முன்வைப்பதுடன் அவற்றை எவ்வாறு பிற சிறுபான்மை இன உரிமைகளுடன் சேர்த்துக் கருதுவது என்பது பற்றியும் மேலும் கவனமெடுப்பது அவசியம்.

# மணிவாசகம்

### எம்மால் முடியும் தம்பி

''கிளாலியை மட்டுமல்ல புலிகளின் எந்த அதிகாரப் பகுதியையும் இராணுவத்தின் வசம் கொண்டுவர எம்மால் முடியும் என்பதை 'யாழ் தேவி' நடவடிக்கை உறுதிப்படுத்துகிறது.
கிளாலியைக் கைப்பற்றிய விதத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள புலிகளின் எந்த அதிகாரப் பகுதியையும் தாக்குதல் நடத்திக் கைப்பற்ற முடியும், ஆனாலும் அப்பாவி மக்களின் உயிர்களுக்குச் சேதம் ஏற்படும் என்பதால் அது தொடர்பாகச் சிந்தித்துச் செயல்படுகிறோம்.''
**ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி லெப்.ஜென.சிசில் வைத்தியரத்ன -திவயினவில்- 12.10.1993**

### கைப்பற்றினாலும் போதாது

''புலிப் பயங்கரவாதம் ஆட்சி செய்யும் வட-கிழக்குப் பிரதேசங்களைக் கைப்பற்றினால் மட்டும் போதாது, அவர்கள் மீண்டும் அப்பிரதேசங்களில் இருந்து பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட முடியாதபடி பாதுகாப்பு அமைப்புக்களும் பலப்படுத்தப்படவேண்டும்''
**சிங்களப் பாதுகாப்பு அமைப்பினதும்,மஹாபோதி நிறுவனத்தின் தலைவருமான காமனீ ஜயசூரிய -திவயினவில்- 12.10.1993**

### பிரிக்க இடம் கொடோம்

''பாசிசவாத ஏகாதிபத்தியவாதப் பிரபாகரன் ஆட்சித் தீர்வொன்றிற்குத் தயாரெனின் முதலில் அவர் ஆயுதத்தைக் கீழே வைக்க வேண்டும். ஆட்சியை நல்வழிப்படுத்தும் ஜனநாயகத்திற்கு அன்றி நாட்டைப் பிரிப்பதற்கு நாம் இடம் கொடுக்க மாட்டோம். சர்வதேச செஞ்சிலுவையூடாகவும் கிறிஸ்தவ தேவாலயங்களூடாகவும் புலிக் கோஷ்டியினர் செயல்படுகின்றனர். இன்று சிங்கள இனம் முகங் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு இரு பிரதான கட்சிகளிடமும் பதில் இல்லை.''
**கொழும்பு மாவட்ட ம.ஐ.மு.யின் பா.உ.பந்துல குணவர்த்தன -திவயினவில்- 12.10.1993**

### யுத்தத்திற்கு தீர்வு யுத்தமே

''யுத்தத்திற்குத் தீர்வு யுத்தமேயாகும். யுத்தத்திற்கு அரசியல் தலைமையொன்று தேவையென்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம் ஆனாலும் யுத்தத்தை வழிநடத்த வேண்டியதும் அதனைத் திட்டமிட வேண்டியதும், அதற்குக் கட்டளையிட வேண்டியதும் அரசியல்வாதியல்ல; முப்படைகளின் தளபதித் தலைவர்களாகும்''
**கலாநிதி ஜயதிஸ்ஸ த கொஸ்தா -லங்காதீபவில்- 13.10.1993**

### வருட முடிவிற்குள் பயங்கரவாதத்தை ஒழிப்போம்

''இவ்வருட முடிவிற்குள் இராணுவ நடவடிக்கைகளுக்குத் தேவையான யுத்தத் தளபாடங்கள் மிகப் பெருமளவில் கிடைக்கவுள்ளன. இந்த ஆயுதங்களூடாக எமது இராணுவத்தினது இராணுவ நடவடிக்கைகளுக்கு மேலதிக பலம் கிடைக்கும். இந்தப் பயங்கரவாதத்தைத் துடைத்தெறிய எம்மால் முடியும். அவ்வாறு செய்யாது விடக் காரணமேதும் கிடையாது. பயங்கரவாதத்தைத் துடைத்தெறியும் பணியில் எமது இராணுவத்தின் அதிகாரிகளும். ஏனையோரும் மிக உயரிய மட்டத்தில் தத்தமது பணிகளைச் செய்தவாறு உள்ளனர். இதன் பின்னரும் எதிர்காலத்தில் பயங்கரவாதிகள் எமது பலவீனங்களை மீறி இலாபம் பெற இடமளிக்க மாட்டோம்...''
**ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி -லெப்.ஜென. சிசில் வைத்தியரத்ன -திவயினவில்- 13.10.1993**

### பண்டாரநாயக்கா இல்லாத துரதிர்ஷ்டம்

''1956இல் சிங்களத்தை அரச மொழியாக ஆக்காதிருந்திருப்பின் இவ்வளவு தூரம் கூடத் தேசிய மொழி பாதுகாக்கப்பட்டிருக்காது. திரு.பண்டாரநாயக்க அன்று நாட்டிற்குத் தேவையான சிந்தனைகளை முன்வைத்தார். அவை அனைத்தும் இன்று இல்லாதொழிக்கப்பட்டுள்ளன.
திரு.பண்டாரநாயக்க இருந்திருந்தால் உலக வங்கியிடமிருந்து பணம் வரும் வரை பார்த்திருந்திருக்க மாட்டார். இந்நாட்டைப் பாதுகாப்பது பற்றியே நினைப்பார். அவர் இல்லாது போனது நாட்டின் துரதிர்ஷ்டமேயாகும்''
**தேசாபிமான பிக்குகள் முன்னணியின் செயலாளர் பெங்கமுவே நாலக்க தேரர் -லங்காதீபவில்- 15.10.1993**

### ஓநாய் அழுகிறது

''எல்.ரீ.ரீ.ஈ இயக்கம் தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகள் அல்ல. இவ்வியக்கம் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரியும் பயங்கரவாதத்தை ஏற்றுக் கொள்ளச் ஸ்ரீலங்கா அரசு தயாரில்லை''
**ஸ்ரீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ -லங்காதீபவில்- 20.10.1993**

### சிறில் மத்தியூவும் ஜனாதிபதியும்

''நாட்டினதும், இனத்தினதும் வளர்ச்சிக்குப் பாராளுமன்றத்தினுள்ளும், அதன் வெளியேயும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சிறில் மத்தியூ நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்காக அயராது உழைத்தார். அவர் சிங்கள இனத்தினதும்,பௌத்த சமயத்தினதும் பாதுகாப்புக்காக எப்பொழுதும் உழைத்தார்''
**ஸ்ரீலங்கா ஜனாதிபதி டீ.பி.விஜேதுங்க -லங்காதீபவில்- 20.10.1993**

### தேவராஜின் புலம்பல்

''அரசினால் மட்டுமே,வடக்கின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாவிடின் நாம் அனைவரும் இணைந்து தீர்வு காண முயல வேண்டும். தெரிவுக்கழு நியமிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நாம் சந்தோஷப்பட்டது அதற்குத் தீர்வு கிடைக்கும் என்றாகும். ஆனால் அது மிகவும் கவலைக்கிடமான நிலைக்குள்ளானது.''
**இந்துசமய, கலாசார அலுவல்கள் அமைச்சர் பி.பி.தேவராஜ் - திவயினவில் - 23.10.1993**

### வடக்கு பௌத்தர்களுடையதே

தமிழ் மக்களின் தாயகக் கோட்பாடு, யுத்தம் தொடர்ந்தும் நீண்டு செல்ல அடிப்படையாகவுள்ளது. வடக்கில் பௌத்த கலாசாரம் நிலவியதற்காக மிகவும் தெளிவான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன.
**கட்டிடப் பொருட்கள் நிர்மாண அமைச்சர் சந்திரா ரணதுங்க - திவயினவில் - 23.10.1993**

- சீ.சாத்தனார்

சரிநிகர் மாதமிருமுறை இதழ் இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச. பாலகிருஷ்ணன்.

2./10/1993.